விலை ரூபா 20.00


போராடும் மலேசியர்கள் பக்கம் 9


தள்ளி விட்டார் நடத்துநர் பக்கம் 11


மனிதாபிமான போர் பக்கம் 14


இறுதியில் யார்? பக்கம் 24

www.onlineuthayan.com

பக்கங்கள்: 28

# உதயன்

சுடர் 27
கதிர் 94

வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 17 செவ்வாய்க்கிழமை (28/02/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# மஹிந்த – இந்தியத் தூதுவர் அலரி மாளிகையில் பேச்சு

## மேற்குலகின் தலையீடு குறித்து இருவரும் கரிசனை

கொழும்பு, பெப்ரவரி 28
ஐக்கிய நாடுகள் சபையின் ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கெதிராக அமெரிக்கா கொண்டுவரவுள்ள பிரேரணை தொடர்பில் இந்தியா மௌனம் சாதித்து வரும் நிலையில், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தாவுடன் முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பொன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடத்தியிருக்கிறார்.

நேற்றுமுன்தினம் மாலை நீண்டநேரம் அலரிமாளிகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றிருக்கிறது. ஜெனிவாவில் மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவர எத்தனிக்கும் தீர்மானம் மற்றும் அதன் பின்புலம் குறித்து இந்தியத் தூதுவரிடம் விளக்கிய ஜனாதிபதி ராஜபக்ஷ, மேற்குலகத்தின் இந்த முயற்சி போருக்குப் பின்னரான தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் அரசின் செயற்பாடுகளுக்குப் பின்னடைவை ஏற்படுத்துமெனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

"இலங்கையில் அமைதி முயற்சிகள் வெற்றிகாணவும், தேசிய ஒருமைப்பாடு ஏற்படுவதற்கும் இந்தியாவுக்குப் பெரும்பங்குண்டு. பிராந்தியத்தில் ஸ்திரத்தன்மை குறித்து புதுடில்லி கூடுதல் கவனஞ்செலுத்தவேண்டும். இலங்கைக்கெதிரான மேற்குலகத்தின் செயற்பாடுகள் உள்நாட்டில் மட்டுமல்ல, பிராந்தியத்திலும் ஸ்திரமற்ற நிலைமையை ஏற்படுத்துமென்பதால் இந்தியா இது விடயத்தில் கரிசனையுடன் செயற்படவேண்டும்" என ஜனாதிபதி,

27

## அமெரிக்க பிரஜைகளுக்கு ஆபத்து

ஜெனிவாவில் நடைபெறும் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா பிரேரணையை முன்வைக்கவுள்ளது. இதனைக் கண்டித்து இலங்கை முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறத் தொடங்கியுள்ளன. இத்தகைய எதிர்ப்பு நடவடிக்கைகளின் போது தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அமெரிக்கத் தூதரகம் இலங்கையிலுள்ள தனது நாட்டுப் பிரஜைகளைக் கேட்டுள்ளது.

## மீண்டும் விளக்கமறியல்

விடுதலைப் புலிகள் அமைப்பின் மகளிர் அணியின் முன்னாள் தளபதியான தமிழினியின் விளக்கமறியல் மார்ச் 12 ஆம் திகதி வரை மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை கொழும்பு பிரதம நீதிவான் ரஷ்மி சிங்கப்புலி பிறப்பித்துள்ளார். தமிழினியின் கடந்த கால நடவடிக்கைகள் தொடர்பில் தொடர்ந்து விசாரணை நடத்தி வருவதாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்ததையடுத்தே இந்த விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## தமிழக மீனவர்கள் விடுதலை

இலங்கை கடற் பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 22 இராமேஸ்வரத்தை சேர்ந்த தமிழக மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் 22 பேரும் நேற்று மன்னார் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது நீதிவான் இவர்களை விடுவித்து உத்தரவிட்டார். விடுவிக்கப்பட்டவர்கள் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து இந்திய கடற்படையினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

## நியூஸிலாந்தில் இலங்கையர் மரணம்

நியூஸிலாந்தில் உள்ள நோத்கன்ரபெறி என்னும் இடத்தில் இலங்கையர் ஒருவர் எதிர்பாராத வகையில் உயிரிழந்தார். சமீர சந்திரசேன (வயது -28) என்பவர் கடந்த வியாழக்கிழமை வீட்டில் தீப்பற்றி எரிந்த போது மரணமானார். எனினும் இது ஒரு கொலை சம்பவமாக இருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## இலங்கையை நம்பும் பிரிட்டன்

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை செயற்படுத்துமாறு சர்வதேசம் விடுத்துள்ள கோரிக்கையை இலங்கை நிறைவேற்றும் என்று தாம் நம்புவதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது. ஐ.நா. மனித உரிமை பேரவைக் கூட்டத் தொடரில் பிரிட்டன் சார்பில் நேற்று உரையாற்றிய பிரதிநிதி ஜெரமி பிரவுண் இவ்வாறு குறிப்பிட்டார்.

## கறுப்புப்பட்டிப் போராட்டம்

எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்து கண்டி மாநகர சபை ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் நேற்று கறுப்புப் பட்டி அணிந்து சபை நடவடிக்கைகளில் பங்குபற்றினர். ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக மனித உரிமை மீறல் பிரேரணை முன்வைக்கப்படுகின்ற செயலுக்கு அரசே பொறுப்புக் கூற வேண்டும் என கண்டி மாநகர எதிர்கட்சித் தலைவர் நெரஞ்சன விஜேரத்ன தெரிவித்தார்.

# சமாதான காலத்தில் பொதுமக்களை கடத்தியது துணை ஆயுதக் குழுக்களே

## படைகளுக்கும் புலிகளுக்கும் இதில் தொடர்பில்லை என்கிறார் ரஜீவ

யாழ்ப்பாணம், பெப்.23
சமாதான காலத்தில் காணாமற்போனவர்கள் தொடர்பில் இராணுவத்தினருக்கோ, விடுதலைப் புலிகளுக்கோ எதுவித தொடர்பும் இல்லை. மாறாக துணை ஆயுதக் குழுக்களே பழி வாங்கல் நடவடிக்கைகளுக்காக இத்தகைய கடத்தல்களில் ஈடுபட்டன.

இவ்வாறு அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட மீளிணக்கக் கருத்துக்கான குழுவின் ஆலோசகருமான பேராசிரியர் ரஜீவவிஜயசிங்க யாழ்ப்பாணத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் இடம்பெற்ற மீளிணக்கத்துக்கான கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சமய, சமூக, பொருளாதார, கல்வியாளர்கள் மற்றும் பிரதேச செயலர்கள், பொலிஸார் கலந்துகொண்டனர்.

இங்கு மேலும் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் வருமாறு:

யாழ். மாவட்டத்தின் கல்விச் செயற்பாடுகளில் முன்னேற்றம் தேவை மற்றும் இளம் சமுதாயம் தவறான வழிகளால் அழிந்து போகின்றது. பாடசாலை மாணவிகள் இளம் வயதிலேயே கர்ப்பம் தரிக்கின்றனர். தமிழர்களுக்குரிய பண்பாடு, கலாசாரம் என்பன அழிந்து செல்கின்றன என்று சமூக பிரதிநிதிகள்

27

# அனைவரின் சம்மதத்துடனேயே கூட்டமைப்பு முடிவெடுத்தது

## விளக்கமளிக்கிறார் சுமந்திரன்

கொழும்பு, பெப்.28
ஜெனிவா மாநாட்டில் தமிழ்க் கூட்டமைப்பு கலந்து கொள்ளாமை குறித்து கட்சியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப்பட்டது. அப்படி அறிவிக்கப்பட்ட பின்னர் தான் கட்சியின் தீர்மானம் பகிரங்கப்படுத்தப்பட்டது. இது ஓரிருவர் எடுத்த முடிவல்ல.

- இவ்வாறு நேற்று 'உதயனு'க்குக் கருத்துத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன்.

கூட்டமைப்பின் ஜெனிவா பயணம் இடைநிறுத்தப்பட்டது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஜெனிவா மாநாட்டில் கலந்து கொள்ளாமைக்கான காரணங்களை விளக்கி கட்சி விரிவான அறிக்கையொன்றை விடுத்தது.

இந்த அறிக்கை விடப்படுவதற்கு முன்னர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைத் தவிர இதர அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கி நான் அதற்கான அனுமதியையும் பெற்றேன். இந்த விடயம் குறித்து தெரியாது என்று எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவராலும் கூறிவிட முடியாது. இது கட்சி உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டு எடுக்கப்பட்ட முடிவுதான். - என்றார் சுமந்திரன். (ஒ-சி)

# ஜெனிவா பிரேரணை அவசியமற்றது

## மனித உரிமைகள் மாநாட்டில் மஹிந்த சமரசிங்க

கொழும்பு, பெப்.28
இலங்கையில் நடைபெற்ற இறுதிக்கட்டப் போரில் நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து இலங்கை ஏற்கனவே உள்ளக பொறிமுறைகளை பின்பற்றத் தொடங்கியிருக்கிறது. இந்த வேளையில், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுமாறு கோரும் பிரேரணை எதுவும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் கொண்டுவரப்பட வேண்டிய அவசியமே இல்லை என்று இலங்கை மனித உரிமைகள் அமைச்சரும் மனித உரிமைகள் பேரவையின் மாநாட்டுக்காக சென்றுள்ள இலங்கை அரசசார்பான குழுவின் தலைமைப் பிரதி நிதியுமான மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

மாநாட்டில் நேற்று மாலை உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன் போது அவர் மேலும் கூறியதாவது:

மனித உரிமைகள் விடயத்தில் இலங்கை இதுவரை காட்டி வருகின்ற அர்ப்பணிப்பு உணர்வைப் பார்க்கும் போது, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துமாறு கோரும் எந்த விதமான தீர்மானமும் மனித உரிமைகள் பேரவைக்குக் கொண்டுவரப்படுவதற்கான அவசரமும், நியாயமும் கிடையாது. ஏனெனில் இந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை ஏற்கனவே அமுல்படுத்தத் தொடங்கிவிட்டது.

இலங்கையில் இறுதிப் போரின் போது பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்ட

27

# ஜெனிவா பிரேரணைக்கு நாடெங்கும் எதிர்ப்பு அரசின் ஏற்பாட்டில் பெரும் ஆர்ப்பாட்டங்கள்

## அமைச்சர்கள், எம்.பிக்களும் களத்தில்; ஒபாமாவின் கொடும்பாவி எரிப்பு


கிளிநொச்சி ஆர்ப்பாட்டத்தில்

ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு கண்டனம் தெரிவித்தும், அரசுக்கு ஆதரவு தெரிவித்தும் நேற்று நாடளாவிய ரீதியில் பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

நாடளாவிய ரீதியில் ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டாலும், நேற்றுமாலை தலைநகரில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் பெரும் ஆர்ப்பாட்டமாக உலகின் கவனத்தை ஈர்த்தது. அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண, பிரதேச சபை உறுப்பினர்கள் உட்பட பல முக்கியஸ்தர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

அரசசார்பான அமைப்பினர், தொழிற்சங்கவாதிகள், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல்தொகுதி அமைப்பாளர்கள், பேரினவாத அமைப்பினர் ஆகியோர் மக்களை ஒன்றுதிரட்டி வழி நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணிகள் வடக்கு, கிழக்கு, தெற்கு, மலையகம் உட்பட நாட்டின் பல்வேறு பாகங்களிலும் நேற்றுக் காலைமுதல் மாலைவரை தொடர்ச்சியாக இடம் பெற்றன. இதனால் நாட்டு மக்களின்இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. அத்துடன், நாடளாவிய ரீதியில் போக்குவரத்து சேவையும் ஸ்தம்பிதமடைந்தது.

27

# பொலிஸ் பதவி உயர்வின்போது ஒதுக்கப்பட்ட தமிழ் அதிகாரிகள்

**22 பேருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இவர்களில் 21 சிங்களவரும் ஒரு முஸ்லிமும் அடங்குவர்**

கொழும்பு, பெப்.28

பிரதிப் பொலிஸ்மா அதிபர்களாகப் பதவி உயர்வு வழங்குவதில் தமிழ்ப் பொலிஸ் அதிகாரிகள் அனைவரும் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய 58 பேரில் 22 பேருக்குப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. இவர்களுள் 21 பேர் சிங்களவர்கள், ஒருவர் முஸ்லிம் என்பது குறிப்பிடத்தக்கது.

பதவி வழியாகவும் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையிலும் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டிய நிலையில் இருந்த தமிழ் அதிகாரிகள் இதன்போது ஓரங்கட்டப்பட்டுள்ளனர்.

இவ்வாறு புறக்கணிக்கப்பட்ட பொலிஸ் அதிகாரிகளுள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களான கோணேஸ்வரன், அரசரட்ணம், இந்திரன், பிரான்ஸீஸ் ஆகிய தமிழ் அதிகாரிகளும் உள்ளடங்குவர்.

திருகோணேஸ்வரன் பதவி வழியாகவும் நேர்முகப் பரீட்சையின் அடிப்படையிலும் எட்டாவது இடத்திலும், இந்திரன் 17 ஆவது இடத்திலும் , அரசரட்ணம், பிரான்ஸிஸ் ஆகியோர் 22க்கும் 30க்கும் இடைப்பட்ட நிலையிலும் பட்டியலில் இடம்பெற்றிருந்தனர் என்றும் தெரியவந்துள்ளது.

ஆனாலும் இவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படாமல் பட்டியலில் 58 ஆவது இடத்தில் இருந்தவருக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இந்திரன் யாழ்ப்பாணத்தில் பிரதி பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றியவர்.இவர் பதவியேற்ற பின் யாழ்ப்பாணத்தில் பெருமளவிலான குற்றச் செயல்கள் குறைந்திருந்தன.

குறிப்பாக பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடு செய்ய வரும் தமிழ் பெண்களிடம் தொலைபேசி இலக்கங்களைப் பெற்று அவர்களுக்குத் தொல்லை கொடுப்பது போன்ற விடயங்கள் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளன. மேலும் மகளிர் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாகத் தனியான பிரிவை ஏற்படுத்தினார்.

விசேடமாக காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையிலிருந்து தொடர்ச்சியாக நடைபெற்ற இரும்பு கடத்தல் தொடர்பாக பூர்வாங்க விசாரணைக்கு அடித்தளம் இட்டதுடன் சட்டவிரோத மணல் வியாபாரம் என்பனவற்றைத் தடுப்பதிலும் முழு முயற்சியுடன் செயற்பட்டவர்.

அதேவேளை அரசியல் செல்வாக்குடன் நடத்தப்பட்ட விபசார விடுதியை முற்றுகையிட்டு அம்பலப்படுத்தியிருந்தார். மேலும் சிவில் பாதுகாப்பு கடமைகளில் இராணுவத்தினரை ஈடுபடுத்துவதை படிப்படியாக குறைத்து பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நடவடிக்கை எடுத்தவர்.

சில அரசியல் கட்சிகளின் தூண்டுதலினால் நேர்மையான அதிகாரிகள் பழிவாங்கப்படக்கூடாது என மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ங-2)

## ‘இறக்குமதியான’ பதுளை வாசிகள்

யாழ்ப்பாணம், பெப்.28

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள பிரேரணையை எதிர்த்து நேற்று யாழ். நகரில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியில் பதுளையிலிருந்து வந்த மலையகத் தமிழர்களும் மற்றும் சிங்கள மக்களுமே அதிகளவில் கலந்து கொண்டனர்.

கூட்டமாக நின்ற சிலரிடம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் உரையாட முயன்றவேளையில் அவர்கள் பதிலுக்கு சிங்களத்தில் உரையாட முற்பட்டனர். சிலர் மலையகத் தமிழில் பேசினர். குறித்த ஆர்ப்பாட்டத்தில் அதிகளவான மக்கள் கலந்து கொண்டதாகக் கணக்குக் காட்டுவதற்காகவே பணத்தைச் செலவழித்து இந்த பதுளை வாசிகள் இறக்குமதி செய்யப்பட்டதாகத் தெரிய வருகிறது.

இரண்டுக்கும் மேற்பட்ட பஸ்களில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் இவ்வாறு அழைத்து வரப்பட்டதாகவும் அவர்களில் ஐவர் பெண்கள் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ங-288)

## இலங்கையை மறந்த நவநீதம்பிள்ளை

கொழும்பு, பெப்.28

ஜெனிவாவில் நேற்று ஆரம்பமாகிய ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இலங்கை தொடர்பாக எந்தவிதமான கருத்துகளையும் வெளியிடவில்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர் தனது ஆரம்ப உரையில் சிரியாவில் நிலவும் யுத்த நிலைமைகள் குறித்தே கூடிய கவனம் காட் டியதாகத் தெரிவிக்கப்படுகி றது.

ஐ.நாவின் மனித உரிமை பேரவையின் பரிந்துரைகளை உறுப்பு நாடுகள் செயற்படுத்துவதை உறுதிப்படுத்தும் கட்டமைப்பு அவசியம் என்றும் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

நேற்றைய மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கை பற்றிய கருத்துகள் வெளிக்கிளம்பும் என்ற அச்சத்தில் அரசு தரப்பு இருந்ததாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. (ங)

## சந்தேக நபருக்கு பிணை

தனிப்பட்ட பிரச்சினையின் காரணமாக கடந்த செப்ரெம்பர் மாதம் ஒருவரை இரும்பினால் தாக்கிக் கொலை செய்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மூவரில், மூன்றாவது சந்தேக நபர் யாழ்.நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டார். இந்த வழக்கு யாழ்.நீதிமன்றில் நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கடந்த வருடம் செப்ரெம்பர் 5ஆம் திகதி காங்கேசன்துறை வீதி, சுன்னாகத்தில் வைத்து சுரேஸ்குமார் ஹெட்டியராச்சி என்பவரை இரும்பினால் தாக்கிக் கொலை செய்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் அதே இடத்தைச் சேர்ந்த மூவர் அச்சுவேலிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். நாகராசா முத்துலிங்கம், அச்சுதநாயகம் யேந்தகுமார் மற்றும் கந்தசாமிஐயர் சுதாகரன் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் மூன்றாவது சந்தேக நபரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி பிணை விண்ணப்பம் செய்திருந்தார். அதனைப் பரிசீலித்த நீதிபதி 30 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையிலும் சந்தேகநபரைப் பிணையில் செல்ல அனுமதித்தார். (ங -4)

## எப்படி இருந்தவர் இப்படியாகி விட்டாரே...!

2009

2012




நன்றி: லக்பிம.

## சுதந்திரத்துக்காக நாம் உயிரையும் கொடுப்போம்

- பிரதமர் டி.எம்.ஜயரட்ன

தேசிய சுதந்திரத்திற்காக - நாட்டைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இலங்கையர்கள் உயிர்த்தியாகம் செய்வதற்கும் தயார் - என்று பிரதமர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

உயிருக்கு முன்னதாக தாய் நாட்டைப் பாதுகாத்துக் கொள்வதே இலங்கையர்களுக்கு முக்கியமாக அமைந்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கையின் சுயாதீனத்துவம் மற்றும் தேசிய சுதந் திரத்திற்காக இன, மத, கட்சி பேதங்களின்றி அனைவரும் முன்வர வேண்டும் என்றும் அவர் அறைகூவல் விடுத்துள்ளார்.

ஜெனிவாவில் நேற்று ஆரம்பமாகிய ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணைக்கு எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்காக கம்பளை நகரில் நேற்று முற்பகல் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுயாதீன நாடான இலங்கையின் நடவடிக்கைகளில் தலையீடு செய்வதற்கு சில சக்திகள் முயற்சித்து வருகின்றன எனவும் தாய் நாட்டின் சுதந்திரத்திற்கு உயிர்த்தியாகம் செய்யவும் தாம் தயார் எனவும் அவர் தெரி வித்துள்ளார். (சி)

# கூட்டமைப்பின் முடிவை மீள்பரிசீலிக்க வேண்டும்

## கோருகிறார் சுரேஷ் எம்.பி.

**“ஜெனிவா மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு பங்கேற்கவேண்டும் என்பது அநேக உறுப்பினர்களின் முடிவாக இருந்தது. அந்த முடிவு மாற்றியமைக்கப் பட்டமை தொடர்பில் பரிசீலித்துப் பார்க்க வேண்டியதாகவுள்ளது.”**

கொழும்பு, பெப்.28

ஜெனிவா மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்கவேண்டும் என அநேக உறுப்பினர்களின் விருப்பத்துடன் ஏகமனதாக எடுக்கப்பட்ட முடிவு மாற்றியமைக்கப்பட்டமை தொடர்பில் பரிசீலித்துப் பார்க்கவேண்டியுள்ளது.

எனவே, விரைவில் ஒன்றுகூடி இது விடயம் தொடர்பில் நாம் கலந்துரையாடுவோம். அதன்பின்னரே எமது மாற்று நடவடிக்கைகள் என்னவென்பதை அறிவிப்போம்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று ‘உதயனு’க்குத் தெரிவித்தார்.

ஜெனிவா மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரசன்னமாகாது என அதன் தலைவர் உத்தியோகபூர்வமாக விசேட அறிக்கையொன்றை விடுத்து அறிவித்துள்ள நிலையிலேயே, சுரேஷ் இவ்வாறானதொரு கருத்தை வெளியிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப்பீடத்தின் இந்த முடிவால் தமிழ்க் கட்சிகள் அதிர்ச்சியடைந்துள்ளன. தமிழ் மக்களும் பல்வேறு கோணங்களில் கேள்விகளைத் தொடுத்த வண்ணமுள்ளனர்.

நாட்டின் தற்போதைய நிலைமை கலவரத்திற்கு வித்திடலாம் என்ற அச்சத்தின் காரணமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவ்வாறானதொரு முடிவை எடுத்துள்ளது என்று கூறப்பட்டாலும், அதனை நிராகரித்துள்ள முக்கியமான சில தமிழ்க் கட்சிகள் அருமையான சந்தர்ப்பத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நழுவவிட்டுள்ளது என்றும் குற்றஞ்சாட்டியுள்ளன.

அதுமட்டுமின்றி, வடக்கு, கிழக்கு மக்களின் ஆணையைப்பெற்ற கூட்டமைப்புக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளை சர்வதேசத்திடம் எடுத்துக்கூறுவதற்கான கடப்பாடு உள்ளது என்றும் அக்கட்சிகள் சுட்டிக் காட்டுகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப்பீடம் ஜெனிவா தொடர்பில் முடிவெடுக்கும் தறுவாயில் அதன் முக்கியமான உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் இந்தியாவுக்கு சென்றிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், நாடு திரும்பியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரிடம், ஜெனிவா மாநாடு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்துள்ள முடிவு குறித்து கேட்டபோது,

“ஜெனிவா மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்கவேண்டும் என்பதுதான் அநேக உறுப்பினர்களின் முடிவாக இருந்தது. எனினும், அந்த முடிவு மாற்றியமைக்கப்பட்டமை தொடர்பில் பரிசீலித்துப் பார்க்க வேண்டியதாகவுள்ளது.

“விரைவில் எமது உறுப்பினர்களுடனும், தமிழ்க் கட்சிகளுடனும் இது தொடர்பில் கலந்துரையாடுவோம். அத்துடன், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுகூடி தலைமைப் பீடத்துடன் இதுதொடர்பில் பேசுவோம் ”- என்றார்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஜெனிவா தொடர்பான தீர்மானம் மாற்றியமைக்கப்படுவதற்கான சாத்தியம் உள்ளதா எனக் கேட்டபோது,

“கூடி ஆராய்ந்த பின்னர்தான் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் அறியக் கூடியதாகவிருக்கும்” என சுரேஷ் எம்.பி. பதிலளித்தார். (ஒ-சி)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## எதனை நாடி ஆர்ப்பாட்டம்?

*மிகவும் பரபரப்பான சூழ்நிலையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 19ஆவது கூட்டத்தொடர் நேற்று ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ளது. இலங்கைக்கு எதிரான பிரேரணையை நிறைவேற்றும் முயற்சியில் அமெரிக்காவும், தோற்கடிக்கும் முயற்சியில் இலங்கையும் இறுதி நேரம்வரை ஈடுபட்ட போதிலும், பிரேரணை நிறை வேறுவது உறுதியாகி விட்டது.*

*இலங்கை அரசு சர்வதேச அரங்கில் அமெரிக்காவுடனும், கனடா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளுடனும் ராஜதந்திரப் போரில் ஈடுபட்டுள்ள அதேவேளை, இலங்கை மக்களின் ஆதரவு அரசுக்கே உள்ளது என்று சர்வதேசத்துக்குக் காட்டும் முயற்சியாக கொழும்பிலும், வெளியிடங் களிலும் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நேற்று நடத்தியது.*

*கடந்த சில நாள்களாக எரிபொருள்களின் விலை உயர்வுக்கு எதிராகவும், வாழ்க்கைச் செலவு உயர்வுக்கு எதிராகவும் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வந்த கொழும்பு நகர வீதிகள், நேற்று அரச ஆதரவு, அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களினால் நிறைந்திருந்தன.*

*அமெரிக்காவுக்கு எதிரான கோஷங்களை கொழும்பில் நேற்றுத் தாராளமாகக் கேட்கக்கூடியதாக இருந்தன. இலங்கையில் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளைச் சீர்குலைக்க அமெரிக்காவும், மேற்குலக நாடுகளும் திட்டமிட்டுச் செயற்படுகின்றன என்று சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் ஜெனிவாவில் நெற்றிக்கு நேரே குற்றஞ்சாட்டும் நிலை உருவாகியுள்ளது. ஜெனிவா மாநாட்டுக்கு வரும் இலங்கைக்கு எதிரான பிரேரணையை இலங்கை அரசு தனக்கு எதிராக அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் மேற்கொள்ளும் பெரும்சதியாகவே பார்க்கிறது. கடந்த காலங்களில் பான் கீ - மூனுக்கு எதிராகவும், மில்லி பாண்டுக்கு எதிராகவும், சொல்ஹெய்முக்கு எதிராகவும் கோஷமிட்டவர்களுக்கு அமெரிக்காவுக்கு எதிராகவும், மேற்கு நாடுகளுக்கு எதிராகவும் கோஷமிடுவதும், கொடும்பாவிகளை எரிப்பதும் பெரிய காரியம் அல்ல.*

*ஆனால், இத்தகைய ஆர்ப்பாட்டங்களால் பலன் ஏதும் ஏற்படுமா? வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் நொந்து நூலாகிப் போயுள்ள நாட்டு மக்கள், நிவாரணங்களை வழங்குமாறு கோரிக்கை விடுத்து வருகின்றனர். இன்றைய தேவை நிவாரணமே. ஜெனிவா மாநாட்டுத் தீர்மானம், இலங்கையை கொண்டுபோய் சர்வதேச நீதிமன்றில் நிறுத்தப்போவதில்லை. தனது சார்பில் தயாரிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை அமுல்செய்யுமாறே அது கோரப்போகிறது. அதற்கான காலக்கெடுவையும் விதிக்கப்போகிறது.*

*ஜனாதிபதி தமது சுதந்திரதின உரையில், ஆறு வாரங்களில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை அமுல் செய்யப்படும் என்று தெரிவித்திருந்தார். ஆனால், ஆணைக்குழு அறிக்கையை அமுல்செய்யும் நடவடிக்கை யை இன்னும் தொட்டதாகவும் இல்லை.*

*இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது தொடர்பான பேச்சுக்கள் முட்டுக்கட்டை நிலையில் உள்ளன. போர்க் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை செய்வதற்காக இராணுவ நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. எனினும், மனித உரிமை அமைப்புகள் அதனை வெறும் கண்துடைப்பு என்று கூறி நிராகரித்துவிட்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இவை போதாதென்றுஅமைச்சர்களான விமல் வீரவன்ஸவும், சம்பிக்க ரணவக்கவும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை எதிர்க்கட்சியின் அறிக்கை போன்று பார்க்கின்றனர். ஜெனிவா மாநாட்டை ஏதோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநாடு போன்று நினைக்கின்றனர்.*

*நேற்றைய ஆர்ப்பாட்டமும் இவர்களினாலேயே திட்டமிடப்பட்டிருக்கலாம். போர் முடிவடைந்து எதிர்வரும் மே மாதத்துடன் மூன்று வருடங்களாகப் போகின்றன. இதுவரை இலங்கை அரசு என்ன செய்தது என்பதே சர்வதேசத்தின் கேள்வி. கொழும்பில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவது அதற்குப் பதிலாக அமையாது.*

*தான் நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட ஆக்கபூர்வமான, சாத்தியமான சிபார்சுகளையேனும் நடைமுறைப்படுத்துவதற்கு ஆரம்ப நடவடிக்கை எடுக்காது "காலாட்டிக் கஞ்சி வடிக்கும்", காலம் போக்கும் உத்தியை அரசு கைக்கொள்கிறது.*

*மேற்கு நாடுகளும், மனித உரிமைகளிலும் ஜனநாயக உரிமைகளிலும் அக்கறை கொண்ட ஏனைய பிராந்திய நாடுகளும், மேற்கொள்ளும் ஏற்பாடுகளைத் தனக்கு எதிரான நடவடிக்கைகள் என்று மஞ்சள் கண்ணால் பார்க்கும் இலங்கை அரசு -*

*நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு ஊர்வலங்களை நடத்துவதில் காட்டும் அக்கறையை, தன்னகத்தே உற்பவிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை நடைமுறைப் படுத்தும் முயற்சியில் ஈடுபடுத்தலாமே.*

*எதிர்ப்பு ஊர்வலங்கள், பெரும்பான்மையின மக்களுக்கு உணர்ச்சியூட்டி அவர்களைத் தனது பக்கம் இழுத்து வாக்கு வங்கி உடைந்துபோகாமல் காப்பாற்றும் உள்நோக்கம் கொண்டவையே என்பதில் சந்தேகம் இருக்கமுடியாது.*

*அன்றாட அத்தியாவசியப் பாவனைப் பொருள்களின் விலை உயர்வுகளாலும் வாழ்க்கைச் செலவுகளாலும் நொந்து நொடிந்துபோயுள்ள தென்னிலங்கை மக்கள், தனக்கு எதிராகக் கிளர்ந்து எழாமல் தடுப்பதற்கான தனது 'விவேகத்தனத்தையும்' உள்நோக்கத்தையும் அரசு தருணம் பார்த்து அரங்கேற்றுகிறது. மனித உரிமை மீறல்கள் விவகாரத்தில் அதனால் சர்வதேச நாடுகளைப் பின்வாங்கச் செய்ய முடியாத இந்தக் கட்டத்தில் அதற்கு எதுவும் கிடைக்கப் போவதில்லையே!*

# இந்த மாதத்தில் மாத்திரம் குழந்தைகள் படுகொலை 7

கொழும்பு, பெப்.28

கடந்த மாதத்தில் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் பச்சிளம் குழந்தைகள் மற்றும் சிறு குழந்தைகள் என 7 குழந்தைகள் கொலை செய் யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிகின்றனர்.

அப்புத்தளை, மெனிக்கின்னை, திஸ்ஸமஹாராமை, பாதுக்கை, பதுளை, சம்மாந்துறை மற்றும் வாழைச்சேனை பிரதேசங்களில் சிசுக்கள் மற்றும் சிறு குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரான பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அப்புத்தளைப் பிரதேசத்தில் நான்கு வயதுக் குழந்தையொன்று கொலை செய்யப்பட்டுள்ளமை தொடர்பாக குழந்தையின் தாயாரும் அவருடன் தொடர்பு வைத்துள்ள ஆண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதோடு மெனிக் கின்னைப் பிரதேசத்தில் பிறந்த சிசுவொன்று கொலை செய்யப்பட்டுள்ள சம்பவத்தில் அந்தச் சிசுவின் தாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதுக்க பிரதேசத்தில் 4 மாதமேயான பாலகனின் கழுத்தை வெட்டிக் கொலை செய்துள்ள சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

திஸ்ஸமஹாராமை பிரசேத்தில் நான்கு மாத வயதுடைய சிசுவொன்று கொலை செய்யப்பட்ட சம்பவம் சம்பந்தமாக இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பதுளை பிரதேசத்தில், இரண்டரை வயதான குழந்தையொன்றை மரக்குற்றியொன்றினால் நசித்து கொலை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படும் சம்பவம் குறித்து அக் குழந்தையின் தந்தை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்மாந்துறையில் சிசுப் பிறப்பொன்றைச் சிதைத்துள்ள சம்பவமொன்று தொடர்பாகத் தாயும் பிறிதொரு நபரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வாழைச்சேனைப் பிரதேசத்தில் பிறந்த உடனேயே சிசுவொன்றைக் கொலை செய்துள்ளமை தொடர்பாக அந்தக் குழந்தையின் தாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

முறையற்ற உறவுகள் காரணமாகவும் தாய்மாரின் மனோநிலை காரணமாகவும் இந்த விதமான சிசுக் கொலைகள் இடம்பெறுவதாக பொலிஸ் ஆய்வுகள் மூலம் வெளிப்பட்டுள்ளன.

முறையற்ற விதத்தில் பிறக்கும் குழந்தையாக இருப்பினும், அந்தக் குழந்தையின் உயிருக்கு சேதம் விளைவிக்காது, பிள்ளை களைத் தத்தெடுத்து வளர்க்க விரும்பும் ஒருவருக்கோ அல்லது நிறுவனமொன்றிடமோ வழங்கு வதற்கு இத்தகைய தாயோ, தந்தையொருவரோ முன்வருவார் களாயின் இந்தப் பச்சிளம் குழந்தை களின் உயிர்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியுமெனவும் பொலிஸ் துறை சுட்டிக் காட்டுகிறது. (த-22)

## 'அக்ரஹார' மருத்துவர் காப்புறுதி வரையறையில் அரசு மாற்றம்

பண்டத்தரிப்பு, பெப்.28

அரச அலுவலர்களுக்கான 'அக்ரஹார' காப்புறுதித் திட்டத்தின் கீழா மருத்துவக் காப்புறுதியின் கீழ் நலன் பெற உரித்துடையவர்களுக் கான வரையறையில் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது.

திருமணம் முடித்த அரச அலுவலர் ஒருவர் தனக்கும் தனது வாழ்க்கைத் துணைக்கும், 21 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக் குமே இதுவரையில் மருத்துவத் திட் டத்தின் கீழான நலன்களைப் பெறும் நடைமுறை இருந்து வந்தது.

இதற்கு மேலதிகமாக 21 வயதுக்கு மேற்பட்ட திருமணமா காத வேலையற்ற அத்துடன் முழுமையாக அங்கவீனமான பிள்ளைகளுக்கும் மருத்துவக் காப்புறுதி திட்டத்தின கீழான நலன்கள் இனி வருங்காலங்களில் கிடைக்கவுள்ளன.

இதன்படி பலன்களைப் பெற விண்ணப்பிப்போர் பிள்ளையின் மிக அண்மைய நோய்க் கூற்று அறிக் கையை அத்தாட்சிப்படுத்தி சமர்ப் பிப்பதோடு பிள்ளை பற்றிய முழு மையான விவரத்தை கிராம உத்தியோகத்தர் மூலம் உறுதிப் படுத்திச் சமர்ப்பிக்கவேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

(த-130)

## சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான செயலமர்வு

பருத்தித்துறை.பெப்.28

கல்வியமைச்சும், கனேடியன் செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து வடமராட்சி கல்விவலயத்தில் நடத்தும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான செயலமர்வில் பாடசாலை அதிபர்களையும், பாடசாலை வழிகாட்டலுகும் ஆலோசனைக்கும் பொறுப்பாகவுள்ள ஆசிரியர்களையும் தவறாது பங்கு பெற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

புலோலி மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலையில் எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு இந்தச் செயலமர்வு இடம்பெறவுள்ளது.

''பாதுகாப்பாக இருப்போம்'' என்ற தொனிப்பொருளின் சிறுவர்களுக்கான தனித்துவ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இந்தச் செயலமர்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. முதற் கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு மட்டுமே இந்த செயலமர்வுக்கு அழைப்புக்கள் அனுப்பப்பட்டுள்ளன.

(ந-190)

## உரிமை கோரப்படாத மோட்டார் சைக்கிள்கள்

வடமராட்சி பெப்.28

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் உரிமைகோரப்படாத 6 மோட்டார் சைக்கிள்களை அவற்றின் உரிமையாளர்கள், அவற்றுக்குரிய ஆவணங்களை எதிர்வரும் 8ஆம் திக திக்கு முன் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளுமாறு நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்

குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் உரிமை கோரப்படாதவிடத்து மோட்டார் சைக்கிள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என நீதிவான் நீதிமன்ற அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு வழக்குகள் தொடர்பாகப் பருத்தித்துறைப் பொலிஸாரால் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட மோட்டார்சைக்கிளின் உரிமையாளர்கள் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவித்தல்கள் அனுப்பி வைக்கப்பட்டபோதும், இதுவரை யாரும் உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்கவில்லை.

இதனையடுத்து இறுதிச் சந்தர்ப்பமாக எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து மோட்டார் சைக்கிளைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (த-8)

## அரச ஊழியருக்கான சிங்கள வகுப்புகள்

வடமராட்சி, பெப். 28

அரச உத்தியோகத்தர்களுக்கென வடமராட்சியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சிங்கள வகுப்பில் 125 அரச உத்தியோகத்தர்கள் சிங்கள மொழியைப் பயின்று வருகின்றனர்.

அரச கரும மொழிகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிறுவனத்தினால் சனி, ஞாயிறு தினங்களில் நடத்தப் பட்டு வரும் இந்த வகுப்பில் பருத்தித் துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் 40 பேரும், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் 85 பேரும் கற்று வருகின்றனர். (த-8)

## சமுர்த்தி அலுவலருக்கான தடை தாண்டல் பரீட்சை

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை தரம்-I, தரம்-II இற்கு பதவி உயர்த்துவதற்கான வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை ஜூன் மாதத்தில் நடைபெறவுள்ளது.

பரீட்சை திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள, இந்தப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன.

இரு வினாத்தாள்களைக் கொண்டதாக நடைபெறவுள்ள இந்தப் பரீட்சையில் முதலாவது வினாத்தாள் தாபன மற்றும் கணக்கீடு செயற்பாடுகள் பற்றியதாகவும், இரண்டாவது வினாத்தாள் சமுர்த்தி வேலைத்திட்ட அறிவு தொடர்பானதாகவும் அமையவுள்ளது.

## தொழில் வழிகாட்டல் பிரிவு அனைத்துக் கல்வி வலயங்களிலும்

யாழ்ப்பாணம்,பெப்.28

வடமாகாணத்தில் உள்ள அனைத்துக் கல்வி வலயங்களிலும் தொழில் வழிகாட்டல் ஆலோசனைப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. வலயங்களில் உள்ள ஆசிரிய மத்திய நிலையங்களில் இவை இயங்குகின்றது.

வலிகாமம், யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, மன்னார் ஆகிய இடங்களில் உள்ள கல்வி வலயங்களில் இந்த நிலையங்கள் இயங்குவதாகக் கல்வி அபிவிருத் திக்கான பிரதிக்கல்விப் பணிப்பாளர் நல்லூர் பிரதேச செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற சுய தொழில் வாய்ப்பு வழிகாட்டல் கருத் தரங்கில் தெரிவித்தார். (த-7)

# 'பசை' கொடுத்தால் தான் 'விடை' கொடுப்பர் காவலர்

## வவுனியா போக்குவரத்தில் இந்தக் கதி

வவுனியா,பெப்.28

போக்குவரத்தில் ஈடுபடும் வாகன சாரதிகளிடம் பணத்தைக் கறக்கும் கைங்கரியங்களில் வவுனியா போக்குவரத்துப் பொலிஸாரில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர் என்று பலதரப்பினரும் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

வவுனியா மாவட்டத்திலுள்ள பிரதான வீதிகளில் பயணம் செய்யும் வாகனச் சாரதிகளிடம், ஆவணங்களைப் பரிசோதிக்கும் போக்குவரத்துப் பொலிஸார் அவை இல்லாதவர்களிடம் பணம் அபகரிக்கும் செயற்பாட்டில் ஈடுபடுகின்றனராம்.

இதேவேளை, வாகன அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைக் கருத்தில் கொண்டு வாகன அனுமதிப் பத்திரத்தை எதிர்வரும் மார்ச் மாதம் வரை பரிசோதிப்பதை நிறுத்துமாறு

**மதுபோதையில் வாகனம் ஓட்டுவோரை வழிமறித்து, அதனைச் சாட்டாக வைத்து அவர்களை நீதி மன்றம் அனுப்பப்போவதாக மிரட்டுகின்றனர். இதற்குப் பயந்து அவர்கள் லஞ்சமாக பணத்தைக் கொடுக்கின்றார்கள்.**

வடமாகாணப் பிரதம செயலாளர். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்குக் கடிதம் அனுப்பியதுடன் அதன் பிரதிகள் அனைத்தும் பிரதேச செயலகங்களின் அறிவித்தல் பலகையிலும் காட்சிப்படுத்தப் பட்டுள்ளது.

அதற்கு மேலதிகமாக பிரதேச செயலர்களாலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இவ்வறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவற்றைப் பொருட்படுத்தாத போக்குவரத்து பொலிஸார் வாகனச் சாரதிகளை வழிமறித்து வாகன அனுமதிப் பத்திரத்தைப் பரிசோதனை செய்கின்றனர். அது இல்லாதவர்களிடம் பிரதேச செயலகத்தினால் வழங்கப்படும் இலக்கத் துண்டைக் (டோக்கன்) காட்டுமாறும் கேட்கின்றனர். அவை இரண்டும் இல்லாதவர்களிடம் பணம் கறக்கும் முயற்சியில் பொலிஸார் ஈடுபடுவதாக கூறப்படுகிறது.

குறிப்பாக இரவு வேளைகளில் மன்னார் வவுனியா பிரதான வீதிகளில் மோட்டார் சைக்கிள்களில் ரோந்து செல்லும் போக்குவரத்துப் பொலிஸார் அந்த வீதியால் செல்வோரிடம் தம் கைங்கரியங்களைக் காட்டி வருவதாகத் தெரிய வருகிறது .

குறிப்பாக, மதுபோதையில் வாகனம் ஓட்டுவோரை வழிமறித்து அதனைச் சாட்டாக வைத்து அவர்களை நீதி மன்றம் அனுப்பப்போவதாக மிரட்டுகின்றனர். இதற்குப் பயந்து அவர்கள் லஞ்சமாக பணத்தைக் கொடுக்க வேண்டிய நிலைக்கும் தள்ளப் பட்டுள்ளனர் .

இதேவேளை நெளுக்குளம், வேப்பங்குளம் பகுதியைச் சேர்ந்த வாகனச் சாரதி ஒருவர் இவ்வாறு மதுபோதையில் சென்று பொலிஸார் கேட்ட 5ஆயிரம் ரூபா இல்லாததால் தனது மோட்டார் சைக்கிளையே தானமாக வழங்கிய சம்பவம் அண்மையில் இடம் பெற்றதாக இங்குள்ளவர்கள் கூறுகின்றனர். (க-400)

# ஓமந்தை வேப்பங்குளத்தில் 500 வீடுகள்

வவுனியா,பெப்.28

வவுனியா ஓமந்தை வேப்பங்குளம் பகுதியில் 6 மாத காலப்பகுதிக்குள் 500 வீடுகளை முதற்கட்டமாக அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக வவுனியா பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் காணிகள் வழங்கப்பட்ட அரச ஊழியர்களுக்காக நடத்தப்பட்ட கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஏற்கெனவே கடந்த ஆண்டு இலவசமாகக் காணி வழங்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு 5 லட்சம் ரூபா தேசிய சேமிப்பு வங்கியின் மூலம் கடனாக வழங்குவதற்குப் பிரதேச செயலகம் முன்வந்துள்ளது. இதற்கான விண்ணப்பங்களை வவுனியாவில் இயங்கும் தேசிய வீடமைப்பு அதிகார சபையில் பெற்றுக்கொள்ள முடியும்.

வீடுகள் கட்ட முன்வராத அரச ஊழியர்களின் காணிகள் பறிமுதல் செய்யப்பட்டு, ஏற்கனவே விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த வவுனியாவில் கடமையாற்றும் காணிகளற்ற அரச ஊழியர்களுக்குக் காத்திருப்போர் பட்டியல் அடிப்படையில் வழங்கப்படும் எனவும் அரசின் 10 லட்சம் வீடமைக்கும் திட்டத்தில் இது உள்வாங்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

# நலன்புரி நிலையப் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை

வவுனியா,பெப்.28

வவுனியா செட்டிகுளம் ஆனந்த குமாரசாமி நலன்புரி நிலையத்தில் உள்ள பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகின்றது.

போரினால் இடம்பெயர்ந்தவர்களைக் கொண்டு வந்து தங்க வைப்பதற்காக வவுனியா செட்டிகுளம், வீரபுரம் போன்ற பகுதிகளில் பல நலன்புரி முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன. தற்போது மக்கள் மீள்குடியமர்ந்தமையால் பல முகாம்கள் மூடப் பட்டுள்ளன.

முள்ளிவாய்க்கால், அம்பலவன்பொக்கணை, வலைஞர்மடம், இரட்டைவாய்க்கால், புதுமாத்தளன், வட்டுவாகல், புதுக்குடியிருப்பின் சில பகுதிகள் ஆகியவற்றில் இன்னமும் மீள்குடியமர்வு இடம்பெறாததால் ஆனந்த குமாரசாமி நலன்புரி நிலையம், கதிர்காமர் நலன்புரி நிலையம் ஆகிய முகாம்களில் ஏனைய முகாம்களில் இருந்த மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள். இங்குள்ள மாணவர்கள் கல்வி கற்பதற்காக உருவாக்கப்பட்ட பாடசாலைகளிலேயே தற்போது ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகின்றது. ஏனைய வளப் பற்றாக்குறைகளும் காணப்படுகின்றன.

குறிப்பாக ஆனந்தகுமாரசாமி நலன்புரி நிலையத்தில் உள்ள பாடசாலையில் 850 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கற்கின்ற போதிலும்

**விஞ்ஞானம், விவசாயம் போன்ற தொழிநுட்பப் பாடங்கள், அழகியல் பாடங்கள், தமிழ் போன்ற பிரதான்மான பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாத நிலை காணப்படுகின்றது. இதனால் சில மாணவர்கள் பாடசாலை செல்வதிலோ, படிப்பதிலோ நாட்டமற்றவர்களாக இருப்பதாகவும் கூறப்படுகின்றது.**

32 ஆசிரியர்கள் தான் உள்ளனர்.

அதிலும் விஞ்ஞானம், விவசாயம் போன்ற தொழிநுட்பப்பாடங்கள், அழகியல் பாடங்கள், தமிழ் போன்ற பிரதானமான பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாத நிலை காணப்படுகின்றது. இதனால் சில மாணவர்கள் பாடசாலை செல்வதிலோ, படிப்பதிலோ நாட்டமற்றவர்களாக இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

மற்றும் இந்த முகாம்களில் உள்ள பாடசாலையில் தரம் ஒன்று முதல் தரம் 11 வரையான வகுப்புகள் மாத்திரமே நடைபெறுகின்றன. (க-426)

# புலிகள் இல்லாத நிலையிலும் சோதனைச் சாவடி ஏன்?

மன்னார், பெப்.28

மன்னார் நாயாற்று வழிப் பாதையிலுள்ள இராணுவத்தினரின் சோதனைச் சாவடியினால் பொதுமக்கள் அசௌகரியங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் இந்தச் சோதனைச் சாவடி அமைந்துள்ளது.

குறித்த வீதியூடாக விடத்தல்தீவு, சன்னார், ஈச்சலவக்கை, பெரியமடு, கோவில்குளம் ஆகிய கிராமங்களுக்கும், சங்குப்பிட்டி வீதியூடாக யாழ்ப்பாணத்துக்கும் போக்குவரத்துச் சேவைகள் இடம் பெறுகின்றமை வழமையாகும்.

இந்த நிலையில் குறித்த நாயாற்று வழிப் பாதையில் அமைக்கப்பட்டுள்ள இராணுவத்தின் சோதனைச் சாவடியினால், பயணிகள் பல சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

குறித்த சோதனைச் சாவடிக்கு முன்பாகவும் வீதியொன்று காணப்படுகின்றது. குறித்த வீதியினால் அடம்பன், ஆண்டாள்குளம், உயிலங்குளம் போன்ற மீன் குடியமர்வுக் கிராமங்களுக்கும் செல்ல முடியும்.

இந்தச் சோதனைச் சாவடியில் கெடுபிடிகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும் மக்கள் பல மணி நேரம் குறித்த இடத்தில் காத்திருந்து செல்லவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது நாட்டில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுள்ளதாகவும், மக்கள் சுதந்திரமாக வாழ்வதாகவும் அரசு தெரிவிக்கின்ற போதும், மக்கள் சுதந்திரமாக பயணிப்பதற்கும், நடமாடுவதற்கும் இயலாத அளவுக்கு பாதுகாப்புக் கெடுபிடிகள் தற்போது அதிகரித்துள்ளதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மாந்தை மேற்கில் உள்ள உரிய அரச அதிகாரிகள் இந்த விடயத்தில் தொடர்ந்தும் அலட்சியத்துடன் செயற்படுவதோடு காணி அபகரிப்பு, மக்களை வெளியேற்றுதல் போன்ற செயற்பாடுகளிலேயே அதிகம் அக்கறை செலுத்தி வருவதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (க-12)



முரசுமோட்டை முருகானந்தா ஆரம்ப வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டியின் வேடம் புனைதல் நிகழ்வில் கருணாமூர்த்தி அர்சனா என்ற மாணவி உதயன் பத்திரிகையாகத் தன்னை வேடம் புனைந்துள்ளார். (6)

# துறைமுக வசதிகள் இல்லை முல்லை மீனவர் சிரமம்

முல்லைத்தீவு,பெப்.28

முல்லைத்தீவின் கரையோரப் பகுதிகளில் மீன்பிடித் துறைமுக வசதிகள் இல்லாததால் கடற்றொழிலாளர்கள் தாம் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவுக் கடற்பரப்பு ஆழம் நிறைந்ததாகக் காணப்படுகின்றது. இதனால் பெரிய வள்ளங்களைப் பயன்படுத்த வேண்டிய தேவையுள்ளது. ஆனால் இவற்றை நிறுத்துவதற்குரிய துறைமுக வசதிகள் இல்லாத நிலையே இங்கு காணப்படுகின்றது. மேலும் பெரிய மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்த முடியாத நிலையுமுள்ளது.

போரினால் மிகப் பெரிய

**முல்லைத்தீவுக் கடற்பரப்பு ஆழம் நிறைந்ததாகக் காணப்படுகின்றது.**

அவலங்களைச் சந்தித்த முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் மீளக்குடியமர்ந்து வருடக் கணக்கான போதிலும் தமது தொழிலைத் திருப்திகரமான முறையில் மேற்கொள்ள முடியாத நிலையிலேயே உள்ளனர்.

எனவே துறைமுகம் அமைய வேண்டுமென்ற இவர்களின் கோரிக்கையை நிறைவு செய்ய வேண்டுமெனப் பலரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க)

# சிறுபோக நெற்செய்கை தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சியில்

கிளிநொச்சி,பெப்.28

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள சிறுபோக நெற் செய்கை தொடர்பான ஆரம்பக் கட்டக் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் கடந்த 22 ஆம் திகதி முற்பகல் 10.30 மணியளவில் கிளிநொச்சி நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் இரணைமடுக் குளத்தின் கீழ் உள்ள 22 உபதிட்டக் குழுக்களின் பிரதிநிதிகள், விவசாயிகள் எனப் பலர்

**கடந்தாண்டு சிறுபோகச் செய்கைக்கு 10 ஆயிரம் ஏக்கரெனத் தீர்மானிக்கப்பட்ட நிலையில் சுமார் 16 ஆயிரம் ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. இதனால் நீர்விநியோகத்தில் சிரமங்கள் ஏற்பட்டதுடன் பயிர்செய்கைகளும் அழிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.**

கலந்து கொண்டிருந்தனர்.

இவ்வாண்டு இரணைமடுக்குளத்தின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்த நிலையில் சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்ளக்கூடிய வகையில் நீர்ப்பாசன வாய்க்கால்களைத் தெரிவு செய்வது தொடர்பாக இங்கு ஆராயப்பட்டது.

மேலும் குளத்து நீர் விரயமாகும் இடங்களில் செய்கைகளுக்கு அனுமதிப்பதில்லை எனவும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

கடந்தாண்டு சிறுபோகச் செய்கைக்கு 10 ஆயிரம் ஏக்கரெனத் தீர்மானிக்கப்பட்ட நிலையில் சுமார் 16 ஆயிரம் ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இதனால் நீர்விநியோகத்தில் சிரமங்கள் ஏற்பட்டதுடன் பயிர்ச்செய்கைகளும் அழிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலை ஏற்படாத வகையில் இவ்வாண்டு செய்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற அடிப்படையில் தீர்மானங்கள் எடுக்கும் வகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. (க-6)

# வறுமையான குடும்பங்கள் 52,000

யாழ்ப்பாணம்,பெப்.28

யாழ்.மாவட்டத்தில் 52 ஆயிரம் குடும்பங்கள் வறுமைக் கோட்டுக்குட்பட்டவையாக இருக்கின்றன. இந்தக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குப் பாடுபட்டு வருகின்றோம். இதற்கான வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் போது மிகச் சிறந்த வினைத்திறனான வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட அரசஅதிபர்திருமதி.இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.



தொழில் உறவுகள், மனித வலு அமைச்சின் ஏற்பாட்டில் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல் தொடர்பான பயிற்சிச் செயலமர்வு யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இந்தச் செயலமர்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:-

யாழ்.மாவட்டத்தில் 58 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான அபிவிருத்திப் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இதில் வீதி அபிவிருத்திப் பணிகள், ரயில் பாதைப் புனரமைப்பு பணிகள், குடிதண்ணீர் விநியோகம் என்பன மிக முக்கியமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகள் உரிய வகையில் மக்களைச் சென்றடைய வேண்டும். வறுமைப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும். அதற்கு வினைத்திறனுடன் எமது செயற்பாடுகள் அமைய வேண்டும். எமது வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். எமது ஆற்றலையும் வினைத்திறனையும் விருத்தி செய்வதன் மூலம் அபிவிருத்தியில் சிறந்த நிலையை அடைய முடியும் என்றார்.

இந்த நிகழ்வில் தொழில் உறவுகள், மனித வலு அமைச்சின் செயலாளர் லலித் கன்னங்கரா, யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் பிரதேச செயலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-5)

# நகர சபை மைதானம் மீண்டும் பாவனைக்கு

தென்மராட்சி, பெப்.28

சாவகச்சேரி நகரசபைத் தவிசாளரின் முயற்சியால் மட்டுவில் வளர்மதி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருந்த தென்மராட்சிப் பிரதேச செயலகப் பெரு விளையாட்டுக்கள் சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானத்துக்கு மாற்றப்பட்டு நேற்று முன்தினம் போட்டிகள் நடத்தப்பட்டன.

இந்த விளையாட்டு மைதானம் 1996 ஆம் ஆண்டு தொடக்கம் அதி உயர் பாதுகாப்பு வலயமாக இருந்ததால் பிரதேச விளையாட்டுப் போட்டிகளும் தென்மராட்சி கல்வி வலயப் போட்டிகளும் பிரதேசத்திலுள்ள பல்வேறு பாடசாலை மைதானங்களில் நடத்தப்பட்டுப் பின்னர் பெரு விளையாட்டுக்கள், பிரதேச செயலகத்தின் விளையாட்டுக்கள், மட்டுவில் வளர்மதி விளையாட்டு மைதானத்திலும் தென்மராட்சிக் கல்வி வலய விளையாட்டுப் போட்டிகள் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா ம.வி. மைதானத்திலும் நடைபெற்று வந்தன.

சாவகச்சேரி நகர சபை விளையாட்டு மைதானம் கடந்த 2008 ஆம் ஆண்டு பல லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட போதிலும் இங்கு விளையாட்டுக்கள் நடத்தப்படுவதில்லை.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் இந்த வருடத்துக்குரிய பெரு விளையாட்டுக்கள் கடந்த வாரம் மட்டுவிலில் ஆரம்பமாகியதையடுத்து நகர சபைத் தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை தென்மராட்சிப் பிரதேச செயலர் மற்றும் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் ஆகியோருடன் கலந்துரையாடியதையடுத்து நேற்று முன்தினம் மட்டுவில் வளர்மதி மைதானத்தில் நடைபெறவிருந்த பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடைலான உதைபந்தாட்டப் போட்டிகள் சாவகச்சேரி பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின.

உதைபந்தாட்டப் போட்டியை நகரசபைத் தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை ஆரம்பித்து வைத்தார். (த-9)

# அரியாலை மீனவருக்கு இரண்டு மண்டபங்கள்

யாழ்ப்பாணம், பெப்.28

அரியாலை தென்கிழக்கு மணியந்தோட்டம் ஜே/89, அரியாலை ஜே/90 முனங்கு கிராமம் பகுதிகளின் மீனவர்களுக்கான இரண்டு மண்டபங்களை அமைக்கக் காணி தேவைப்படுவதாகவும் குறிப்பிட்ட பகுதிகளில் காணி நன்கொடையாக வழங்க முன்வர விரும்பும் பட்சத்தில் நல்லூர் பிரதேச செயலருடன் தொடர்பு கொள்ளுமாறும் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

மண்டபங்களுக்கான காணிகளை வழங்கக் கோரிக்கை

மணியந்தோட்டம் கிராமத்தில் கூறு விலை நிலையமும் முனங்கு கிராமத்தில் மீனவர்கள் தங்குமிடம் அமைக்கவும் கடற்றொழில் திணைக்களம் தலா 15 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. காணிகள் இன்மையால் கட்டடப் பணிகள் தாமதமடைகின்றன.

எனவே காணிகளை வழங்கி உதவ முன்வருவோர் தொடர்பு கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் மா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (த-7)

# பன்றிக்கு வெடி தயாரித்த இளைஞருக்கு நேர்ந்த கதி

*யாழ்ப்பாணம், பெப்.28*

*பன்றிக்கு வைப்பதற்காக வெடி தயாரித்த இளைஞரொருவர் அது தவறுதலாக வெடித்ததில் ஒரு கண்ணையும் கையையும் பரிதாபமாக இழந்துள்ளார்.*

*அச்சுவேலி பலாலியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை பிரதீபன் (வயது- 33) என்ற இளைஞரே இவ்வாறு பாதிக்கப்பட்டவராவார்.*

*இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:*

*இந்த மாதம் 24 ஆம் திகதி தோட்டத்துக்குள் புகுந்து அட்டகாசம் புரிந்து வந்த பன்றிக்கு வெடி வைப்பதற்காகச் சீன வெடியைப் பயன்படுத்தி இந்த இளைஞர் வெடி தயாரிக்க முயற்சி செய்துள்ளார். இதன் போது அது தவறுதலாக வெடித்தமையால் கடும் காயங்களுக்கு உள்ளான இவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். சிகிச்சையின்போது அவரது வலது கண் மற்றும் வலது கையின் முழங்கைக்கு கீழான பகுதி என்பன அகற்றப்பட்டுள்ளன.*

*இவ்வாறான தவறுதலான வெடி விபத்துச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டு யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாக யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (த-5)*

# வேலணையில் 50 பேருக்கு மண்ணெண்ணெய் முத்திரை

யாழ்ப்பாணம், பெப்.28

வேலணை பிரதேச செயலகம் ஊடாக சமுர்த்திப் பயனாளிகள் 50 பேருக்கு மண்ணெண்ணெய்க்கான நிவாரண முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன.

மின் வசதிகளற்ற கிராம மக்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இந்த நிவாரண முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன.

வேலணைப் பிரதேச எல்லைக்குட்பட்ட புங்குடுதீவு, நயினாதீவு, மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதிகளில் உள்ள இரண்டாயிரத்து 520 பயனாளிகள் மண்ணெண்ணெய்க்கான நிவாரண முத்திரைகளைப் பெறத் தகுதியடைவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-7)

# பணம் செலுத்தியும் இதுவரை வீடுகளுக்கான உறுதி இல்லை

## தாராக்குளம் மக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், பெப்.28

யாழ்.நகரில் உள்ள தாராக்குளம் குடியிருப்புத் திட்டத்திலுள்ள மக்கள் சட்டதிட்டங்களுக்கு அமைவாகப் பணம் செலுத்தியும் குடியிருப்புக்கான உறுதி கிடைக்கவில்லை எனக் குற்றஞ்சாட்டியுள்ள னர்.

யாழ்.மாநகர சபை எதிர்க்கட்சி உறுப்பினர் அ.பரஞ்சோதி தாராக்குளம் மக்களை நேற்று நேரில் சென்று சந்தித்துக் கலந்துரையாடிய போதே மக்கள் இதனைத் தெரிவித்தனர்.

யாழ்.நகர் ஜே/73 கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட தாராக்குளம் குடியிருப்புத் திட்டத்தில் தற்போது 39 குடும்பங்கள் அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்து வருகின்றன. அந்த மக்களின் குறைநிறைகளை மாநகர சபை உறுப்பினர் கேட்டறிந்தபோது அந்த மக்கள் தெரிவித்தவை வருமாறு:

கடந்த 83 ஆம் ஆண்டிலிருந்து இந்த குடியிருப்பில் நாங்கள் வசித்து வருகின்றோம். இடம் பெயர்ந்து சென்ற நாம் 2009 ஆம் ஆண்டின் பின்னர் மீளக்குடியமர்ந்தோம். எமது குடியிருப்பிலுள்ள தளபாடங்கள் அனைத்தும் களவாடப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக சோலைவரி செலுத்தி வருகிறோம். எனினும் எமக்கான உதவிகள் எதுவும் கிடைக்கவில்லை.

16 குடும்பங்கள் வீட்டு உறுதிக்கான பணம் செலுத்தியுள்ளன. எனினும் வீட்டு உறுதிப் பத்திரம் இதுவரை கிடைக்கவில்லை. அவை கிடைக்காததன் காரணமாக ஏனைய உதவித் திட்டங்களைப் பெற முடியாத நிலை உள்ளது. எம்மை நாவற்குழியில் சென்று குடியமருமாறு அதிகாரிகள் சிலர் கூறுகின்றனர்.

அரச அதிகாரிகள் பலருக்கு எமது துயர வாழ்வு புரியவில்லை.

மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் உதவு தொகை இன்னமும் எமக்குக் கிடைக்கவில்லை- என்றனர்.

தாராக்குளம் மக்களுக்கான காணி உறுதிகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பு வீடமைப்பு அதிகார சபைக்கு உள்ளது எனத் தெரிவித்தார் மாநகர சபை உறுப்பினர் பரஞ்சோதி.

இந்த விடயம் தொடர்பாக வீடமைப்பு அதிகார சபையின் யாழ்.மாவட்ட முகாமையாளர் நோயல் ஜெயச்சந்திரனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது:

தாராக்குளம் மக்களுக்கு உறுதி பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். அதனைப் பெற்றுக் கொடுப்பது எனது பொறுப்பு. அந்த மக்களை வேறு இடத்துக்குச் சென்று குடியிருக்க நாம் சொல்லவில்லை என்றார். (த-3)

# கவனிப்பாரற்ற மதகு



யாழ்ப்பாணம், பெப்.28

செம்மணி வீதியிலுள்ள உடைந்த மதகு நீண்ட காலமாகத் திருத்தப்படாமையால் இந்த வீதியால் செல்வோர் தினமும் பெரும் அவலங்களையும் இடர்களையும் சந்தித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மதகு கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக உடைந்துள்ள போதும் அது இதுவரை திருத்தப்படவில்லை. ஆனால் கடந்த வருடம் இந்த வீதியை மட்டும் 'காப்பெற்' வீதியாக வீதி அபிவிருத்தி அதிகார சபை புனரமைப்புச் செய்தது.

மதகைச் சுற்றி வெற்றுத் தார் பீப்பாக்கள் மட்டும் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டுள்ளன.

இதனால் இந்த வீதியால் செல்லும் வாகனங்களும் பாதசாரிகளும் விபத்துக்குள்ளாகி வருகின்றனர். எனினும் இந்த மதகைத் திருத்த சம்பந்தப்பட்டோர் இதுவரை காலமும் எதுவித நடவடிக்கையும் சம்பந்தப்பட்டோர் எடுக்கவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே இந்த விடயத்தில் சம்பந்தபட்டோர் உடனடியாகக் கவனமெடுத்து இந்த மதகைப் புனரமைத்து தருவதுடன் பயணிகளின் போக்குவரத்தையும் இலகுவாக்க வேண்டும் எனவும் பலராலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (த-288)

# அரியாலை கிழக்கு முத்து விநாயகர் ஆலயம் புனரமைப்பு

கொழும்புத்துறை,பெப்.28

அரியாலை கிழக்கு ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயம் 17 வருடங்களின் பின்னர் புனரமைப்புச் செய்யப்பட்டு, வழிபாடுகளுக்குத் திறந்து விடப்பட்டுள்ளது.

இப்பகுதியில் இருந்து 1995 ஆம் ஆண்டு மக்கள் இடம்பெயர்ந்ததையடுத்து, ஆலயம் சேதமடைந்து பூசைகளின்றி இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது.

தற்போது இப்பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்ந்து விவசாயம், மீன்பிடித் தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதையடுத்து ஆலயம் புனரமைப்புச் செய்யப்பட்டு மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

இன்று காலை 8.30 மணிக்கு 108 சங்காபிஷேகத் திருவிழாவும் , மாலை 4 மணிக்கு வசந்த மண்டப பூசையும் உள்வீதி வெளிவீதி உலாவும் நடைபெறுமென ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (த-135)

# யாழ். இளைஞர், யுவதிகளுக்கு தகுதிக்கு ஏற்ப வேலைவாய்ப்பு

## உற்பத்தி மேம்பாட்டு அமைச்சின் செயலர் கூறுகிறார்



அமைச்சின் செயலாளர் லலித் கன்னங்கரா, பிரதேச செயலாளர் ப.செந்தில்நந்தனன் மற்றும் அதிகாரிகள்.

யாழ்ப்பாணம், பெப்.28

யாழ்.மாவட்டத்தில் உள்ள இளைஞர்கள், யுவதிகளுக்கு அவரவர் தகுதிக்கு ஏற்ப தொழில் வாய்ப்பு வழங்குவதற்கு உற்பத்தித் திறன் மேம்பாட்டு அமைச்சர் லக்ஸ்மன் செனவிரத்ன நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார் என அமைச்சின் செயலாளர் லலித் கன்னங்கரா தெரிவித்தார்.

சுயதொழில் வாய்ப்பு, தொழில் வழிகாட்டல் தொடர்பாக நல்லூர் பிரதே செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று திங்கள் கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் செயலாளர் கன்னரங்கரா பேசும் போது மேலும் கூறியதாவது:

சிறந்த தொழில் பயிற்சிகளை வழங்கி இளைஞர் யுவதிகள், தகுதியான வேலைகளைப் பெற்றுக்கொள்ள வாய்ப்புக்கள் வழங்குவதன் மூலம் தொழில்துறை விருத்தியும் பொருளாதார வளங்களும் கிடைக்கும். இளைஞர்கள் படித்துவிட்டு வேலைவாய்ப்புக்கள் இன்றி இருக்கும் நிலைமைகளை மாற்றி வேலைவாய்ப் புக்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வழிகாட்டல்கள் தேவை. இன்று தனியார் துறையைச் சேர்ந்த பலர் இங்கே உங்களுக்கு உதவும் நோக்குடன் சமுகமளித்துள்ளனர். தொழில் வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கென பல்வேறு திட்டங்களை அமைச்சு நடைமுறைப் படுத்தவுள்ளது. அதன் ஒரு கட்டமாக இங்கே இந்த நிகழ்வு இடம்பெறு கின்றது.

மாவட்ட மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் இந்த நிகழ்வு இடம்பெறுகின்றது. பிரதேச செயலகங்களிலும் இதுபோன்ற நிகழ்வுகள் இடம்பெறும்.

உற்பத்தித் திறன் மேம்பாட்டுப் பிரிவு அரச பாடசாலைகள் எல்லாவற்றிலும் அமைக்கப்படும். அதற்கான நிதி ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன - என்றார். (த-7)

# பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர் 6 மாதங்களின் பின் சிக்கினார்

யாழ்ப்பாணம், பெப்.28

வவுனியா நீதிமன்றால் தாபரிப்பு வழக்கில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த சந்தேக நபர் 6 மாதங்களின் பின்னர் உரும்பிராயில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் பொலிஸார் சந்தேகநபரை முன்னிலைப் படுத்தினர். அவரை வவுனியா நீதிமன்றில் முற்படுத்தி அது தொடர்பான அறிக்கையை யாழ். நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு யாழ். நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

உரும்பிராயைச் சேர்ந்த சந்தேகநபர் வவுனியாவில் உள்ள பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். பின்னர் அவரை விட்டு விட்டுச் சொந்த இடத்துக்கு வந்து விட்டார். இது தொடர்பாக வவுனியா நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. சந்தேக நபர் மன்றில் முன்னிலையாகியிருக்காததனால் அவருக்கு மன்று பிடியாணை பிறப்பித்திருந்தது. (த-4)

# பருத்தித்துறைப் பொலிஸார் நடத்திய நடமாடும் சேவை

வடமராட்சி,பெப்.28

பருத்தித்துறைப் பொலிஸார் நடத்திய நடமாடும் சேவையில் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் பொது மக்கள் இரத்ததானம் செய்தனர்.

கடந்த சனிக்கிழமை பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் பருத்தித்துறை பொலிஸ் தலைமை இன்ஸ்பெக்டர் எம். அபயக்கோன் தலைமையில் நடைபெற்ற இந்த சேவையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை. யாழ். போதனா வைத்தியசாலை ஆகியவற்றின் இரத்த வங்கியினர் இணைந்து இரத்ததானத்தைப் பெற்றுக் கொண்டனர்.

பொது மக்களுக்கான சேவைகளாகப் பிறப்பு இறப்பு பதிவுகள், தொலைந்து போன அடையாள அட்டை பெறுதல் காணிப்பிரச்சினைகள் என்பன தொடர்பாகத் தீர்வுகள் காணப்பட்டதுடன் வைத்திய ஆலோசனைகளும் வழங்கப் பட்டன. (த-8)

**பிறப்பு இறப்பு பதிவுகள், தொலைந்து போன அடையாள அட்டை பெறுதல் காணிப்பிரச்சினைகள் என்பன தொடர்பாகத் தீர்வுகள் வழங்கப்பட்டன**

# கல் பரவி ஒரு மாதம் செப்பனிடப்படாத வீதி

கட்டுடை அரசடி விநாயகர் வீதியின் புனரமைப்பிற்குப் போடப்பட்ட கற்கள் பரவப்பட்டு ஒரு மாதத்துக்கு மேலாகியும் உருளை போட்டுச் செப்பனிடப் படாததால் ஆலயத்துக்குச் செல்லும் அடியார்கள் மட்டுமல்ல மாணவர், விவசாயிகள் நடமாடமுடியாமல் சிரமப்படுவதும் குவிக்கப்படும் கற்களால் வாகனங்களும் செல்ல முடியாமல் இருக்கின்றன.

இந்த நிலை குறித்துக் கவலை தெரிவித்துள்ள மக்கள் போக்குவரத்தை இலகுவாக மேற்கொள்ளக் கூடிய வகையில் வீதியை விரைவில் புனரமைக்குமாறு சம்மந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளனர்.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் கட்டுடைப் பகுதியில் சுமார் 300 ஏக்கர் விவசாய நிலத்துக்குச் செல்லும் அரசடி விநாயகர் வீதி பல வருடங்களாகச் சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது. ஆலயத்துக்குச் செல்லும் அடியார்கள், வயல் நிலத்துக்குச் செல்லும் விவசாயிகள், மாணவர்கள் சிரமங்கள் மத்தியில் போக்கு வரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த வீதியின் அவல நிலை குறித் தும் மக்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள் குறித்தும் பிரதேச சபையின் நிர்வாகத்திற்குத் தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து வீதி திருத்துவதற்காகப் பிரதேசசபை நிதியில் இருந்து பணம் ஒதுக்கப்பட்டு வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டன.

வீதியில் குவிக்கப்பட்ட கற்கள் பரவப்பட்டு ஒரு மாதத்துக்கு மேலாகியும் உருளை போட்டுச் செப்பனிடப்படாத தினால் இந்த வீதியால் நடமாடமுடியாமல் மக்கள் சிரமப்படுகிறார்கள். எனவே வீதியை விரைவாகப் புனர மைத்துத் தருமாறு மக்கள் கோரியுள்ளனர். (த-110)

# அநாகரிகமாக நடக்கும் மாணவர் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப்.28

பிரபல பாடசாலைகளுக்கிடையே கிரிக்கெட் போட்டிகள் இடம்பெறும்போது முறைகேடாக நடந்து கொள்ளும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பாடசாலைகளின் நிர்வாகத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வடமாகாணக் கல்வி அபிவிருத்திக் குழுவே பாடசாலை அதிபர்கள் ஊடாக இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளது.

வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ்.மத்திய கல்லூரி- யாழ்.பரியோவான் கல்லூரி ஆகியவற்றுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி இந்துக்களின் போர் என வர்ணிக்கப்படும் கொக்குவில் இந்துக் கல்லூரி- யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இடையிலான கிரிக்கெட் போட்டி என்பன நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளுக்கான ஆயத்த நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இந்த வாரத்தில் போட்டி கள் ஆரம்பமாகவுள்ளன. கிரிக்கெட் போட்டிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும்போது மாணவர்கள் சிலர் விதிவிலக்காக மது மற்றும் போதைப் பொருள்களைப் பாவித்துவிட்டு அநாகரிகமாக நடந்து கொள்கின்றனர் என முறைப்பாடுகள் கடந்த காலங்களில் கிடைத்துள்ளன.

அத்துடன் வீதிப் போக்குவரத்துக்கும் இடையூறாக இவர்கள் நடந்து கொள்கின்றனர். அவ்வாறான மாணவர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப் பட்டுள்ளது.

இந்த விடயத்தில் கிரிக்கெட் போட்டிகளில் தொடர்புபட்டுள்ள பாடசாலைகளின் நிர்வாகங்கள் மிகவும் விழிப்பாக நடந்து கொள்ள வேண்டும். நெறிப்பிறழ்வு நடத்தைகளில் மாணவர்கள் ஈடுபடாது தடுத்து நிறுத்தி அவர்களைப் பாதுகாப்பது பாடசாலை நிர்வாகத்தின் பொறுப்பாகும் என வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழு மேலும் அறிவுறுத்தியுள்ளது. (த-3)

# கதை சொல்லும் நேரம் முன்பள்ளி மாணவருக்கு

சாவகச்சேரி, பெப்.28

சாவகச்சேரி நகரசபையின் நுணாவில் பொது நூலக அபிவிருத்தி ஆலோசனைச் சபையினர் முன்பள்ளி சிறார்களுக்கான கதை சொல்லும் நேரம் என்னும் நிகழ்வை நடத்தவுள்ளனர்.

இதன் முதலாவது நிகழ்வாக வீடியோப் படக்காட்சி எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறுமென நூலக அபிவிருத்தி ஆலோசனை சபை செயலாளர் ந.சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

நூலக எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள முன்பள்ளிகளில் அடுத்த வருடம் பாடசாலைகளில் தரம் ஒன்றில் இணையவுள்ள சிறார்களை இந்த நிகழ்வுக்கு அழைத்து வருமாறு முன்பள்ளி ஆசிரியைகளுக்கு அறிவித்துள்ளதாகத் தெரிவித்தார். (த-9)

# உணவு நிலையங்களுக்கு மானிப்பாயில் தரச் சான்றிதழ்

வலி.தென்மேற்கு, பெப்.28

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள உணவு கையாளும் நிலையங்களுக்கான அறிவுறுத்தல் சம்பந்தமான கூட்டமும் தரச்சான்றிதழ் வழங்கும் வைபவமும் அடுத்த மாதம் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மானிப்பாயிலுள்ள வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறவுள்ளது.

1980 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உணவுச் சட்டத்தின் பிரகாரம் சுகாதார அமைச்சினால் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட புதிய எச்800 பரிசோதனை படிவத்துக்கமைய இந்த வேலைத்திட்டம் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் உணவு கையாளும் நிலையங்களுக்கு வழங்கப்படும் தரச் சான்றிதழ்கள் சுகாதார பரிசோதகர்களின் அறிக்கையைத் தொடர்ந்து வருடா வருடம் மாற்றியமைக்கப் படும். உணவு கையாளும் நிலையங்களுக்கு வழங்கப் படும் தரச்சான்றிதழ்கள் மக்களின் பார்வைக்கு வைக்கக் கூடியவாறு வடிவமைக்கப்பட்டு வழங்கப் படவிருக்கின்றன.

சண்டிலிப்பாய் வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறும் இந்த விழாவில் யாழ். மாவட்ட சுகாதார திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் உட்படப் பலர் கலந்து கொள்வார்கள். (த-110)

# பிணை எடுக்க எவருமில்லை; சந்தேகப் பேர்வழி சிறையில்

யாழ்ப்பாணம், பெப்.28

2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நல்லூர் கோயிலுக்குச் சென்று வந்த மூதாட்டியிடமிருந்து சங்கிலியை அறுத்துச் சென்றார் என்ற சந்தேகத்தில் கைது செய்யப் பட்ட கச்சான் ரவி தொடர்பான வழக்கு ஒத்திவைக்கப் பட்டது.

சந்தேக நபர்களில் ஒருவரான கச்சான் ரவியைப் பிணை எடுக்க எவரும் முன் வராததால் அவர் தொடர்ந்தும் விளக்கமறியலில் உள்ளார்.

சம்பவத்தில் வல்வெட்டித்துறை வேம்படியைச் சேர்ந்த இராசமணி சிவசோதி (வயது- 60) என்பவரிடமிருந்தே தங்கச் சங்கிலி கொள்ளையடிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

அந்த வழக்கு யாழ்.நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் போது இராசமணி சிவசோதியின் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. "நல்லூர் கோயிலிருந்து முத்திரைச் சந்திக்குச் சென்று பஸ்ஸுக்காகக் காத்திருந்தபோது பெண் ஒருவர் உட்பட இரண்டு பேர் என்னிடம் வந்து பஸ் இனி வரமாட்டாது என்று ஓட்டோவில் ஏறுங்கள், வீட்டில் கொண்டு சென்று விடுகிறோம்" என்றும் கூறினார். ஓட்டோவில் பெண் ஒருவரும் இருந்தமையால் அந்த நம்பிக்கையில் நானும் ஏறினேன்.

பின்னர் சிறிது நேரத்தின் பின் ஓட்டோ ஓரிடத்தில் நின்றது. எண்ணெய் முடிவடைந்துவிட்டது என்று கூறி என்னை இறக்கி விட்ட அவர்கள் எனது சங்கிலியை அறுத்துக் கொண்டு சென்றனர்" என அந்தப் பெண் சாட்சியமளித்திருந்தார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்திலேயே கச்சான் ரவி கைது செய்யப்பட்டார். இவருடன் இன்னொருவரும் இரண்டாவது சந்தேக நபராகக் கைது செய்யப்பட்டார்.

பின்னர் இருவரும் பிணையில் விடுவிக்க அனுமதி வழங்கப்பட்டபோதும் கச்சான் ரவியைப் பிணையெடுக்க அவரது உறவினர் எவரும் முன்வராததனால் அவர் தொடர்ந்தும் சிறைச்சாலையில் இருந்து வருகிறார்.

விசாரணையின் போது இரண்டாவது சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஜொனி மதுரநாயகம் அவர் குற்றமற்றவர் எனத் தெரிவித்திருந்தார்.

கொள்ளையடிக்கப்பட்ட சங்கிலியைத் தன்னுடையது எனச் சாட்சியமளித்த இராசமலர் சிவசோதி அடையாளம் காட்டினார்.

ஆனால் அந்தச் சங்கிலி தன்னுடையது என கச்சான் ரவி மன்றில் தெரிவித்தார்.

அதனால் அது தொடர்பான நான்காம், ஐந்தாம் சாட்சிகளின் சாட்சியத்தின் அடிப்படையில் சங்கிலி யாருடையது என்றும் தண்டனை வழங்குவது பற்றிய தீர்ப்பையும் அடுத்த மாதத்துக்கு ஒத்திவைத்தார் நீதிவான். (த-4)

# சாப்புச் சட்ட நடைமுறையால் சமூகங்களிடையே பிளவுகள்

## கல்முனை வர்த்தக சம்மேளனம் தெரிவிப்பு

கல்முனை மாநகரத்தில் இரு தினங்களில் சாப்பு சட்டத்தை நடைமுறைப் படுத்தத் தீர்மானித்திருப்பது இரு சமூகங்களைத் தொடர்ந்தும் பிரித்து வைப்பதற்கு வாய்ப்பாக அமையும் என்று கல்முனை வர்த்தக சம்மேளனம் தெரிவித்துள்ளது.

மேலும் இது இன ஐக்கியத்துக்கும் ஊறுவிளைவிப்பதாக உள்ளது என்றும் சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

கல்முனை மாநகரத்தில் இரு தினங்களில் சாப்புச் சட்டம் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கல்முனை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர்எஸ்.எம்.ஏ.கரீம்,தலைவர் யூ.எல். எம். பஸீர் ஆகியோர் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

கல்முனை மாநகரில் வர்த்தகம் புரிந்து வந்த சகல வர்த்தகர்களும் பன் நெடுங்காலமாக கல்முனைப் பகுதியின் நிலைமையைப் புரிந்து ஒற்றுமையைப் பேணிப் பாதுகாத்து வெள்ளிக் கிழமையை

**ஒரு சில வர்த்தகர்களின் தனிப்பட்ட வேண்டுகோளை நிறை வேற்றுவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் துணைபோயிருப்பது மிகவும் வேதனைக்குரியது**

விடுமுறை தினமாக ஏற்று சாப்புச்சட்ட ஒழுங்கு விதிகளை நன்கு மதித்து செயற்பட்டு வந்துள்ளனர்.

இவ்வாறிருக்க ஒரு சில வர்த்தகர்களின் தனிப்பட்ட வேண்டுகோளை நிறைவேற்றுவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் துணைபோயிருப்பது மிகவும் வேதனைக்குரியதும் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய விடயமுமாகும்.

சாப்பு சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமை தமிழ் வர்த்தகர்களுடன் கலந்துரையாடியுள்ளது. இந்தக் கூட்டத்துக்கு கல்முனை வர்த்தகப் பிரதிநிதிகளை அழைக்கவில்லை.

நீண்ட காலமாகக் கல்முனை வர்த்தக சம்மேளனம், கல்முனை வர்த்தக சங்கம், ஐக்கிய வணிகர் அமைப்பு (தமிழ் வர்த்தகர் சங்கம்), சாய்ந்தமருது மற்றும் மருதமுனை வர்த்தக சங்கங்களின் தலைவர், செயலாளர்களை உள்ளடக்கியதாகக் கல்முனை மாநகர சபையில் செயற்பட்டு வரும் அரசதனியார் செயற்குழுக் கூட்டத்தில் பல வருடங்களாக முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் நிமித்தமே அரச விதிகள், நிதி நடைமுறைகளைப் பேணியதாக 19 கடைகளுக்கும் திறந்த கேள்விப் பத்திரம் கோரப்பட்டது

ஆகக்கூடிய கேள்வித் தொகை சமர்ப்பித்தவர்களுக்கு கடைகளை வழங்குவதற்கு கேள்விச் சபை தீர்மானித்து உறுப்பினர்களின் மாதாந்த சபை அமர்வின் போது உறுதிப்படுத்தப்பட்டு திறப்புகள் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டன.

ஆனால், இறுதி நேரத்தில் தீர்மானத்தை கைவிடக் கோரியிருப்பது எந்தவகையில் நியாயமாகும். பகிரங்கமாகத் தினசரி பத்திரிகையிலும் விளம்பரப் பலகைகளிலும் விளம்பரப்படுத்தப்பட்ட போது தீர்மானத்தை மாற்றுமாறு கோரிக்கை விடுத்தவர்கள் எங்கிருந்தார்கள்?

தமிழர்களுக்கு 5 கடைகளும் முஸ்லிம்களுக்கு ஏனைய கடைகளும் வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகள் கையெழுத்திட்டு மாநகர சபைக்கு எழுத்து மூலம் வழங்குவார்களா?

இவ்வாறு, கல்முனையில் மட்டும் இன ரீதியாக நோக்கப்படுகின்ற அதே வேளை மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் போன்ற நகரங்களில் முஸ்லிம்களின் பங்குகள் என்ன என்பது தொடர்பில் கூட்டமைப்பின் நிலைப்பாடு எது என்பதை தெளிவுபடுத்துமா? இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சவூதி அரசு வழங்கிய பேரீச்சம்பழங்கள் விநியோகம்

அம்பாறை, பெப். 28

சவூதி அரேபிய அரசினால் அன்பளிப்பாக இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள பேரீச்சம்பழங்களின் ஒருதொகுதி அம்பாறை மாவட்டத்திலுள்ள ஜும்ஆ பள்ளிவாசல்களுக்குப் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முஸ்லிம் சமய கலாசார திணைக்களப் பணிப்பாளர் வை.எல்.எம்.நவவியின் பணிப்பின் பேரில் புனித நோன்பை முன்னிட்டு பொது மக்களுக்கு விநியோகிக்கும் நோக்குடன் குறித்த பேரீச்சம்பழங்கள் பள்ளிவாசல்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இதன்படி அம்பாறை மாவட்டத்திலுள்ள 19 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள பிரதான ஜும்ஆ பள்ளிவாசல்கள் (19 பள்ளி வாசல்கள்) தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன்,இந்த விநியோகத்திற்கெனத் தெரிவு செய்யப்பட்ட இணைப்பு நிலையமான நிந்தவூர் ஜும்ஆ பள்ளிவாசலிருந்து பள்ளிவாசல்களுக்கான பேரீச்சம்பழ விநியோகம் இடம்பெற்று வருவதாகவும் முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட பள்ளிவாசல்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ஏ.எம். ஹஸீன் தெரிவித்தார்.

மேலும் அம்பாறை மாவட்டத்திற்கென 20 கிலோ கிராம் நிறைகொண்ட 1370 பெட்டி பேரீச்சம்பழங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு விநியோகம் ஆரம்பிக்கப்பட் டுள்ளது.

புனித நோன்பை முன்னிட்டு சவூதி அரேபிய அரசு முன்கூட்டியே இந்தப் பேரீச்சம்பழங்களை இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (வ-30)

# விபத்து; 25 பேர் காயம்

இரத்தினபுரி - குருவிட்ட வீதியில் ஏற்பட்ட வாகன விபத்தில் 25 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த வீதியில் பயணித்துக் கொண்டிருந்த தனியார் பயணிகள் பஸ் ஒன்று வீதியின் ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்ஸுடன் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஐவரின் நிலை கவலைக்கிடம் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

# வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடி; உடனடியாகத் தடுக்கவேண்டும்

## தூண்டில் தொழிலாளர் கோரிக்கை

திருகோணமலை சல்லிபே கடற்பரப்பில் மீன்பிடி வலைகளைப் பயன்படுத்தி தொழில் செய்வோர் மீது தடை எற்படுத்த வேண்டும் என்று கடல்தொழில் நீரியல் வளத்துறை பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமேயிடம் தூண்டில் தொழில் செய்யும் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருக்கோணேஸ்வரம் கடற்பரப்பில் பல வருட காலமாகத் தூண்டில் போட்டு மீன் பிடிக்கும் தொழிலை 43 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பகுதியில் மீன்பிடிப் படகுகளில் வருவோர் வலைகளைப் பயன்படுத்தி மீன் பிடிப்பதால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் இதன்போது அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் மீன் பெருக்கமும் இந்தப்பகுதியில் குறைந்து வருகின்றது. இதனால் எமது தொழில் எதிர்காலத்தில் முற்றாகப் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இது விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமேயிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ)



காத்தான்குடிக்குப் பயணம் செய்த கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் நிதியுதவியுடன் காத்தான்குடியில் நிர்மாணிக்கப்பட்ட ஸாவிய்யா மகளிர் வித்தியாலயக் கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

# அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் இராஜினாமா

பாலமுனை, பெப். 28

தேசிய காங்கிரஸ் கட்சியின் அட்டாளைச்சேனை பிரதேசசபை உறுப்பினர் தமீம் ஆப்தீன் தனது பிரதேசசபை உறுப்பினர் பதவியிலிருந்து ராஜிநாமாச் செய்துள்ளார்.

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற அட்டாளைச்சேனை பிரதேசசபைத் தேர்தலில் தேசிய காங்கிரஸ் கட்சி சார்பாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றவர் ஆப்தீன் ஆவார்.

தனிப்பட்ட காரணங்களுக்காகத் தனது பதவியை இராஜிநாமாச் செய்ததாகவும் பிரதேசசபை உறுப்பினர் பதவிமூலம் வாக்களித்த மக்களுக்கு எதனை யும் செய்யமுடியாதுள்ளது எனவும் ஆப்தீன் குறிப்பிட்டார்.

இராஜிநாமாச் செய்துள்ள பிரதேசசபை உறுப் பினர் தமீம் ஆப்தீன் 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற அட்டாளைச்சேனை பிரதேச சபைத் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றவர். பின்னர் அக்கட்சியிலிருந்து விலகி தேசிய காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து கொண்டார்.

மக்கள் சேவையில் பெரும் ஆர்வம்கொண்ட இவர், அட்டாளைச்சேனை பிரதேச அபிவிருத்திக்குத் தன்னால் இயன்ற பங்களிப்பை வழங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதேவேளை, இராஜிநாமாச் செய்துள்ள ஆப்தீனின் வெற்றிடத்திற்கு ஒலுவிலைச் சேர்ந்த எம். றியாஸ் நியமிக்கப்படவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (வ)

# உணவு ஒவ்வாமை; 26 பேர் வைத்தியசாலையில்

ஆலயத்தில் வழங்கப்பட்ட உணவு ஒவ்வாமையால் 26 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பசறை டைனாவத்தை ஆலயத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற பூசையின் பின் வழங்கப்பட்ட உணவை உட்கொண்டவர்களே இவ்வாறு ஒவ்வாமை காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் கைக்குழந்தை ஒன்றும் அடங்குகிறது.

சிகிச்சை பெற்று வருவோர் ஆபத்தான நிலைமை கடந்து விட்டனர் என பதுளை - பசறை வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார். (வ)

# கதிர்காமம்–லுணுகம்வெஹெர மாணிக்கக்கல் காணித்துண்டங்கள் ஏலத்தில் விடப்பட்டன

## ஏலத்தின் மூலம் பெறப்பட்ட இலாபம் 27 கோடி

கதிர்காமம் லுணுகம்வெஹெர பிரதேசத்திலுள்ள மாணிக்கக் கற்கள் காணப்பட்ட காணி, கடந்த 24 ஆம் திகதி ஏலத்தில் விடப்பட்டது.

52 துண்டங்களாக்கப்பட்டு அக்காணி தொடர்பாக இடம்பெற்ற ஏலத்தில் 27 கோடியே 10 லட்சம் ரூபாய்களை அரச மாணிக்கக் கற்கள் மற்றும் தங்க ஆபரணங்கள் அதிகாரசபை இலாபமாக ஈட்டிக் கொண்டுள்ளது.

இந்த 52 காணித்துண்டங்களுள் 49 துண்டங்களே ஏலத்தில் விற்கப்பட்டுள்ளன. ஏனைய 3 காணித்துண்டங்களும் அந்த மார்க்கத்தை அண்டியுள்ள பொதுமக்கள் தொடர்பாக பிரதேச செயலாளரிடம் பொறுப்பளிக்கப்பட்டு புறம்பான ஏலமொன்று நடத்தப்பட்டு காணித்துண்டமொன்றில் உள்ளிடுவதற்கான கட்டணமாகத் தலா ஆயிரம் ரூபா என்றவாறு பொதுமக்களிடமிருந்து அறவிட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் காணிகளுக்கு முழுமையான பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படுமெனவும் தென்மாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நந்தன விஜேரத்ன தெரிவித்துள்ளார். மேலும் மாணிக்கக் கற்களை அகழ்ந்தெடுக்கும் செயற்பாடுகளின்போது ஏதோ விதத்தில் துண்டங்களை ஏலத்தில் பெற்றுள்ளவர்களுக்கு அவற்றை அகழ்ந்தெடுக்க இயலாத அளவுக்கு ஏதொவொரு தரப்பினால் தொந்தரவுகள், தடைகள், பாதிப்புக்கள் ஏற்படுமாயின் காணித்துண்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ள நபர்களுக்கு அவர்கள் செலுத்தியுள்ள தொகை மீளளிக்கப்படுமெனவும் மேற்படி அதிகாரசபையின் நிறைவேற்றுப் பணிப்பாளரினால் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த அகழ்வுப் பணிகளின் போது அந்தப் பிரதேச குடியிருப்பாளர்களுக்கு தொந்தரவுகளை ஏற்படுத்தும் விதமாகவும் மற்றும் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படும் விதமாகவும் காணித்துண்டங்களை ஏலத்தில் பெற்றுள்ளவர்கள் நடந்துகொள்ளக் கூடாதெனவும் அவர்களுக்கு நிபந்தனையொன்றும் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த ஏலத்தின் போது ஆயிரத்துக்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் சமுகமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (வ)

## கடைத் தொகுதி வாடகைக்கு உண்டு

மல்லாகத்திற்கும், சுன்னாகத்திற்கும் இடையில் யாழ்ப்பாணம் K.K.S. றோட்டில் அமைந்துள்ள 3 தளங்களைக் கொண்ட (G+2தளங்கள்) 6500 சதுர அடி பரப்பளவைக் கொண்ட கடைத்தொகுதி வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு :
077 9003780
077 1726642

(15153)(6-7-8)

## விற்பனைக்கு

Cool Laminating Machine (England), பிளேற் மேக்கர் (Parker) பெரிது, AC என்பன விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0714546800

(15154)

## காணி விற்பனைக்கு

மீசாலை மேற்கு, மீசாலையில் (கங்காணியார் கோயிலுக்கு அண்மையில் ) தென்னங் காணி 10 பரப்பு உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 9103340

(14665)(6-7-8)


## சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் 33ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் பற்றிய அறிவித்தல்

இடம் : சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி
காலம் : 11.03.2012 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பிற்பகல் 3 மணி

01. எமது மன்றின் விடயமாக பிரேரணைகள் இருப்பின் 04.03.2012 ஆம் திகதிக்கு முன் எழுத்து மூலம் மன்ற செயலாளர் அவர்களுக்கு அனுப்பி வைக்கவும்
02. 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெள்ளிவிழாக் காணும் அங்கத்தவர்களை கௌரவித்தல்
03. அமரர் ச. நமசிவாயம் புலமைப்பரிசு நிதியம்
04. அமரர் கு. தவராஜசிங்கம் விதவை நிதியம்
05. சன்றைஸ் ஊனமுற்றோர் நிதியம்
06. அமரர் ச. இரத்தினம் வறிய மாணவர் நிதியம்
07. பொ. தமோதரம் வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான நிதியம்
08. சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற மாணவர் நிதியம்
09. பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கௌரவிப்பு விழா ஏற்பாட்டுக் குழு மாணவர் நிதியம்
10. அமரர்களான சுப்பிரமணியம், நேசரத்தினம் மாணவர் நிதியம்
11. அமரர் செ. சபாரத்தினம் மாணவர் நிதியம்
12. முத்துமாரி அம்மன் மாரிமகிந்தன் திருப்பணியாளர் வைத்தியலிங்கம் சிவராசா மாணவர் நிதியம்
13. ஓய்வு நிலை இலங்கை வங்கி முகாமையாளர் ச. சந்திரகுமார் மாணவர் நிதியம்
14. கலாநிதி முருகப்பா பஞ்சாபிகேசன் மாணவர் நிதியம்
15. அமரர் க. சண்முகானந்தம் மாணவர் நிதியம்
16. கணபதிப்பிள்ளை முரளி மாணவர் நிதியம்
17. மாதாந்தம் எமது வணிகர்களின் பங்களிப்புடன் நடத்தப்படும் தந்தையை இழந்த வறிய மாணவர்களுக்கான கொடுப்பனவு போன்ற நிதியங்கள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி கூட்டத்துக்கு அனைத்து வணிகர் மன்ற அங்கத்தவர்களையும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்

(114664)(45-6-7)

# மாற்றுத்திறன் உள்ளோருக்கான வாழ்வாதாரத் தொழிற் பயிற்சி

பருத்தித்துறை.பெப்.28

மாற்றுத் திறனுள்ளோருக்கான வாழ்வாதாரத் தொழிற்பயிற்சி நிலையம் பருத்தித்துறையில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் பருத்தித்துறை கட்டைவேலி சேகரத்துடன் கொழும்பு மாற்றுத் திறனாளிகளின் பணியகம் இணைந்து இப் பயிற்சி நிலையத்தை நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி வீதி, பருத்தித்துறையிலுள்ள உதவும் கரங்கள் நிலையத்தில் திறந்து வைக்க உள்ளன.

இலங்கை மெதடிஸ்த திருச்சபை பருத்தித்துறை கட்டைவேலி சேகர முகாமைக் குரு அருட்திரு ரி.கிறிஸ்ரிகுமார் தலைமையில் இந்த வைபவம் இடம் பெறவுள்ளது.

இந்த வைபவத்தில் சிறப்பு விருந்தினர்களாக அஞ்சலி அகம் இயக்குநர் எஸ். வணபிதா டேமியன், மாற்றுத் திறனாளிகள் பணியகப் பிரதம இணைப்பாளர் அருட்திரு. எஸ்.ஞான ராஜா, ஹாட்லிக் கல்லூரி அதிபர் என்.தெய்வேந்திரராஜா, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி எஸ்.சுந்தரேசன், பருத்தித்துறை பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.சுரேந்திர,அருட்திரு யூட்சுதர்சன், கிராம சேவை உத்தியோகத்தர் உமாசங்கர் அகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள். (ந-190)

## சுற்றுலா முகாமைத்துவ பயிற்சிநெறி

தேசிய பயிலுநர் கைத் தொழில் பயிற்சி அதிகார சபையின் ஏற்பாட்டில் ஞானம்ஸ் ஹோட்டலில் சுற்றுலா முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள்கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி 16 வயதுக்கும்35 வயதுக்கும் உட்பட்டவராக இருப்பதுடன் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் வரை கற்றிருக்க வேண்டும். தகுதியுடையவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்ப படிவத்தை மாவட்ட முகாமையாளருக்கு எதிர்வரும் முத லாம்திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு கேட்கப்படுகின்றனர். (வ-16)


## PATRICIAN INSTITUTES

பற்றீஷன் தொழிற் பயிற்சி நிறுவனங்கள்

VACANCY - பதவி வெற்றிடம்

கணினி போதனாசிரியர் COMPUTER INSTRUCTOR

மேற்படி பதவிக்கு தகைமை உள்ளவர்கள் 05.03.2012 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ விண்ணப்பங்களை அனுப்பவும்.

பின்வரும் பாடநெறிகள் அனைத்தும் கற்பிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

1. Computer Programming
2. Microsoft Office
3. DTP
4. Type Setting
5. Computer Accounting
6. Web Multimedia
7. Video Editing
8. Graphic Design
9. Internet and E- mail

Note: தற்போது அனைத்து பாட நெறிகளும் ஆரம்பமாகியுள்ளன.

மேலதிக விவரங்களுக்கு:

Registrar,
Patrician Institute,
61 (59), St. Patrick ' s Road, Jaffna.
T . P : 021 2226148
Fax : 021 2226148
Email : Spitce@Sltnet.lk

(C/8364)(6-7-8)


# மரண அறிவித்தல்



## செல்லத்துரை தவராசா

துரையந்தோட்டம், நவிண்டில், கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை தவராசா 25.02.2012 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் செல்லத்துரை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் தம்பையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், சரோஜினிதேவி யின் அன்புக் கணவரும் பிரகாஷ் (சுவிஸ்), பிரபாலினி, பிரமிளா, பிரதீபா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயராஜ், சிவராஜ், ஜீவரத்தினம் ஆகி யோரின் அன்பு மாமனாரும், இராசமணி, யோகராசா, நடராசா, தர்மராசா, இராசலட்சுமி, தனலட்சுமி, கெங்காதரன், காலஞ்சென்ற சிவாஜினி ஆகி யோரின் அன்புச் சகோதரனும் வெற்றிவேலாயுதம், நாகேஸ்வரி (சோதி), கலாமதி, சிறிவள்ளி (லதா), நாகேந்திரம், காலஞ்சென்ற நவரட்ணராஜா மற்றும் பாமதி, கந்தகுமார் ஆகி யோரின் மைத்துனரும் சஜீவனா, ரவீனா, பூஜா, சோபிகா, ராகவி, டயானிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (29.02.2012) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

துரையந் தோட்டம்,
நவிண்டில், கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

(C\8365) (6-7-10)

# மலேஷியாவில் மக்கள் போராட்டம் வலுக்கிறது

## மண்ணிலிருந்து உலோகங்களை பிரித்தெடுக்கும் நிலையத்தை எதிர்த்து




சுத்திகரிப்பு நிலையம் அமையக்கூடிய பகுதியில் அணுக் கதிர்வீச்சு அபாயம் எழும் என்று அஞ்சி மக்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். அண்மையில் தமிழக மக்கள் மத்தியில் உருவாகியிருந்த அணு தொடர்பான எதிர்ப்பும் இதில் பிரதிபலிக்கிறது.

மண்ணிலிருந்து அரிய உலோகங்களைப் பிரித்தெடுப்பதற்கான சுத்திகரிப்பு நிலையம் ஒன்று மலேஷியாவில் கட்டப்படவிருப்பதை எதிர்த்து இரண்டாயிரத்துக்கும் அதிகமானோர் கூடி ஆர்ப்பாட்டங்களைச் செய்துள்ளனர்.

கைத்தொலைபேசிகள், மெல்லிய திரைகளைக் கொண்ட தொலைக்காட்சிகள் போன்ற அதிநவீன தொழில்நுட்பக் கருவிகளை உருவாக்கப் பயன்படும் அரிய உலோகங்களை இந்த சுத்திகரிப்பு நிலையம் மண் ணில் இருந்து பிரித்தெடுக்கும்.

இந்தச் சுத்திகரிப்பு நிலையம் அமையக்கூடிய பகுதியில் அணுக் கதிர்வீச்சு அபாயம் எழும் என்று அஞ்சி மக்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

இந்தத் தொழிற்சாலை வந்தால் வேலைவாய்ப்புகள் கிடைக்கும், இத்தொழிலில் சீனாவே ஆதிக்கம் செலுத்தும் நிலையை உடைக்கலாம் என்றெல்லாம் நினைத்து மலேஷிய அதிகாரிகள் இத்தொழிற்சாலை கட்டப்படுவதற்கு அண்மையில் உரிமம் வழங்கியிருந்தனர்.

ஆனால் இந்தத் தொழிற்சாலை அமையவிருக்கின்ற இடத்தைச் சுற்றி வாழ்பவர்கள் இத்தொழிற்சாலை வரக்கூடாது என்று விரும்புகின்றனர்.

மக்கள்நெருக்கமாகவாழும் குவண்டன் நகரமே இதில் அதிக பாதிப்புக்கு உட்படும் என மக்கள் அஞ்சுகின்றனர்.

மண்ணில் இருந்து அரிய உலோகங்களை ஆபத்தில்லாமல் பாதுகாப்புடன் பிரித்தெடுப்பதற்குரிய புதிய முறை ஒன்றைத் தாங்கள் கண்டுபிடித்துள்ளதாக மலேஷியாவில் தொழிற்சாலை அமைக்கவுள்ள ஆஸ்திரேலிய சுரங்க நிறுவனமான லினாஸ் கூறுகிறது.

இந்த புதிய முறையில் உலோகம் பிரித்தெடுக்கப்பட்டவுடன் எஞ்சும் கழிவுப் பொருளில் குறைந்த அளவிலான அணுக் கதிர்வீச்சு இருக்கும் என்பதுதான் இதிலுள்ள ஒரே பின்னடைவு என்று கூறப்படுகிறது.

இந்த குறைந்த கதிர்வீச்சினால் மக்களுக்கு எவ்விதமான சுகாதாரப் பிரச்சினையும் தோன்றாது என்று தற்போது மலேஷிய அதிகாரிகள் கூறுகின்றனர்.

ஆனால் அந்த வாதத்தை ஏற்கத் தொழிற்சாலையை சுற்றி வரவுள்ள பகுதியைச் சேர்ந்த மக்கள் தயாராக இல்லை.

இருந்தாலும் தொழிற்சாலை அமைப்பது என்ற தமது தீர்மானத்தை மாற்றிக் கொள்ளப்போவதில்லை என மலேஷிய அரசு வலியுறுத்துகிறது.

இந்தத் திட்டம் கைவிடப்படும் வரை தாங்கள் போராட்டத்திலிருந்து விலகிக்கொள்ளப் போவதில்லை என்று போராட்டக்காரர்கள் எச்சரித்திருக்கின்றனர்.

# ஒபாமாவுக்கு கிடைத்த 3 பேர்



வொஷிங்டன் , பெப். 28

அமெரிக்க அதிபர் தேர்தலில், பராக் ஒபாமாவுக்கு ஆதரவாக 3 இந்திய வம்சாவளியினர் பிரசாரத்தில் ஈடுபடுகின்றனர். அமெரிக்க அதிபர் தேர்தல் எதிர்வரும் நவம்பர் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் ஆளும் ஜனநாயகக் கட்சி சார்பில் தற்போதைய அதிபர் ஒபாமா மீண்டும் போட்டியிடுகிறார். முக்கிய எதிர்க்கட்சியான குடியரசுக் கட்சி சார்பில் ரோம்னி போட்டியிடுகிறார். இவர்கள் இருவருக்கும் இடையில் பலத்த போட்டி எழுந்துள்ளது. அமெரிக்காவில் தற்போது நிலவும் வேலைவாய்ப்பின்மை, பொருளாதார நெருக்கடியால் ஒபாமாவின் செல்வாக்குச் சரிந்துள்ளதாகக் கருத்துக் கணிப்புகள் வெளியாகி வருகின்றனர்.

இந்த நிலையில், அமெரிக்காவில் வாழும் இந்திய வம்சாவளியினரின் வாக்குகளை கவர ஒபாமா திட்டமிட்டுள்ளார். அமெரிக்காவில் 30 லட்சத்துக்கும் அதிகமான இந்தியர்கள் வசிக்கின்றனர். இவர்களுடைய வாக்குகளை கவர, ஒபாமாவுக்கு ஆதரவாக 3 இந்திய வம்சாவளியினர் தீவிர பிரசாரத்தில் ஈடுபடுகின்றனர். நடிகர் கல்பன் மோடி, கலிபோர்னியாவின் முதல் பெண் அட் டர்னி ஜெனரல் கமலா ஹரிஸ், சாய் ஐயர் ஆகிய 3 பேருமே, ஒபாமாவுக்கு ஆதரவாக பிரசாரம் செய்கின்றனர்.

# புதிய ஞாயிறு உதயம்

## நியூஸ் ஒவ் த வேல்ட்டுக்கு பதிலாக



'நியுஸ் ஒவ் த வேல்ட்' பத்திரிகைக் குப் பதிலாக, அந்த நிறுவனத்தின் உரிமையாளர் ரூப்பர்ட் முர் டொக் புதிய ஞாயிறு இதழொன்றைத்தொடங்கியுள்ளார்.

பிரிட்டனில் தொலைபேசிகள் ஒட்டுக்கேட்கப்பட்ட விவகாரத்தால் 'நியூஸ் ஒவ் த வேல்ட்' கடந்த ஆண்டில் தடைசெய்யப்பட்டது.

சுமார் இரண்டு மில்லியன் பிரதிகள் விற்கப்பட்ட குறித்த பத்திரிகை ஈட்டிய வெற்றியை புதிய பத்திரிகை புதிய ஞாயிறு தக்க வைத்துக் கொள்ளும் என்று முர் டொக் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இந்தப் புதிய பத்திரிகையின் ஊழியர்கள் தொழில் தர்மவிதிகளை முறையாகக் கடைப்பிடிப்பார்கள் என்று அந்தப் பத்திரிகையின் ஆசிரியர்பீடம் உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தலை துண்டிப்பு

ரியாத், பெப். 28

சவூதி அரேபியாவில் போதைவஸ்து கடத்தலில் ஈடுபட்ட ஒருவரின் தலையைத் துண்டித்து மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

சவூதி அரேபியாவில் சட்ட திட்டங்கள் கடுமையாக நடைமுறைபடுத்தப்படுகின்றன. பெண்களுக்கு கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. பெண்கள் கார் ஓட்டவும், ஆண் துணையில்லாமல் பொது இடங்களுக்குச் செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. வாக்குரிமையும் மறுக்கப்பட்டுள்ளது. கடும் போராட்டத்துக்கு பின்னர் தேர்தலில் போட்டியிடவும் வாக்களிக்கவும் அண்மையில் பெண்களுக்கு உரிமை வழங்கப்பட்டது.

போதைவஸ்து கடத்தல், கொலை, பாலியல் பலாத்காரம் போன்ற குற்றங்களுக்கு மரண தண்டனை வரை விதிக்கப்படுகிறது. கடந்த ஆண்டு மட்டும் 79 பேருக்கு சவூதி அரசு மரண தண்டனை நிறைவேற்றி உள்ளது என்று சர்வதேச பொது மன்னிப்பு கழகம் புள்ளிவிவரம் வெளியிட்டுள்ளது இந்த நிலையில், போதைப் பொருள் கடத்திய குற்றத்துக்காக சவூதி அரேபியாவைச் சேர்ந்த வாகித்அடாவி என்பவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

# மொங்கோலியா அருகில் நில நடுக்கம்

மொங்கோலியா எல்லைக்கு அருகிலுள்ள சேர்பிய பகுதியில் பெரியளவிலான நில நடுக்கம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ரஷ்யாவின் தென்கிழக்கிலுள்ள ரூபா பிராந்தியத்தில் 6.8 ரிச்டர் அளவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட் டுள்ளதாக அந்த நாட்டுத் தகவல்கள் குறிப் பிடுகின்றன.

நிலநடுக்கத்தினால் காயமடைந்தவர்கள் மற்றும் ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்து உடனடியாக எந்தவொரு தகவல்களும் வெளியாகவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈரானிய அணுத்திட்டங்கள் முக்கிய கவனத்துக்குள்



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுடன் நடைபெறவுள்ள பேச்சுக்களில், ஈரான் அணுத்திட்டங்கள் குறித்து முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளதாக இஸ்ரேல் பிரதமர் கூறியுள் ளார். ஈரான் தொடர்ந்தும் அணுத்திட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக அமைச்சரவையில் உரையாற்றும் போது பெஞ்ஜமின் நெட்டன்யாஹு மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ள இஸ்ரேல் பிரதமர் மார்ச் 14 ஆம் திகதி பராக் ஒபாமாவைச் சந்திக்கவுள்ளார்.

மேலும், கனேடியப் பிரதமர் ஸ்ரிவன் ஹாப்பருடன், ஈரானின் அணுத்திட்டச் செயற்பாடுகள் குறித்துக் கலந்துரையாடவுள்ளதாக இஸ்ரேல் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

ஈரான் யூரேனியச் செறிவூட்டல் நடவடிக்கையை விஸ்தரித்து வருவது, சர்வதேச அணுசக்தி நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையின் மூலம் தெரியவருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஈரானின் அணுத்திட்ட நடவடிக்கைகள் காரணமாக அந்த நாட்டுக்கு எதிராகத் தடைகள் விதிக்கப்பட்டு வரும் நிலையில், அணுத்திட்டங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் அதிகரித்துள்ளது.



சிரியாவில் இராணுவத்தினரின் மிக மோசமான அடக்குமுறைக்கு மத்தியிலும் அந்த நாட்டு மக்கள் ஜனநாயக ரீதியான நாடாளுமன்றத் தெரிவுக்கு வலுச்சேர்க்கும் வகையில் வாக்களிப்பில் ஈடுபட்டுள்ளனர்.


# தாயகம் திரும்பும் நேட்டோ ஊழியர்கள்

ஆப்கன் அமைச்சரவைகளில் இருந்த தமது அனைத்து ஊழியர்களையும் நேட்டோ மீளப்பெற்றுள்ளது.

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் அமைந்துள்ள உள்விவகார அமைச்சின் வளாகத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் இரண்டு அமெரிக்க சிரேஷ்ட அதிகாரிகள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து நேட்டோ அமைப்பு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

நேட்டோப் படையினரின் உயர் அதிகாரி ஒருவரும் கேர்ணல் ஒருவருமே இந்த சம்பவத்தில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. நேட்டோ படையினர் ஆப்கன் மக்களின் புனித நூலான குர் ஆனை எரித்ததைத் தொடர்ந்து மக்கள் அங்கு கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். அதன் விளைவாகவே இந்தச் சூட்டுச் சம்பவம் நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# கனடாவில் பயங்கரம் விபத்தில் மூவர் சாவு



நயாகரா நீர்வீழ்ச்சிப் பகுதியில் இருந்து டொரண்டோவிற்கு பயணித்த குறித்த ரயில், பேர்லிங்டன் பகுதியில் விபத்துக் குள்ளா கியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒட்டாவா, பெப்.28

கனடாவின் ஒன்டாரியோவில் மிகப்பெரிய ரயில் விபத்து ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் ரயிலின் சிதைவுகளுக்குள் சிக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நயாகரா நீர்வீழ்ச்சிப் பகுதியில் இருந்து டொரண்டோவிற்குப் பயணித்த குறித்த ரயில், பேர்லிங்டன் பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

விபத்து இடம்பெற்றவேளையில் சுமார் 75 பேர் குறித்த ரயிலில் பயணித்துள்ளனர்.

விபத்திற்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை என அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிதைவுகளுக்குள் சிக்கியிருக்கும் பயணிகளை மீட்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் மீட்புப் பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## மீண்டும் அவரே

ஆஸ்திரேலிய தொழில் கட்சியின் தலைமைத்துவத்திற்கான தேர்தலில் தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட முன்னாள் பிரதமர் கெவின் ரூத்தை தோற்கடித்து பிரதமர் ஜூலியா கிலாட் மீண்டும் வெற்றியீட்டியுள்ளார்.

இந்த வாக்கெடுப்பில் 71 க்கு 31 என்ற வாக்குகள் கணக்கில் கிலாட் வெற்றியைத் தன்வசப்படுத்தியுள்ளார்.



தமது பதவிக்கு முன்னாள் பிரதமர் கெவின் ரூத் மீண்டும் சவால் விடுக்கத் தயாராகி வருவதாக வெளியான தகவலை அடுத்து, தொழில் கட்சியின் தலைமைத்துவத்திற்கான தேர்தலை நடத்த ஜூலியா கிலாட் நடவடிக்கை எடுத்தார்.

கடந்த வாரம் கெவின் ரூத் தமது பதவியை இராஜிநாமா செய்ததை அடுத்து ஏற்பட்டுள்ள ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் வெற்றிடத்திற்கு புதிய அமைச்சர் ஒருவரை நியமிக்கும் வகையில் விரைவில் அமைச்சரவை மாற்றம் இடம்பெறவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## தேவாலயம் மீது தற்கொலைத் தாக்கு

நைஜிரியாவின் மத்திய பகுதி நகரான ஜோசிலுள்ள தேவாலயம் ஒன்றை இலக்கு வைத்து தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.


காலை நேரப் பிரார்த்தனைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் குறைந்தது இரண்டு பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது,

எனினும் இந்தத் தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டதுடன் 10 பேர் காயமடைந்துள்ளனர் என அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதலுக்கு எந்தவொரு அமைப்பும் இது வரை உரிமை கோராத போதிலும், போகோ ஹராம் ஆயுததாரிகள் இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

அரசு பதவி விலகுவதுடன், இஸ்லாமிய நாடாக நைஜிரியா உருவாக்கப்பட வேண்டுமென வலியுறுத்தி இந்தக் குழுவினர் நாடளாவிய ரீதியில் பல தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஒஸ்கார் 84



லொஸ் ஏஞ்சல், பெப்.28

84 வது ஒஸ்கர் விருதுகள் வழங்கும் விழா லொஸ் ஏஞ்சலில் தொடங்கியுள்ளது.

'ஹூகோ' திரைப்படத்துக்கு சிறந்த ஒளிப்பதிவு, கலை, இசையமைப்பு, காட்சித் தொகுப்பு, போன்ற வற்றுக்கு விருது வழங்கப்பட்டுள்ளது. சிறந்த விஷ்வல் எஃபக்ட்ஸ் விருதையும் ஹூகோ திரைப்படம் வென்றுள்ளது. சிறந்த ஆடை அலங்கார வடிவமைப்பாளர் மார்க் பிரிட்ஜஸ் (தி ஆர்டிஸ்ட்) க்கு வழங்கப்பட்டது. மார்க் கூலியர், ஜே.ராய் ஹேலந்துக்கு சிறந்த ஒப்பனை விருதும், சிறந்த வெளிநாட்டுப் படத்துக்கான விருது ஈரானின் 'ஏ செப்பரேஷன்' திரைப்படத்துக்கு வழங்கப்பட்டது. 'தி ஹெல்ப்' படத்தில் நடித்த ஒக்டவியா ஸ்பென்சருக்கு சிறந்த துணை நடிகை விருதும் வழங்கப்பட்டது. சிறந்த காட்சியமைப்பு கிரிக் பாக்ஸ்டர், அங்கூஸ் (படம் : தி கேர்ள் வித் தி டிராகன் பார்ட் 2) ஆகியோருக்கு வழங்கப்பட்டது. சிறந்த அனிமேஷன் படமாக 'ராங்கோ' திரைப்படமும், சிறந்த ஆவணப்படமாக 'அன் டிபட்டடு' படமும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

## கிரண்பேடியின் சகோதரிக்கு விருது

கிரண்பேடியின் சகோதரியான பிரபல சட்டத்தரணிக்கு அமெரிக்காவில் விருது கிடைத்துள்ளது. முன்னாள் ஐ.பி.எஸ் அதிகாரி கிரண்பேடி, தற்போது ஊழலுக்கு எதிரான அன்னா ஹசாரே இயக்கத்தில் தீவிரமாகப் பணியாற்றி வருகிறார். இவரது இளைய சகோதரி அனு பெஷாவாரியா அமெரிக்காவில் வசித்து வருகிறார். கலிபோர்னியாவில் பிரபல சட்டத்தரணியாகத் திகழும் இவர், இந்தியாவில் இருந்து குடியேறியவர்களுக்காகக் குரல் கொடுத்து வருகிறார்.

குடிபெயர்ந்தவர்களின் உரிமைகளுக்காக, குறிப்பாக பெண்களின் உரிமைக்காகப் பாடுபட்டதற்காக அவருக்கு கலிபோர்னியா மாநில அரசின் சார்பில் சிறப்பு விருது வழங்கப்பட்டது. இந்த விருதை கலிபோர்னிய அமைச்சர் அன்னா எம் கபேலிரோ வழங்கி பாராட்டு தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்



திருமதி

### இராசையா செல்வநாயகி

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், இணுவில், நாவாலியை வசிப்பிடமாகவும், தற்போது லண்டனை வதிவிடமாகவும் கொண்ட இராசையா செல்வநாயகி (22-02-2012) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சுப்பையா இராசையாவின் (நவாலி) அன்பு மனைவியும், சரஸ்வதி (லண்டன்), மகேந்திரராஜா (இந்தோனேசியா), சிறிஸ்கந்தராஜா (துரை-லண்டன்), ஈஸ்வரிதேவி (தேவி-கனடா), குகேந்திரராஜா (பிரதாபன்-லண்டன்), கடம்பேஸ்வரி (லலிதா-லண்டன்), கதிர்காமராஜா (கனா-லண்டன்), வசந்தி (கௌசலை-லண்டன்), சிறீதவராஜா (ஜனா-லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், அமிர்தலிங்கம், எஸ்தினி (இந்தோனேசியா), சுபகௌரி, கனகலிங்கம், Dr.கலைச்செல்வி, ஶ்ரீகாந்தன், சசிகலா, ஞானாதரன், சிவதர்மினி ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற சுவாமிநாதபிள்ளை (இணுவில்), இராமநாதபிள்ளை (இணுவில்), அன்னலட்சுமி (பேபி-இணுவில்), இலங்கநாதபிள்ளை (கோண்டாவில்), இராஜேஸ்வரி (இணுவில்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், செல்வரத்தினம், செல்லாச்சி (குஞ்சு-மாத்தளை) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுதர்சன், வத்சலியா, தவகுமரன், யவிதா, Dr. நிஷாந், அஜன், பாலிகா, பானுகா, கிசோர், காயிசா, சிந்துரா, மயூரா, மதுரன், ஆதவன், பிரணவன், மிதுலா, ஆர்த்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ரக்சினி, தக்சன், திசாகரன், சன்சிவ்காந், சயன், ஜசிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.02.2012) புதன்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**சிறீதவராஜா-(பிரித்தானியா),**
26, Bickely Street,
Tooting Broaduay, London-
SW179NE.
**தொ.பே:+442087676968**
**செல்லிடபேசி:+447984801691**

**தகவல்:**
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,**
**பொ. இராமநாதபிள்ளை**
**(சின்னராசா) தியேட்டர் லேன்,**
**இணுவில்.**

(15106)(6,7,10)

## கண்ணீர் அஞ்சலி



### ஶ்ரீதரன் சத்தியநேசன்

*(அப்பள நேசன்)*

(அப்பளத் தொழில் நுட்பவியலாளர்)

தகுதி பாராமல் உதவி செய்யும் மனிதநேயமிக்க மாமனித சத்தியநேசா உமை இனி நாம் எங்கே காண்போம்!

தவிக்கின்றோம், தத்தளிக்கின்றோம், துடிக்கின்றோம்.

உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நல்லூர் முருகனை வேண்டி நிற்கின்றோம்.

சி.சிவராஜன் குடும்பம்.

திருநெல்வேலி.

(கணேஸ் அண்ணை)

(15151)(2-7-6)

# கார் - லொறி விபத்து 8 பேர் உடல் நசுங்கிச் சாவு



ஆலங்குளம்,பெப்.28
ஆலங்குளம் அருகே கார், லொறி நேருக்கு நேர் மோதிய விபத்தில் உடல் நசுங்கி 8 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

தென்காசி அருகே உள்ள மேலகரம் ஸ்டேட் வங்கிப் பகுதியைச் சேர்ந்த முன்னாள் விமானப்படை வீரர் அம்மையப்பன்(வயது 53). இவர், தனியார் தொலைபேசி நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார். இவரது உறவு பெண்ணுக்கு வளைகாப்பு நிகழ்ச்சி நெல்லை நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொள்வதற்காக அம்மையப்பன், அவரது மகள் செல்வி (வயது 24), மகன் கவுதம் (வயது 6), மற்றும் உறவினரான இலத்தூரைச் சேர்ந்த உலகநாதன் மனைவி ஆறுமுககளஞ்சியம்(வயது53) ஆகியோர்அம்மையப்பனுக்குச் சொந்தமான காரில் நெல்லை நகருக்கு சென்றனர். காரை ஆறுமுகம் மகன் பாலா (வயது22) செலுத்தினார்.

வளைகாப்பு முடிந்து திரும்பும்போது அம்மையப்பனின் உறவினரும், சிவகிரி நடுநிலைப்பள்ளி ஆசிரியருமான காளிமுத்து (வயது 50), அவரது மனைவியும், ஆசிரியையுமான ஜெயகுமாரி (வயது 36), மகள் காயத்ரி (வயது 13), மகன் ஹரீஸ்(வயது 8) ஆகியோரும் தென்காசி செல்வதற்காக காரில் ஏறினர். பிற்பகல் 3.30 மணிக்கு ஆலங்குளம் தொட்டியான்குளம் வளைவு பகுதியில் கார் வந்தபோது முன்னால் சென்ற பஸ்ஸை டிரைவர் முந்த முயன்றார்.

அப்போது எதிரே வந்த மினி லொறியும், காரும் நேருக்கு நேர் மோதிக் கொண்டன. இதில் கார் உருக்குலைந்தது. காரிலிருந்த 7 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தனர். படுகாயமடைந்த கவுதம், காளிமுத்து ஆகியோர் நெல்லை அரச மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். ஆனால் வழியிலேயே கவுதம் இறந்தார். காளிமுத்துவுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது.

கார் மீது மோதிய வேகத்தில் மினி லொறி இடப்பக்கம் உள்ள 5 அடி ஆழ வயல்வெளியில் பாய்ந்தது. இதில் சிறிய லொறியை செலுத்திய நாங்குநேரி அருகே உள்ள புத்தனேரியை சேர்ந்த வேல்முருகன் (வயது37) படுகாயமடைந்தார். நெல்லை அரசு மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். (வ)

## நீதிபதி ஆனந்த் குழுவுக்கு கால அவகாசம் நீடிப்பு

முல்லைப் பெரியாறு அணை விவகாரம் குறித்த அறிக்கை தயாரிக்கும் பணி இன்னும் முடிவடையாததால், இந்தப் பணியில் ஈடுபட்டுள்ள நீதிபதி ஆனந் தலைமையிலான நிபுணர் குழுவுக்கு மேலும் 2 மாத கால அவகாசம் அளித்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தக் குழு, ஏப்ரல் 30 ஆம் திகதிக்குள் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. அணை ஆய்வுக்கு கேரளா உள்ளிட்ட மாநிலங்கள் போதிய வசதியைச் செய்து தரவில்லை என்று அந்த மாநிலங்களுக்கு உச்ச நீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பிரிட்டன் கலவரம்: இந்திய வம்சாவளியினர் 24 பேர் மீது வழக்குப் பதிவு

லண்டனில், ஏற்பட்ட கலவரம் தொடர்பாக 24 இந்திய வம்சாவளியினர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி, பிரிட்டன் தலைநகர் லண்டனில் ஆயுதக் கடத்தலில் ஈடுபட்ட குற்றவாளி மார்க் டக்கன் என்பவர், பொலிஸார் நடத்திய என்கவுன்டரில் கொல்லப்பட்டார்.

இதைத் தொடர்ந்து லண்டனில் கலவரம் ஏற்பட்டது. கலவரத்தின் தொடர்ச்சியாக, நகரின் பல்வேறு இடங்களில் கொள்ளை, மோதல்கள் இடம்பெற்றன.

இந்தக் கலவரம் தொடர்பாக தற்போதுவரை, 160 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்தநிலையில் இந்த கலவரம் தொடர்பாக அந்நாட்டு நீதித்துறை அமைச்சகம் கடந்த முதலாம் திகதி அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அதில் 3 ஆயிரத்து இற்கும் அதிகமானோர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவர்களில் 1900 பேர் லண்டன் நீதிமன்றத்தில் முன்னிலையாகினர்.

மேலும் 24 இந்திய வம்சாவழியினர் மீது வழக்குப் பதிவு செய்யப் பட்டுள்ளதாகவும், இவர்களில் 18 பேர் லண்டன் நீதிமன்றத்தில் முன்னிலையாகியுள்ளனர். மீதமுள்ளவர்கள் பல்வேறு நீதிமன்றங்களில் முன்னிலையாகியுள்ளனர் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (வ)



தலைநகர் புதுடில்லியில் உள்ள ராம்லீலா மைதானத்தில் நடைபெற்ற பாரதிய ஜனதாக் கட்சியின் பொதுகூட்டத்தில் வெங்கையாநாயுடு, அருண் ஜெட்லி, அத்வானி, சுஷ்மா சுவராஜ் மற்றும் புதுடில்லி மாநில கட்சித் தலைவர் விஜேந்திராகுப்தா ஆகியோர் பங்கேற்றனர்.

## ஓடும் பஸ்ஸிலிருந்து தள்ளிவிட்ட நடத்துநர்

### பரிதாபமாக உயிரை விட்டார் இளைஞர்

**சத்னாவிலிருந்து ராம்பூருக்கு 20 ரூபா அறவிடுவதற்குப் பதிலாக நடத்துநர் 25 ரூபா வைக் கேட்டுள்ளார்.**

தேர்வு முடிவுகளை பார்த்து வந்த 21 வயது இளைஞர் ஒருவரை, 5 ரூபாவுக்காக ஓடும் பஸ்ஸில் இருந்து நடத்துநர் தள்ளி விட்டதில் தலையில் அடிபட்டு பரிதாபமாக உயிரிழந்தார்.

மத்திய பிரதேச மாநிலம் சத்னா மாவட்டம் ராம்பூரைச் சேர்ந்த சுபம்சிங், அந்த மாநில பொலிஸ்துறையில் பணியாற்றுவதற்காக பரீட்சை எழுதியிருந்தார்.

பரீட்சை முடிவுகளை காண்பதற்காக நேற்றுமுன்தினம் சத்னாவுக்குச் சென்றுவிட்டு, மீண்டும் பஸ்ஸில் ஊருக்குத் திரும்பியுள்ளார். சத்னாவிலிருந்து ராம்பூருக்கு 20 ரூபா அறவிடுவதற்குப் பதிலாக நடத்துநர் 25 ரூபா வைக் கேட்டுள்ளார். கூடுதலாக 5 ரூபா கேட்டதால் சுபம் சிங் கோபமடைந் தார்.

இதனால் இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. ஒரு கட்டத்தில் அது சண்டையாக மாறி, நடத்துநர் சுபம்சிங்கை ஓடும் பஸ்ஸில் இருந்து தள்ளிவிட்டார். இதில் கீழே விழுந்த சுபம்சிங் தலையில் அடிபட்டு பரிதாபமாக உயிரிழந்தார்.

இந்தச்சம்பவம் குறித்து அந்த மாவட்டப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (வ)

## சங்கரராமன் கொலை வழக்கு விசாரணை தடை நீக்கம்

சங்கரராமன் கொலை வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடையை உயர்நீதிமன்றம் நேற்று விலக்கிக்கொண்டது. காஞ்சி வரதராஜப் பெருமாள் கோயில் மேலாளர் சங்கரராமன் கொலை செய்யப்பட்டது தொடர்பான வழக்கு, புதுச்சேரி சிறப்பு நீதிமன்றில் நடந்து வருகிறது. இந்த வழக்கில் முக்கிய சந்தேக நபரானான ஜெயேந்திரர், சிறப்பு நீதிமன்ற நீதிபதி ராமசாமியுடன் பேச்சு நடத்தியதாக ஓடியோ கசட் வெளியானது.

இதனால் புதுச்சேரியில் நடந்து வரும் வழக்கு விசாரணைக்கு தடை விதிக்க வேண்டும் என சட்டத் தரணி சுந் தரராஜன், சென்னை உயர் நீதிமன்றில் வழக்குதொடர்ந்தார். இந்த மனுவை உயர்நீதிமன்ற நீதிபதி சுகுணா விசாரித்து சங்கரராமன் கொலை வழக்கு விசாரணைக்கு தடைவிதித்தார். (வ)

## நதிகளை இணைக்கலாம் உச்சநீதிமன்றம் அனுமதி

### மத்திய, மாநில அரசுகள் நதிநீர் இணைப்புத் திட்டத்தின் கீழான திட்டங்களை செயற்படுத்தலாம்

நதிகள் இணைப்புத் திட்டத்துக்கு உச்சநீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது. இந்தத் திட்டத்தைச் செயற்படுத்தவும் வழிகாட்டவும் உயர்நிலைக் குழுவை அமைத்தும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மத்திய, மாநில அரசுகள் நதிநீர் இணைப்புத் திட்டத்தின் கீழான திட்டங்களை செயற்படுத்தலாம் என்றும் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

மத்திய நிதி, நீராதாரங்கள், திட்டக் குழு, தன்னார்வ நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கொண்ட உயர்நிலைக் குழு இந்தத் திட்டங்களைச் செயற்படுத்த உறுதுணையாக இருக்கும் என்றும் உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

நதிநீர்த் திட்டங்களை செயற்படுத்துவதற்கான காலக்கெடுவையும் இந்தக் குழுவே நிர்ணயிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## மாவோயிஸ்ட்டுக்களால் பாதித்த மாநிலங்களில் பொலிஸ் நிலையங்கள்

**ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திற்கும் தலா ரூ. 2 கோடி வீதம் ரூ. 120 கோடி ஒத்துக்கீடு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது**

மாவோயிஸ்டுகள் பாதிப்புக்குள்ளான மாநிலங்களில் கூடுதலாக 400 பொலிஸ் நிலையங்கள் அமைக்க, ரூ.120 கோடியை மத்திய அரசு ஒதுக்கியுள்ளது.

இந்தியாவில் ஜார்க்கண்ட், சத்தீஸ்கர், மேற்கு வங்கம், ஒரிசா, மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, பீகார், ஆந்திரா ஆகிய மாநிலங்களின் வனப்பகுதிகளில் மாவோயிஸ்டுகளின் ஆதிக்கம் நிறைந்த சில மாவட்டங்கள் உள்ளன.

இவர்களால் பொலிஸார் மற்றும் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். கடந்த 2011ஆம் ஆண்டில் மாவோயிஸ்ட்டுகளால் 447 பொதுமக்களும், 142 பாதுகாப்பு படையினரும் கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்களை ஒடுக்க மத்திய அரசு ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றை வகுத்து வருகிறது. இந்தத்திட்டத்துக்காக இதுவரை ரூ.1,391 கோடி செலவிட்டுள்ளது. சரணடையும் நக்சல்களுக்கு மறுவாழ்வு திட்டங்களையும் செயற்படுத்தி வருகிறது.

இந்த நிலையில் பாதுகாப்புத் தொடர்பான மத்திய அமைச்சரவைக் கூட்டம் நடந்தது. இந்தக்கூட்டத்தில் நாடு முழுவதும் 8 மாநிலங்களில் 83 மாவட்டங்கள் நக்சல்களால் பாதிப்புக்குள்ளான மாவட்டங்களாக கண்டறியப்பட்டுள்ளன.

இந்தமாவட்டங்களில் தற்போது 400 பொலிஸ் நிலையங்கள் அமைப்பதற்கு மத்திய அரசு ரூ.120 கோடியை முதற்கட்டமாக ஒதுக்கியுள்ளது. இவற்றில் பீகாரில் 85, சத்தீஸ்கர் 75, ஜார்க்கண்ட் 75, ஒரிசா 70, மேற்குவங்கம் 18, மத்திய பிரதேசம் 12, என்று 400 பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திற்கும் தலா ரூ. 2 கோடி வீதம் ரூ. 120 கோடி ஒத்துக்கீடு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளன.

## ஸ்டாலினுக்கு அமெரிக்க உயர் விருது

தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலினுக்கு அமெரிக்க நாட்டின் மிக உயரிய விருதான கென்டக்கி கேணல் (Kentucky Colonel) விருது வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தி.மு.க. தலைமைக் கழகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கென்டக்கி மாகாணத்தின் மிக உயரிய விருதான இந்த விருதை 1812 ஆம் ஆண்டு இந்த மாகாணத்தின் முதல் ஆளுநரான ஐசாக் ஷெல்பியால் அறிமுகப்படுத்தி வைத்தார்.

சமுதாயப் பங்களிப்பு, நாட்டுக்கு செய்த சேவை மற்றும் சிறந்த சாதனைகளுக்காக இந்த விருது வழங்கப்படுகிறது. இந்த விருதுகளைப் பெறுவோர்கள் கென்டக்கி மாகாணத்தின் நல்லெண்ணத் தூதராகவும், உலகில் உள்ள மிகச் சிறந்த மனிதர்களுள் ஒருவராகவும் கௌரவிக்கப்படுவர்.

அமெரிக்க நாட்டின் முன்னாள் ஜனாதிபதிகள் லிண்டன் பி.ஜான்சன், ரொனால்ட் ரீகன், வின்ஸ்டன் சர்ச்சில், ஜோர்ஜ் புஷ், கிளின்டன், குத்துச் சண்டை வீரர் முகமது அலி உள்ளிட்டோர் இந்த விருதைப் பெற்றுள்ளனர்.

விருது வழங்கப்பட்டமை தொடர்பாக கென்டக்கி மாகாண ஆளுநரின் செயலாளரும், உலக அமைதிக்கான தூதருமான ஜார்ஜ் ரீப் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்ததாவது:



சேவையாற்றுபவர்களுக்கு வழிகாட்டும் விளக்காக மு.க.ஸ்டாலின் உள்ளார் என்றும், விருதைப் பெற்றதன் மூலமே விருதுக்கே ஸ்டாலின் பெருமை சேர்த்துள்ளதாக அவர் கூறியுள்ளார். (வ)

# இளைஞர், யுவதிகளுக்கு பலம் சேர்க்கும் HNB வழங்கும் யௌவனம் அபிமானம்

சிறந்த எதிர்காலம் ஒன்றை பெற்றிடக் காத்திருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு யௌவனம் அபிமானம் வேலைத்திட்டம் பேருதவியாய் அமையவுள்ளது. 'யௌவனம் அபிமானம்' கணக்கு வைப்பாளர்களுக்கு விசேட யௌவன அபிமான கணக்குப் புத்தகமும் வீசா டெபிட் அட்டையும் வங்கி வழங்கும்.

வாழ்க்கையில் முன்னேறக் காத்திருக்கின்ற இளைஞர், யுவதிகளுக்கு தேவையான வசதிகளையும் வளங்களையும் வழங்கி தொழிற் சந்தையை விருத்திசெய்து தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.


18-30 வயதுக்குட்பட்ட இளைஞர், யுவதிகள் இத் திட்டத் தில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். இந்தத் திட்டத்திற்கமைய இளைஞர் அபிவிருத்தித் திட்டங்கள் பலவற்றை நாடு தழுவிய ரீதியில் HNB ஏற்பாடு செய்துள்ளது. இதனூடாக ஆங்கில மொழி விருத்தி, வர்த்தகம், கட்டட நிர்மாணம், தொலைத் தொடர்பாடல், மோட்டார் தொழில்நுட்பம் மற்றும் விவசாயம் தொடர்பான அறிவூட்டல்களையும் அது வழங்கவுள்ளது.

**வாழ்க்கையில் முன்னேறக் காத்திருக்கின்ற இளைஞர், யுவதிகளுக்கு தேவையான வசதிகளையும் வளங்களை யும் வழங்கி தொழிற் சந்தையை விருத்திசெய்து தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.**

யௌவனம் அபிமானமானது சேமிப்புக் கணக்கு, தனிநபர் கடன், சிறிய தொழில் முயற்சிக் கடன், வாகனக் கடன், கல்விக் கடன், வீடமைப்புக் கடன் மற்றும் விசேட காப்புறுதி ஆகியவற்றை வழங்குகின்றது.

மேலும் நாட்டிலுள்ள முன்னணி ஒன்றிணையும் நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள உதவுகிறது. கருத்துப் பரிமாறல் மூலம் உண்மையான சந்தை நிலவரங்களை அறிந்து கொள்ள உதவுகின்றது. தனிப்பட்ட திறன் விருத்திப் பயிற்சி மட்டும் செயற்திறன் மிக்க இணையத் தளம் (www.ya.lk, www.yauwanbhiana-hnb.lk) உங்கள் தனிப்பட்ட திறனையும் சமூகத் தொடர்புகளையும் நிபுணத்துவம் மிக்கதாக்கிக் கொள்ள உதவுகின்றது. (த)

# லக்ஸ் பேர்பிள் லோட்டஸ்




கொழும்பு, பெப்.28

பெண்களின் சருமப் பராமரிப்பு தயாரிப்புகளை வழங்குவதில் முன்னணியில் திகழும் லக்ஸ், அண்மையில் தனது மற்றுமொரு புதிய ரகத்தை அறிமுகம் செய்துள்ளது. இதற்கு ''லக்ஸ் பேர்பிள் லோட்டஸ்'' என பெயரிடப்பட்டுள்ளது. அழகு சேர்த்திடும் எண்ணெய் வகைகளை கொண்டு தயாரிக்கப்படும் இந்த புதிய பேர்பிள் லோட்டஸ் சோப் வகை தற்போது இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த புதிய ரகம் குறித்து யுனிலீவர் நிறுவனத்தின் சரும பராமரிப்புத் தயாரிப்புகளின் சந்தைப்படுத்தல் அதிகாரி சர்மிளா பண்டார கருத்துத் தெரிவிக்கையில், ''நறுமணத்துடன் திகழ் வதற்கும், நறுமணத்துடனான சிகிச்சை பெற்றுக் கொள்வதற்கும் பெருமளவான இளம் பெண்கள் விரும்புகின்றனர். ஆகக்குறைந்தது ஒரு நாளைக்கு சில நிமிடங்களாவது தமது வேலைப்பழுவை குறைத்துக் கொள்ளும் நோக்கில் இந்த சிகிச்சையை பெற்றுக் கொள்வதில் ஆர்வம் காண்பிக்கின்றனர். இந்த புதிய ரகத்தை அறிமுகப்படுத்தியுள்ளதன் நோக்கம், இலங்கையர்களின் சிந்தனைக்கு மிகவும் அண்மித்ததாக காணப்படுவதால் நவீன பாணியில் தமது வாழ்க்கை நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பெண்களுக்குத் தீர்வாக அமையும் வகையில் உள்ளது'' என்றார். (த)

**அழகு சேர்த்திடும் எண்ணெய் வகைகளை கொண்டு தயாரிக்கப்படும் இந்த புதிய பேர்பிள் லோட்டஸ் சோப் வகை தற்போது இலங்கையில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.**

# றிட்ஸ்பரி நிறுவன அனுசரணையில் ஈரநிலங்கள் குறித்த விழிப்புணர்வு

இயற்கை வனப்புமிக்க தேசத்தின் ஈர நிலங்கள் குறித்த பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லவுள்ளதாக றிட்ஸ்பரி சொக்லேட் வகைகளை தயாரிக்கும் சிபிஎல் பூட்ஸ் இன்டர்நஷனல் நிறுவனம் அறிவித்துள்ளது. இது குறித்த அறிவிப்பை நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் உலக ஈரநிலங்கள் தின நிகழ்வுகளில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கொண்டிருந்தார்.

''ஈரநிலங்கள் மற்றும் சுற்றுலாத்துறை'' எனும் தொனிப்பொருளில் இந்த முறை உலக ஈரநிலங்கள் தின நிகழ்வுகள் அண்மையில் பத்தரமுல்லை வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் விமரிசையாக இடம்பெற்றது.

இம்முறை விசேட அம்சமாக, ''றிட்ஸ்பரியுடன் ஈரநிலங்கள் வினா விடைப் போட்டி'' பாடசாலை மாணவர்களிடையே முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் அன்பளிப்புகள் வழங்கும் நிகழ்வு அமைந்திருந்தது. றிட்ஸ்பரி சொக்லேட் வகைகளின் மூலம் பூரண அனுசரணை வழங்கப்பட்டிருந்த இந்த வினா விடைப் போட்டிகளில், பாடசாலை, கோட்டம், வலயம், மாவட்டம் மற்றும் தேசிய ரீதியில் வெற்றி பெற்றோர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். தேசிய மட்டத்தில் இடம்பெற்ற போட்டிகளில் முதலாமிடத்தை களுத்தறை ஞானோதய மஹா வித்தியாலயத்தின் பி.ஷனீகா ஹேமந்தி வெற்றிபெற்றிருந்தார். இரண்டாமிடத்தை காலி கிறிஸ்துதேவ மஹா வித்தியாலயத்தை சேர்ந்த எச்.எம்.ருவனி ஹேமந்திகா வெற்றிபெற்றிருந்தார். மூன்றாமிடத்தை கலேவெல வீரகெட்டிய விமலரத்ன மஹா வித்தியாலயத்தின் ஆர்.டி.தேவிந்திர பிராஹாஷ்வர் வெற்றிபெற்றிருந்தார். (த)



**''ஈரநிலங்கள் மற்றும் சுற்றுலாத்துறை'' எனும் தொனிப்பொருளில் இந்த முறை உலக ஈரநிலங்கள் தின நிகழ்வுகள் அண்மையில் பத்தரமுல்லை வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் விமரிசையாக இடம்பெற்றது.**

## கருத்தரங்கு

சந்தைப்படுத்தல் விழிப்புணர்வுக் கருத்தரங்கு 2012 என்னும் தொனிப்பொருளில் SLIM என்னும் நிறுவனம் எதிர்வரும் 5ஆம் திகதி யாழ். நூலகக் கேட்போர் கூடத்தில் முழுநாள் கருத்தரங்கு ஒன்றை இலவசமாக நடத்தவுள்ளது.

இதற்கு அனுசரணையை HNB ASSURANCES யாழ். வலயம் மேற்கொண்டுள்ளது. ஆர்வமுள்ள அனைவரும் முன்கூட்டியே தங்கள் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் திருப்தியான தமது சேவைகளை வழங்கமுடியும். பதிவுகளை ஸ்ரான்லி வீதியிலுள்ள HNB ASSURANCES வலய அலுலகத்தில் மேற்கொள்ள முடியும். (த)

## அடகுச் சேவை

இலங்கை வங்கி அச்சுவேலி கிளையில் வேலை நாள்களில் பிற்பகல் 5 மணி வரையும் நகை அடைவுக் கடன் சேவையை வாடிக்கையாளர்கள் பெறலாம் என அறிவிக்கப்பட் டுள்ளது.

கடந்த காலங்களில் நகை அடகுக் கடன்சேவை, வங்கி வேலை நேரம் வரையுமே மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது நகை கடன் சேவை நேரம் பிற்பகல் 5 மணிவரை நீடிக்கப்பட்டிருப்பதாக அச்சுவேலி இலங்கை வங்கி முகாமையாளர் த. புவனேந்திரன் அறிவித்துள்ளார். (த-11)

# இந்தியாவின் மதுரா பெஷன் ஹமீடியா ஒப்பந்தம் கைச்சாத்து

### மூன்றாண்டுகளுக்கு ஆடை இறக்குமதி

கொழும்பு, பெப்.26

இலங்கையின் ஆண்கள் ஆடைத் துறையில் நிபுணத்துவம் பெற்ற முன்னணி நிறுவனமாக திகழும் ஹமீடியா, இந்தியாவின் மிகப் பெரியதும் மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருவதுமான ஆடை உற்பத்தி நிறுவனமான மதுரா பெஷன் அன்ட் லைவ் ஸ்டைல் உடன்ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளது. Louis Philippe, Van Heusen, Allen Solly, Peter England போன்ற முன்னணி வர்த்தக குறியீடுகளிலான ஆண்கள் ஆடைகளை இறக்குமதி செய்து, இந்நாட்டில் விநியோகிப்பதற்கு இடமளிக்கும் வகையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

மூன்றாண்டுகளுக்கான இந்த ஒப்பந்தமானது மதிப்புமிக்க பிரமுகர்கள் மற்றும் ஊடகத்துறை சார்ந்தோர் முன்னிலையில், ஹமீடியா நிறுவனத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் ஹுசைன் சாதிக் மற்றும் மதுரா பெஷன் அன்ட் லைவ் ஸ்டைல் நிறுவனத்தின் பிரதம தொழிற்பாட்டு அதிகாரி சொஹைப் பரூக்கி ஆகியோரினால் 2012 பெப்ரவரி 14ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

Adidas, Lee, Wrangler, Raymond, Park Avenue போன்ற பல்வேறு மிகவுன்னதமான சர்வதேச வர்த்தக குறியீடுகளின் ஏக விநியோக முகவர் அந்தஸ்தினை ஹமீடியா நிறுவனம் தற்போது அனுபவித்து வருகின்றது. இந்நிலையில் மதுரா பெஷன் அன்ட் லைவ் ஸ்டைல் நிறுவனத்துடனான இந்த ஒன்றிணைவானது, ஹமீடியாவின் தற்போதைய உற்பத்தி வரிசைகளை மேலும் விஸ்தரிப்பதுடன் அதன்மூலம் இலங்கை வாடிக்கையாளர் களுக்கு வழங்கிவரும் ஆடையுற்பத்திகளையும் மேலும் மேம்படுத்துகின்றது. (த)

**Louis Philippe, Van Heusen, Allen Solly, Peter England போன்ற முன்னணி வர்த்தக குறியீடுகளிலான ஆண்கள் ஆடைகளை இறக்குமதி செய்து, இந்நாட்டில் விநியோகிப்பதற்கு இடமளிக் கும் வகையில் இந்த ஒப்பந் தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.**

# இலங்கையின் முதலாவது ஈபுக் ஸ்ரோர்

புத்தக வெளியீட்டு நிறுவனமான எம்.டி.குணசேன மற்றும் மொபைல் தொழில்நுட்ப தீர்வைகளை வழங்கும் நிறுவனமான மைக்குரோ இமேஜ் ஆகியவற்றுடன் இணைந்து வாசிப்புத்துறையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்த எடிசலாட் முன்வந்துள்ளது. இலங்கையின் முதலாவது ஈபுக் ஸ்டோரினையும் அறிமுகம் செய்துள்ளது. இதன் மூலம் இலங்கையின் இலக்கியத்துறைக்குள் டிஜிட்டல் தொழில்நுட்பம் உள் வாங்கப்பட்டுள்ளதுடன், எந்தவொரு பிரத்தியேக கணினி, அன்ட்ரொயிட் அல்லது அப்பிள் கையடக்க தொலைபேசிகளின் மூலம் இந்த சேவையை பெற்றுக் கொள்ள முடியும். இந்த ஈபுக் ஸ்ரோர் அனைத்து வலையமைப்பை சேர்ந்த பாவனையாளர்களுக்கும் இலவசமாக உட்புகக்கூடிய வகையில் வகைப்படுத்தப்பட்டுள்ளது.



இந்த ஈபுக் ஸ்ரோரில் உள்நாட்டில் வெளியிடப்படும் ஆங்கில, சிங்கள மற்றும் தமிழ் மொழி மூல புத்தகங்களை டிஜிட்டல் முறையில் கொண்டிருக்கும். வாடிக்கையாளர்கள் தமது பீசி, டப்ளட் மற்றும் ஸ்மார்ட் ஃபோன்களின் ஊடாக இந்த ஸ்ரோருக்கு விஜயத்தை மேற்கொண்டு தமக்கு விருப்பமான ஈபுக்களை தெரிவு செய்து கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது இந்த புக்ஸ்ரோரில் கல்விசார் வெளியீடுகள், சஞ்சிகைகள், பிள்ளைகளுக்கான புத்தகங்கள், சமய சார்பான விடயங்கள், வர்த்தக மஞ்சரிகள் போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் காலத்தில், பாடசாலை புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகள் போன்றவற்றையும் உள்ளடக்க திட்டமிடப்பட்டுள்ளது.


எடிசலாட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி துமிந்திர ரத்நாயக்க கருத்து தெரிவிக்கையில், ''ஈபுக் றீடர்கள் மற்றும் ஈபுக் ஸ்ரோர்கள் போன்றன சர்வதேச ரீதியில் புகழ்பெற்று வருகின்றன. இவற்றின் அனுகூலங்களை இலங்கையை சேர்ந்தவர்களுக்கும் வழங்க நாம் முன்வந்துள்ளோம். இந்த புதிய தொழில்நுட்பம், வாசகர்களுக்கும், வெளியீட்டாளர்களுக்கும் பயனளிக்கக்கூடிய வகையில் அறிமுகம் செய்துள்ளோம். சர்வதேச ரீதியில் அணுகக்கூடிய வகையில் இந்த தொழில்நுட்ப சேவையை நாம் வடிவமைத்துள்ளமையினால், எமது படைப்புகள் சர்வதேசத்துக்கும் கொண்டு செல்வதற்கான ஒரு அடித்தளமாகவும் அமைந்துள்ளது'' என்றார். (த)

## கேட்டீர்களா?

# வியனம்

இந்தப் பக்கமும் கொஞ்சம்
முகம் திருப்பினால் என்னவாக்கும்!

தொடர்பாடல் உலகமெண்டு சொல்லுறாங்கள். அது உண்மைதான் எண்டது அண்மையிலைதான் எனக்கு விளங்கிச்சுது.நடுராத்திரியிலை பெற்றோல், மண்ணெண்ணெய்க்கு விலை கூட்டினதோடை விடிய இஞ்சையும் விலை ஏறிட்டுது. மின்சாரம் மாதிரி கொழும்பிலை விலை







கூட்டின உடனை இஞ்சையும் பட்டெண்டு கூடின மர்மம் பெரிசு கண்டியளோ. நடுராத்திரியிலை பாணுக்கு விலை கூட்டினாங்கள். இஞ்சை இரவோடை இரவாய்ப் புது மா வந்து குழைச்சு புது விலையிலை பாண் வருகுது. தவிச்ச முயல் அடிக்கிறது எண்டு கிராமத்திலை சொல்லுறது இதைத்தான் பாருங்கோ!

எங்களிட்டை எல்லாம் இருக்குது. லேபலுகளோடை நுகர்வோரைப் பாதுகாக்கிற அமைப்புக்கள் செயற்படுகுது. ஆனால் விலை கூட்டுறது தொடர்பாய் அவைக்குத் தெரியாது. விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம் எண்ட ஒண்டு இருக்குதாம். அதுக்கெண்டு ஒரு திணைக்களம், அலுவர்கள் இருக்கினையாம். அதைப் போலை நிறுத்தல் அளவை ஒழுங்குச் சட்டம், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் எல்லாம் இருக்குதாம். விலை கூட்டிறதெண்டாலும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையிட்டை அனுமதி பெற வேணுமாம்.

ஆனால் இதுகளெல்லாம் இஞ்சை செயற்படுகுதோ எண்டு எண்ணவேண்டிக் கிடக்குது. இந்தியாவிலை அப்புக்காத்துமார் இப்பிடியான செயலுகளாலை பொதுமக்கள் பாதிக்கப்பட்டால் பொதுநல வழக்குகளைத் தாக்கல் செய்வினை.இஞ்சை அப்பிடியான செயற்பாட்டிலை ஆரும் ஈடுபட்டால் அது பெரிய விசயம் பாருங்கோ!

கண்டபடி சுண்ணாம்புக் கல்லுகளை அகழுறாங்கள். கேக்க ஆக்களில்லை. வழக்குப் போடவும் ஆரும் யோசிக்கேல்லை. இப்பிடியே போனால் இரணைமடு என்ன மகாவலி கங்கை வந்தாத்தான் எதிர்காலத் திலை எங்கடை சனத்துக்குத் தண்ணி கிடைக்கும். இரும் போடை சேர்த்து எங்கடை அரும் பொருளுகளும் போய்ச் சேருது.

மண்ணெண்ணெய்க்கு மானியந் தா எண்டு சிங்கள நாட்டைப் போலை மன்னாரிலை விவசாயியள் ஆர்ப்பாட்டம் செய்யினை.இஞ்சை கப்சிப். எவ்வளவு சுமையை எங்கடை முதுகிலை ஏத்தினாலும் நாங்கள் அதையெல்லாந் தாங்கக் கூடிய யாழ்ப்பாணக் 'கழுதையள்' பாருங்கோ! அதாலை நாங்கள் எந்த எதிர்ப்பையும் வெளியிடமாட்டம். மாறாக மிகப் பவ்வியமாய் தயவு கூர்ந்து மண்ணெண்ணெய் மானியம் தாங்கோ எண்டு பணிவுடன் கேட்டுக் கொள்ளத்தான் எங்களாலை முடியும்.

அரசியற் பிரச்சினையைக் கான்டில் பண்ணுற அதே வேளை, எங்கடை சனத்தை அழுத்திற விசயங்களிலையும் எங்கடை எம்.பிமார் ஒருமித்துக் குரல் குடுக்க வேணும். அதுதான் உச்சத்துக்கு ஏத்தி வச்ச சனத்துக்கு நீங்கள் செய்யிற பெரிய காரியம் பாருங்கோ! வலிகாமம் வடக்கிலை எங்களைக் குடியேற விடு எண்டு வழக்குத் தாக்கல் செய்தது பெரிய விசயம். அதைப் போலை சனத்தின்ரை பிரச்சினையளைத் தீர்க்கிறதுக்கு சட்டத்தையும் ஒரு கருவியாய்ப் பாவிக்க வேணும். போதாதத்துக்கு தெற்கிலை இருக்கிற கட்சியள், அமைப்புகளோடை சேர்ந்து குரல் குடுக்க வேணும்.

ஏனெண்டால் இது ஒரு பொதுப் பிரச்சினை. இது ஏற்படுத்தப் போகிற எதிர்காலச் சமூகப் பிரச்சினையள் தொடர்பிலை கவனஞ் செலுத்த வேணும். வேலையில்லை. உழைப்புக்குப் போதின காசில்லை. ஆனா இளம்பெடி பெட்டையளின்ரை கையிலை கான் போனும், ஓடுறத்துக்கு மோட்டச் சைக்கிளும், வேறை செலவுகளுக்கான வாசலுகளும்.இப்பவே வழிப்பறி, திருட்டு, கொள்ளை எண்டு பேப்பரிலை ஒரே திடுக்கிடுற செய்தியள்.என்ன நேரம் என்ன நடக்கும் எண்டு தெரியாமல் கஷ்டப்பட வேண்டியிருக்குது. இப்பிடியே போனால், புதுப்புதுத் திருடங்கள் உருவாகுவினை. இதுகளையெல்லாம் தடுக்கிறது ஆர் பாருங்கோ? ஆக, சனத்தை வாட்டிற கன பிரச்சினையளிலை கவனம் செலுத்த வேண்டியிருக்குது.எங்கடை அரசியல் தலைமைத்துவங்களே! இதுகளிலையும் கொஞ்சம் முகம் திருப்புங்கோ!

விழிச்சான் குஞ்சு.

# ஆளுமை, ஆற்றல், மனிதநேயம் என்பவற்றை வளர்ப்பது கல்வியே

### மெய்வன்மைப் போட்டியில் கல்வி அமைச்சின் செயலாளர்

குருநகர், பெப்.28

கல்வி எமது ஆளுமையை, ஆற்றலை, மனிதநேயத்தை ஒழுக்கத்தை வளர்க்கிறது.

இவ்வாறு யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய வட மாகாண கல்வி, கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சிவலிங்கம் சத்தியசீலன் தெரிவித்தார்.

யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த 5 ஆம் திகதி யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் யாழ். திருக்குடும்ப கன்னியர்மடத்தின் அதிபர் அருட் சகோதரி தயாநாயகி செபமாலை தலைமையில் நடை பெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜே. ரூபசிங்கமும், கௌரவ் விருந்தினராக அருட்கலாநிதி மைக்கல் சௌந்தரநாயகம் அடிகளாரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய பிரதம விருந்தினர் சி.சத்தியசீலன் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த 150 வருடங்களாக சமூகத்துக்குச் சிறப்பாகச் சேவை புரிந்த இந்தப் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிக்கு இம்முறை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். மாணவர்களுக்கு கல்வியை வளர்க்கும் ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும். ஆசிரியர்களும் பெற்றோர்களும் இணைந்து செயற்பட்டால் அந்தப் பாடசாலை வளர்ச்சியடையும்.

இந்தப் பாடசாலைக்கு கூடைப் பந்தாட்ட மைதானம் தேவை என அதிபரால் என்னிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இப்பாடசாலையின் தேவைகளைச் செயற்படுத்துவதற்கு நான் என்னாலான முயற்சிகளை மேற்கொள்வேன்- என்றார். (த-51)

# கிராமப்புறப் பாடசாலை அபிவிருத்திக்கு அனைவரும் உதவ முன்வர வேண்டும்

### சிலிங்கோ அச்சுவேலி முகாமையாளர்

"கிராமப் புறங்களில் அமைந்துள்ள ஆரம்பப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கும் அங்கு பயிலும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் உதவுவதற்கு அனைத்துத் தரப்பினரும் முன்வர வேண்டும். இது காலத்தின் கட்டாயத் தேவையாகும்" என சிலிங்கோ லைவ் அச்சுவேலி முகாமையாளர் ஜெ.பிரதீப் தெரிவித்தார்.

பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாசாலையில் தரம் I வகுப்பில் இந்த வருடம் அனுமதி பெற்ற மாணவர்களுக்கு அச்சுவேலி ஒருங்கிணைப்பு வட்டம் (ஏ.சீ.சீ.) அச்சுவேலி மக்கள் வங்கியில் சேமிப்புக் கணக்குகளை ஆரம்பித்து வங்கி சேமிப்புப் புத்தகத்தைக் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே முகாமையாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்,

கிராமப்புறங்களில் அமைந்துள்ள ஆரம்பப் பாட சாலைகளின் நிலை கவலைக்குரிய நிலைக்கு வந்துள்ளது. காலப்போக்கில் இந்தப் பாடசாலை மூடப்பட வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டுள்ளது. இந்த விடயத்தில் சமூகப் பிரமுகர்களும் கல்வி நிர்வாகிகளும் தமது கவனத்தை அனுதாபத்தோடு செலுத்த வேண்டும்.

மிக நெருக்கடியான காலகட்டத்தில் போக்குவரத்து வசதியீனம், பாதுகாப்பு நிலை என்பனவற்றைக் கருத்தில் கொண்டு கிராமப்புற ஆரம்ப பாடசாலைகளை நாடிய பெற்றோர் இன்றைய இயல்பு நிலையில் நகர்ப் புறங்களை நோக்கியும் பிரபல பாடசாலைகளிலும் தமது பிள்ளைகளை சேர்த்துக் கொள்கின்றனர். தூர இடங்களுக்குச் சென்று கல்வி கற்பது நாகரிகமாக மாறி வருகிறது.

இந்த நிலை கிராமப்புற ஆரம்பப் பாடசாலைகளின் வளர்ச்சியில் பெரும்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த முப்பது வருடங்களுக்கு முந்திய காலப் பகுதியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி நிலையில் இருந்த கிராமப்புறப் பாடசாலைகளில் கல்வி கற்று கொண்டவர்களே இன்று உயர்பதவிகளிலும் புலம் பெயர்ந்து வெளிநாடுகளிலும் வளமுடன் வாழ்கின்றனர். இவர்களின் கருணையோடு கூடிய கவனம் இந்தப் பாடசாலைகளின் பக்கம் திரும்பவேண்டும்.

இந்த வகையில் புலம்பெயர்ந்த உறவுகளின் அனுசரணையுடன் செயற்படும் அச்சுவேலி ஒருங்கிணைப்பு வட்டம் கிராமப்புற ஆரம்பப் பாடசாலைகளுக்குரிய தேவைகளை அறிந்து பொருத்தமான முறையில் நிவர்த்தி செய்து வருகின்றது. இது பாராட்டத்தக்க முயற்சியாகும்.

ஆரம்பப் பிரிவு மாணவர்களின் உடல் உள வளர்ச்சியை கருத்தில் கொண்டு வதிவிடத்துக்கு அண்மையில் உள்ள ஆரம்பப் பாடசாலை களில் தமது பிள்ளைகளை சேர்த் துக்கொள்வதற்கு பெற்றோர் முன்வரவேண்டும். இதன் மூலம் ஆரம்பப் பாடசாலைகளும் பாதுகாக்கப்படும். பிள்ளைகளும் இயல்பு நிலையில் கல்வியைத் தொடர முடியும் - என்றார். (எ-11)

# நலன்புரி சங்க ஒன்றுகூடல்

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் ஊழியர் நலன்புரி சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூட லும் புதிய நிர்வாகிகள் தெரிவும் கடந்த 11 ஆம் திகதி திருநெல் வேலியில் அமைந்துள்ள சங்கத்தின் மாநாட்டு மண்டபத்தில் எஸ்.மலர் வண்ணன் தலைமையில் நடை பெற்றது. இந்த நிகழ்வுக்கு சங்கத்தின் தலைவர் லயன்ஸ் பி.ஆர். றஞ்சன், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், பணியாளர்கள் முன்னாள் பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய சங்கத் தலைவர் தமது உரையில், கூட்டுறவுப் பணியாளர்கள் இன்று மன வேதனையுடன் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கான ஊதியம் போதாது. கூட்டுறவுச் சட்ட விதிகள் தடையாக இருப்பதாலும் சங்கம் இலாபத்தில் இயங்க முடியாமல் இருப்பதாலும் சம்பளத்தை அதிகரிக்க முடியவில்லை. எதிர் காலத்தில் சங்கத்தை முன்னேற்ற பல முன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உங்கள் ஒத்துழைப்புடன் அந்தப் பணி சிறக்க வேண்டும். உங்களின் வாழ்வும் சிறக்க வேண்டும் என்று கூறினார்.

முன்னாள் முகாமையாளர் ஜெயக்கணேஸ், அலுவலக பணியாளர் எஸ்.சண்முகலிங்கம், முகாமைத்துவ உதவியாளர் பகீரதி மற்றும் இரு பணியாளர்கள் சங்கப் பணியில் இருந்து ஓய்வுபெற்றுச் சென்றதையிட்டு நலன்புரி சங்கத்தினரால் பிரியாவிடை வழங்கி நினைவுப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (த-45)

# நூலக ஆலோசனை சபைத் தெரிவு

சாவகச்சேரி, பெப்.28

சாவகச்சேரி நகரசபையின் நுணாவில் பொதுநூலக அபிவிருத்தி ஆலோசனைச் சபையின் பொதுக்கூட்டம் அண்மையில் நூலக மண்டபத்தில் நடைபெற்றது. நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது. தெரிவு செய்யப்பட்ட நிர்வாகிகள் விவரம் வருமாறு:

தலைவர் சு.புத்திசிகாமணி (சாவகச்சேரி நகரசபை, செயலாளர்), செயலாளர் - ந.சுந்தரலிங்கம்- (நூலகர்), பொருளாளர் - திருமதி ச.கருணாகரன், நிர்வாகக் குழு உறுப்பினர்கள்- க.முருகதாஸன், திருமதி கே.பார்த்தீபன், திருமதி வே. சியாமளா, செல்வி க.கமலச்செல்வி, என்.கே.எஸ்.உபேந்திரன், திருமதி ச. சுந்தரலிங்கம், வை.தனபாலசிங்கம், கே.எஸ்.ஆறுமுகம், ச.நாகராசா, வ.மிதுண். கணக்காய்வு உத்தியோகத்தர்- ந.தண்டாயுதபாணி, ஆலோசகர்கள்- க.மயில்வாகனம் (நகரசபை உறுப்பினர்) திருமதி செ.ஜெகதீஸன் (ச.ச.நி.உத்தியோகத்தர்). (த-9)

# புதிய நிர்வாகிகள்

நெல்லியடி கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய இயக்குநர் சபைத் தெரிவு கடந்த 19 ஆம் திகதி சங்க மண்டபத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் தலைமையில் நடைபெற்றது.

தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் விவரம் வருமாறு தலைவர்- செ. செல்வராசா, உபதலைவர்- சோ. கணநாதன், இயக்குநர் களாக சி.செகராசசிங்கம், க. கந்தசாமி, த. நவரட்ணம், பா. சசிகரன், நி. சுகுணகுமார். (எ-253)

* * *

மானிப்பாய் ப.நோ. கூ. சங்கத்தின் நவாலி கிளை 6 இன் பொதுச் சபைக் கூட்டம் அண்மையில் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் இ. தயாபரன் தலைமையில் நவாலி முருகானந்தா ச.ச. நிலைய மண்டபத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் இ.தயாகரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் சங்கத்தின் தலைவராக செல்லத்துரை நாகரத்தினமும் உப தலைவராக க. தர்மலிங்கமும், செயலாளராக பொன்னம்பலம் பொன்னுத்துரையும் தெரிவு செய்யப்பட்டதுடன் 4பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ம-100)

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-5673377, 021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' – மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## அரசால் மீண்டும் மீண்டும் மீறப்படும் மனித உரிமைகள்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 19ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் நேற்று ஆரம்பமானது.

இந்தக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்படும் என்ற எதிர்பார்ப்பினால், அதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து நேற்று நாடு முழுவதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

நாட்டின் எல்லாப் பாகங்களிலும் தமக்கு ஆதரவு உள்ளது என்பதைக் காட்டுவதற்காக வடக்கிலுள்ள நகரங்களிலும் மக்களைத் திரட்டி ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

வன்னியில் நடந்த இறுதிப் போரில் கொல்லப்பட்டவர்கள் மற்றும் காணாமற்போனவர்களின் உறவுகளுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நியாயம் வழங்கும்படி வலியுறுத்தியே ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் கொண்டு வரப்படுகிறது என்றபோதும், அதே பாதிக்கப்பட்ட மக்கள் மேலும் மேலும் துன்புறுத்தப்படுவதே இங்கு தொடர்கிறது.

நேற்றைய ஆர்ப்பாட்டத்துக்காக அழைத்து வரப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் போரால் தமது உறவுகளை இழந்தவர்களும் முன்னாள் போராளிகளின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் என்றே தகவல்கள் தெரிவிக்கின்றன. இராணுவத்தினரும் சுதந்திரக் கட்சியினரும் வீடு வீடாகச் சென்று மிரட்டாத குறையாக, உதவிப் பொருள்கள் தருவதாயின் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளவேண்டும் என்று அந்த மக்களுக்குத் தெரிவித்திருக்கிறார்கள்.

தாம் விரும்பிச் செல்லவில்லை என்றும், ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளாது விட்டால் பின்னாளில் ஏதாவது பிரச்சினைகள் வருமோ என்ற அச்சம் காரணமாகவே தாமும் பஸ்ஸில் ஏறிச் சென்றதாக மக்கள் தெரிவித்திருக்கிறார்கள். வன்னியில் உள்ள அரச ஊழியர்களும் கூட்டுறவுச் சங்கங்களும் மிரட்டப்பட்டு ஆர்ப்பாட்டத்துக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள்.

பல இடங்களில் வீதிகள் மறிக்கப்பட்டு அது வழியாகச் சென்றவர்கள் அனைவரும் ஆர்ப்பாட்டங்களுக்குப் பலவந்தமாகப் பிடித்து அனுப்பப்பட்டுள்ளார்கள்.

மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பது போன்றும் பட்ட காலிலேயே படும் என்பது போன்றும் ஆகிவிட்டது வன்னி மக்களின் நிலை. போரால் துன்புறுத்தப்பட்டவர்கள் அவர்கள். உயிர், உடைமை இழப்புக்களால் ஏற்பட்ட பாதிப்புகளில் இருந்து அவர்கள் இன்னும் மீண்டு வராத நிலையில், மேலும் மேலும் அவர்களின் மனித உரிமைகள் மீறப்படுகின்றன.

ஏற்கனவே ஏற்பட்ட இழப்புக்களுக்கும் கொடுமைகளுக்கும் நீதி கேட்டு நிற்கும் மக்களின் மனித உரிமைகள் மீண்டும் மீண்டும் நசுக்கப்படுகின்றன. அது பற்றி இலங்கை அரசுக்குக் கவலை ஏதும் இல்லை. உலக நாடுகளின் முன்னால் தமிழ் மக்களிடம் தனக்கும் ஆதரவு இருக்கிறது என்பதாகக் காட்டிக் கொள்வதற்கு எத்தகைய மனித உரிமைகளையும் மீறுவதற்கு அது தயாராக இருக்கிறது என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது.

தன் மீதான மனித உரிமைக் குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்வதற்கே தமிழ் மக்களின் மனித உரிமைகளை மீறத் துணியும் ஓர் அரசிடம் இருந்து நீதி, நியாயம் என்பவற்றை எப்படி எதிர்பார்க்க முடியும்?

அதுவும் பாதிக்கப்பட்ட மக்களின் மனித உரிமைகளே மீண்டும் மீண்டும் மீறப்படுகின்றன. வடக்கில் இராணுவமும் சிங்களப் பெரும்பான்மையினத்தின் கட்சிகளும் நிலை நிறுத்தப்பட்டிருப்பது இதற்காகத்தான் என்றே எண்ணத் தோன்றுகிறது.

# தெற்கு நோக்கி நகரும் மனிதாபிமான போர்



இந்த நாட்டின் அரசியல்வாதிகள் எவரும் வருமான வரி செலுத்துபவர்களல்லர். அமைச்சர்கள்,எரிபொருள், மின்சாரம், நீர்வசதி என்பவற்றை இலவசமாகவே பெறுகின்றனர். இவற்றுக்கு மேலதிகமாக வீட்டு வாடகை உட்பட வேறு பல படிகளுக்கும் அவர்கள் உரித்துடையவர்களாவர்.

■ *தமிழில் வீ.எஸ்.ரீ.*

அரசு பொதுமக்கள் மீது கொண்டிருக்கும் அக்கறை வெளுக்கத் தொடங்கியுள்ளது. உண்மையில் தன் நாட்டு மக்களின் நல்வாழ்வு குறித்த அக்கறையோடு இருக்கும் அரசு, அவர்கள் மீது தாங்க முடியாத பொருளாதார சுமையை சுமத்தியிருக்குமா?

நாட்டு மக்களை நேசிக்கும் அரசானால், பொருளாதாரச் சுமை காரணமாக தமது எதிர்ப்பைத் தெரிவிக்க வீதியில் இறங்கிய மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டிருக்குமா?

பொருள்களின் விலை அதிகரிப்பு விடயம் இன்னமும் முடிந்து விடவில்லை. எதிர்வரும் நாள்களில் ரயில் பயணக். கட்டணமும், நீர் வரிக் கட்டணமும் அதிகரிக்கப் படலாம். சிமெந்து, எரிவாயு, பாண், போன்றவற்றின் விலையும் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளன. மிகக் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் தமது வாழ்க்கைச் செலவை எதிர்கொள்வது சாத்தியமாகுமா?

ஆட்சியாளர்களுக்கு இவை ஒன்றும் தெரியாததல்ல. இந்த நாட்டின் அரசியல்வாதிகள் எவரும் வருமான வரி செலுத்துபவர்களல்லர். அமைச்சர்கள்,எரிபொருள், மின்சாரம், நீர்வசதி என்பவற்றை இலவசமாகவே பெறுகின்றனர். இவற்றுக்கு மேலதிகமாக வீட்டு வாடகை உட்பட வேறு பல படிகளுக்கும் அவர்கள் உரித்துடையவர்களாவர். ஆதலால் அவர்களுக்கு வரிச்சுமை மற்றும் வாழ்க்கைச் செலவு உயர்வு என்பன புரிவதில்லை.

ரூபாவின் மதிப்பிறக்கம், மற்றும் உலக சந்தையில் எரிபொருள்களின் விலை உயர்வு காரணமாகவே எரிபொருள்கள் உட்பட அத்தியாவசிய பொருள்களின் விலைகள் உயர்வடைகின்றன என்ற வாதம் தவறானது. இப் பொருள்கள் மீது அரசு விதிக்கும் வரிகள் காரணமாகவே விலைகள் உயர்வடைகின்றன. அவற்றை அரசு குறைத்துக் கொள்ளுமானால் பொருள்களின் விலை உயர்வைக் குறிப்பிட்ட அளவு குறைத்துக் கொள்ள இயலும்.

ஆட்சியாளர்களின் அநாவசிய நிர்வாகச் செலவினம் காரணமாக நிலைமை மேலும் உக்கிரமடைகிறது. எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்ட வேளை ஜனாதிபதி சிங்கப்பூருக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். நாடு திரும்பியதும் அவர் செய்த முதல் வேலை, கொழும்பு நகரைச் சுற்றி நிர்மாணிக்கப்படவுள்ள நவீன பாதைத் திட்டத்துக்கு அடிக்கல் நட்டதாகும். நாட்டின் ஏனைய பல நெடுஞ்சாலை அமைப்புத் திட்டங்களையும் அரசு முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளது.

இவை யாவும் பொருளாதார மற்றும் நிதிச் சிக்கல்களில் சிக்கியுள்ள நாடொன்றுக்கு அவசியமான வேலைத் திட்டங்களல்ல. அன்றாடங்காய்ச்சிகளை அதிகம் கொண்டுள்ள நாடொன்றுக்கு இவற்றால் நன்மையெதுவும் கிட்டப்போவதில்லை. விமான நிலையங்கள், நவீன விளையாட்டரங்குகள் என்பவற்றை விட நாட்டு மக்களுக்கு அத்தியாவசியத் தேவைகள் பலவுள்ளன.

இன்று அரச வங்கிகள் பலவும் கடும் நிதிச் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளன. பங்குச் சந்தை வர்த்தகம் மேலும் வீழ்ச்சியுறுவதைத் தடுக்கும் நோக்கில் அரசு, உழைக்கும் பொது மக்களின் சேமலாப நிதியைத் தனது தேவைக்குப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளது. உயர்வடைந்து செல்லும் எமது நாட்டின் கடன் சுமை, ரூபாவின் மதிப்பிறக்கம் காரணமாக மேன் மேலும் உயர்வடைய நேர்ந்துள்ளது.

மஹிந்த சிந்தனை அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் காரணமாக உலக பொருளாதாரச் சிக்கலால் நாட்டுக்குப் பாதிப்பு ஏற்படாது என பெருமையடித்து வந்த அரசு, இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பின்னடைவுக்கு உலக பொருளாதாரச் சிக்கலையே காரணம் காட்ட முனைகிறது. கடந்த கால மூடத்தனமான தனது செயற்பாடுகளிலிருந்து இப்போதாவது பாடம் கற்றுக் கொண்டு அரசு தனது ஏமாற்று நிர்வாக நடைமுறையை மாற்றிக் கொள்ளாதுவிடின் எதிர்காலத்தில் நாட்டின் பொதுமக்கள் தற்போதுள்ளதை விடப் பெரும் பொருளாதாரச் சிரமங்களுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும்.

நாட்டில் போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் முடிவடையவுள்ளது. விடுதலைப்புலிகள் ஆதரவாளர்களால் விடுக்கப்படும் எத்தகைய சவால்களையும் அரசியல், ராஜதந்திர, மற்றும் பிரசார ரீதியாக அரசு எதிர்கொள்ள வேண்டுமேயொழிய, ஆயுத பலத்தின் மூலம் எதிர்கொள்ள முனைதலாகாது. அரசு, பாதுகாப்புச் செலவினத்தை இத்தகைய உயர்ந்த மட்டத்தில் பேண முயல்வது, அவசியமற்ற ஒன்றாகும்.

புலிகளை அழித்தது விட்டதாக அறிவித்த பின்னரும் அரசு பாதுகாப்புச் செலவினத்தைக் குறைக்க முயலாததற்கான காரணம், சிலாப சம்பவம் மூலம் தெளிவாகியது. கட்டுநாயக்க சுதந்திர வலய ஊழியர்களின் அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டமும் இதே வகையிலேயே முறியடிக்கப்பட்டது.

இதிலிருந்து புலனாவதென்ன? தமது அதிகாரத்துக்கு அச்சுறுத்தல் ஏற்படுமானால், அரசு இன, மத, குல பேதம் எதுவும் பார்க்காது தனக்கு எதிரான அச்சுறுத்தலை ஆயுத பலத்தால் நசுக்கி ஒடுக்கிவிடப் பின் நிற்காது.

இதுவரை காலமும் நாட்டின் தமிழ் மக்கள் அரச விரோதிகளாகக் கருதப்பட்டு ஆட்சியாளர்களின் அதிகார பலத்தால் அடக்கி ஒடுக்கப்பட்டனர்.

ஆனால் சிங்களப் பொதுமக்கள் வாழும் பகுதிகளில் அண்மைக் காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் அரசு உண்மை முகத்தைக் காட்டுகின்றது. தமது அதிகார இருப்பைத் தக்க வைத்துக் கொள்ள , அரசுக்கு எதிராக எவர் கிளர்ந்தெழுந்தாலும் அவர்களை இரும்புக்கரம் கொண்டு அடக்க பின்னிற்க மாட்டார்கள் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது.

நாட்டின் பொருளாதார மற்றும் நிதிச் சிக்கல்களைப் புறமொதுக்கி வைத்துவிட்டு, இராணுவத்தைப் பலப்படுத்துவதன் மூலமும், அரசுக்கெதிராக கிளர்ந்தெழும் பொதுமக்களின் ஜனநாயக உரிமைகளை மறுக்க முனைகிறது .

ஆர்ப்பாட்டக்காரர்களைப் பயமுறுத்தி விரட்டி விடவே துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேரிடுகிறது என்ற வாதம் முன் வைக்கப்படுகின்றது.

ஆயினும் அத்தகைய துப்பாக்கிப் பிரயோகத்தால் உயிரிழப்பு ஏற்படாதவாறு காலின் கீழ் சூடு நடத்தப்பட வேண்டியது உரிய நடவடிக்கையேயல்லாது, உயிர் பறிக்கும் வகையில் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்வதல்ல. இடம்பெற்ற சம்பவங்களில் பொலிஸ் தரப்பினர் செயற்பட்ட விதத்தை வைத்துப் பார்க்கும் போது வட பகுதிப் பொதுமக்கள் இவர்களால் எந்தவிதத்தில் நடத்தப்பட்டிருப்பர் என்பதை ஊகிக்க முடிகிறது.

ஆட்சியாளர்களுக்கு வட பகுதித் தமிழ் மக்கள்தான் எதிரிகளாகத் தோன்றியதாகத் தென் பகுதிச் சிங்கள மக்கள் பலர் இதுவரை எண்ணியிருந்தனர். அது தவறென்பதை தென் பகுதியில் இடம்பெற்ற அண்மைக் காலச் சம்பவங்கள் தெளிவுபடுத்தியுள்ளன. தேவை ஏற்படுமானால், தென் பகுதிக்கு எதிராகவும் அரசு மனிதாபிமான நடவடிக்கை மேற்கொள்ளத் தயங்காது என்பதை நாம் தற்போது புரிந்து கொண்டாக வேண்டியுள்ளது. ✱

இராஜராஜன்

# காத்திருக்கும் காங்கேசன்துறை வீதி

வடக்கின் சகல மாவட்டங்களிலும் வீதிகளைப் புனரமைக்கும் செயற்பாடுகள் முழுவீச்சில இடம்பெற்று வருகின்றன. இதற்கென பல ஆயிரம் மில்லியன் கணக்கான நிதியும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

வடக்கில் வாழும் மக்கள் அவசியமான தமது அபிவிருத்தித் தேவையாக வீதி நிர்மாணத்தைக் கேட்கவில்லை. ஏனென்றால் கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக சொல்லொணாத் துயரங்களை அனுபவித்தவர்கள் இந்த மக்கள். இவற்றுள் இங்கு மோசமான நிலையில் காணப்படும் வீதிகளால் இவர்கள் அனுபவித்த இன்னல்களும் அடங்கும்.

ஆனால் தற்போது அமைக்கப்பட்டு வரும் வீதிகள் தொடர்பாக பல்வேறு முறைப்பாடுகள் மக்களிடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்த வீதிகள் அமைக்கப்படுவதால் மக்களுக்கு ஏற்படுகின்ற இடைஞ்சல்கள் வீதிகளின் தரம், இவை அமைக்கப்படுவதற்கு எடுக்கும் காலம், அமைக்கப்படும் முறை இப்படியாகக் குற்றச்சாட்டுகள் நீளுகின்றன.

தற்போது யாழ்ப்பாணத்திலே அமைந்துள்ள காங்கேசன்துறை வீதியின் அமைப்பு வேலைகள் இடம்பெற்று வருகின்றன. பருத்தித்துறை வீதிக்குப் பின்னர் இந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கெனப் பல கோடி ரூபா பெறுமதியான பல்வேறு நவீன இயந்திரங்கள் தருவிக்கப்பட்டு தரித்து நிற்கின்றன. நூற்றுக் கணக்கான பணியாளர்கள்- தென் பகுதியிலிருந்து அழைத்த வரப்பட்டவர்கள் நேர, காலம் பாரது பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

வீதி அகலிப்புக்கு ஏற்ற வகையில் இடைஞ்சலாகக் காணப்படும் கட்டடங்கள் உடைக்கப்பட்டு மீள நிர்மாணம் செய்யும் பணிகள் சில இடங்களில் இடம்பெறு வதைக் காண முடிகின்றது. வீதியோர மதில்களும் இடிக்கப்பட்டு புதிதாக உள்வாங்கிய நிலையில் அமைக்கப்படுகின்றன.

இதில் வேதனை தரும் விடயமொன்றும் இடம்பெற்று வருகிறது. வீதியோரத்தில் காணப்பட்ட, பல ஆண்டுகள் பழமை வாய்ந்த பெரிய விருட்சங்கள் வீழ்த்தப்படுகின்றமையே அந்த மனதுக்கு வேதனை தரும் விடயமாகும். ஏற்கனவே ஏராள மான வீதியோர விருட்சங்கள் கிளைமோர் அச்சத்தினால் அகற்றப்பட்டும் ஊனமாக்கப்பட்டும் உள்ள நிலையில் தற்போதும் இந்த அழிவுகள் தொடர்கின்றன.

இனி வரும் காலங்களில் களைத்து நிற்கும் பயணி யொருவன் ஒதுங்குவதற்கென மரநிழலை எதிர்பார்க்க முடியாது. சூரிய ஒளியிலும் தகிக்கும் வெப்பத்திலும் தகதக வென மின்னும் தார்ச் சாலையையே அவன் காணப் போகின்றான்.

மேலும் காங்கேசன் துறை வீதியின் வேலைகள் மிகவும் மந்த கதியில் இடம் பெறுவதாகவே பலரும் குறை கூறுகின்றனர். குறிப்பிட்ட ஒரு பகுதிக்குள்ளேயே வேலைகள் இடம்பெறுவதையும் காண முடிகின்றது. தினமும் இந்த வீதியூடாக பயணிக்கும் பயணிகளின் நிலைதான் பரிதாபகரமாக உள்ளது.

இடைக்கிடையே என்னதான் தண்ணீரைப் பாய்ச்சுகின்ற போதிலும் இங்கு எழுகின்ற தூசுப்படலம் மக்களைப் பெரிய சிரமத்துக்குள் இட்டுச் செல்கின்றது. அங்கு பணியிலுள்ள ஊழியர்கள் துணிகளால் தமது முகத்தை மூடிய நிலையில் காணப்படுகின்றனர். பிரயாணிகள் வேறு வழியின்றித் தூசிகளை உள்வாங்கி நோய்களுக்கு ஆளாகின்றனர்.

> “
> மருதனார் மடத்துக்கும், சுன்னாகம் ரொட்டியாலடிக்குமிடையில் ஒரு வழிப்பாதையில் அதுவும் மிகவும் குறு கலான இடத்தினூடாகப் பயணிக்க வேண்டிய நிலை. வீதியின் மேற்குப் பக்கத்திலேயே பயணத்துக்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. கொடியை அசைக்கும் ஊழியர்கள் ஏதோ தவறு விட்டிருக்க வேண்டும்.

மேலும், இங்கு மாறி ,மாறி இருபுறங்களிலும் வேலைகள் நடைபெறுவதால் எந்தப் பக்கத்தால் பயணிப்பதென்பதில் பயணிகள் திகைத்து நிற்கின்றனர். அதுவும் இரு புறங்களிலும் பச்சை மற்றும் சிவப்புக் கொடிகளுடன் காணப்படும் ஊழியர்களின் அனுமதி கிடைத்தால் மாத்திரமே பயணத்தைத் தொடர முடியும். அதுவரையில் காத்து நிற்க வேண்டியதுதான்.

சில தினங்களுக்கு முன்னர் இந்த வீதியில் இடம்பெற்ற சம்பவமொன்றைப் பயணி ஒருவர் அச்சத்தடன் பின்வருமாறு விவரிக்கின்றார். அன்று மாலை 6.15 மணியிருக்கும். மருதனார்மடத்துக்கும், சுன்னாகம் ரொட்டியாலடிக்குமிடையில் ஒரு வழிப்பாதையில் அதுவும் மிகவும் குறுகலான இடத்தினூாகப் பயணிக்க வேண்டிய நிலை. வீதியின் மேற்குப் பக்கத்திலேயே பயணத்துக்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. கொடியை அசைக்கும் ஊழியர்கள் ஏதோ தவறு விட்டிருக்க வேண்டும். பாதையின் இரு புறங்களிலிருந்தும் வாகனங்கள் செல்லத் தொடங்கின. வடக்குத் திசையிலிருந்து பாரம் ஏற்றிய நிலையில் லொறிகள் மேடுபள்ளங்களில் ஏறி இறங்கி அசைந்தாடியபடி வரிசையாக வந்து கொண்டிருந்தன. இதனால் பெரும் வாகன நெரிசல் அங்கு ஏற்பட்டது. பாரமேற்றிய லொறியொன்று செல்ல வழியில்லாது வீதியின் நடுவில் ஒதுக்கிவைக்கப்பட்டிருந்த கற்குவியலின் மீது இடதுபுறச் சக்கரங்களை ஏற்றியது . இதனால் வலதுபுறமாகச் சரிந்த நிலையில் எங்கே தடம் புரண்டு விழுந்து விடுமோமென்ற நிலையில் காணப்பட்டது. இதற்கு மிக அருகில் தரித்து நின்ற தனியார் பஸ்ஸினுள் அமர்ந்திருந்த பயணிகள், லொறி சரிந்து தமக்கு மேல் விழுந்து விடுமோவென்ற அச்சத்தில் உறைந்துபோய்க் காணப்பட்டனர். சிலவேளை பாரத் துடன் லொறி சரிந்து வீழ்ந்திருந்தால் பஸ் பயணிகளின் கதி அதோ கதியாகவே மாறியிருக்கும்.

இவ்வாறு தினமும் மயிர்க்கூச் செறியும் சம்பவங்கள் நிகழ்வதாகப் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் வீதியின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட போது மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்த மக்கள், தற்போது தாம் அனுபவிக்கும் வேதனையைக் காட்டிலும் முன்னைய மோசமான வீதி எத்தனைமடங்குமேலானது என்று கூற ஆரம்பித்து விட்டார்கள்.

மேலும் இந்த வீதியின் வேலைகளுக்கு இனிமேல் தான் சோதனை ஆரம்பிக்கப் போவதாகப் பலரும் கூறுகின்றனர். மக்களின் இல்லிடங்களும், பாடசாலைகளும், வணக்கத் தலங்களும், வர்த்தக நிலையங்களும் நெருக்கமாகக் காணப்படும் இடங்களினூடாக இந்த வீதியின் வேலைகளை நகர்த்தும் போது தான், சோதனைகளும், வேதனைகளும் ஏற்படப் போகின்றன.

ஏற்கனவே இந்த வீதி அமைக்கப்படுவது தொடர்பாக எதிர்ப்புக் குரல்களும் எழுந்துள்ளன. புரதான அடையாளங்கள் வீதி அகலிப்பின் போது அழிந்து விடப் போகின்றன என்பது தான் எதிர்ப்பவர்களின் வாதம்.

எது எப்படியோ, வீதி வேலைகளை ஆரம்பித்தாயிற்று. சோதனைகளையும் சவால்களையும் சமாளித்துப் புதிய அகன்ற காங்கேசன்துறைச்சாலை எவ்வாறு எப்போது பூரணமாக அமையப் போகின்றது என்பதைக் காலம் தான் மக்களுக்குக் கூறவேண்டும். ✦

# அத்திவாரமின்றி எழும் கட்டடங்கள்

சிசு

இளமையில் கல்வி சிலையில் எழுத்தென்பார்கள். ஆனால் இந்த காலத்திலும் சிலை யெழுத்தை தாமதித்து அறியும் பிள்ளைகள் வளரத்தான் செய்கிறார்கள்.இதற்கு இலங்கைத் தமிழ்ப் பரப்பில் கிடைக் கும் மிகக்கிட்டிய உதாரணமாக வன்னிச்சிறார்களின் கல்வி நிலைமை காணப்படுகின்றது.

> “
> பிள்ளைகள் யுத்தம் போட்ட பிச்சையினால் கருவாகியவர்கள். வேட்டுச் சத்தங்களை கேட்டே தாயின் வயிற்றை உதைத்தவர்கள்.



இப்பொழுது ஆரம்பக் கற்றலுக்காக தயாராகும் பிள்ளைகள் யுத்தம் போட்ட பிச்சையினால் கருவாகியவர்கள். வேட்டுச் சத்தங்களை கேட்டே தாயின் வயிற்றை உதைத்தவர்கள். உருவாக்கமும் கருவாக்கமும் அவர்களுக்கு பதுங்கு குழிகளுக்குள் தான் நிகழ்ந்தேறியது. பல குழந்தைகள் பதுங்கு குழிகளுக்குள்ளும் அகதி முகாம்களுக்குள்ளும் தான் பிரசவமானார்கள்.

வளர்ந்த சூழல் மிகவும் நெருக்கமான கலப்புக்களால் ஆனது.நல்லதும் கெட்டதும் அக்குழந்தைகளை தொடக்கம் முதலே செதுக்கியிருந்தது.

இயல்பாகவே ஆரோக்கியமுள்ள சூழலில் வளரும் பிள்ளை யொன்று கொண்டிருக்கும் மனவிருத்தியை விட இந்தப் பிள்ளைகளின் மனவிருத்தி பல்வேறுபட்ட நிலைகளாலும் மாற்றத்துக்குட்பட்டதொன்றாகவே உருவாகியிருந்தது.

இவ்வாறு பல புது விதங்களோடு அவர்கள் சொந்த இடம் திரும்பினார்கள். சேர்ந்த இடத்தில் புதியதொரு கற்றல் சூழல் இருந்திருக்க வேண்டும். ஆனால் கிடைத்ததோ அதற்கு மாறிலி. ஆரம்பக் கற்றலுக்கான மையங்கள் அப்போது தான் திருப்பி தொடக்கப் படவேண்டிய நிலைமை. தரையில் இருந்தும் மரங்களின் நிழலில் இருந்தும் கற்க வேண்டிய கட்டத்தில் பிள்ளைகள் இருந்தனர்.

கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளும் இலங்கையில் வேறெங்கும் கிடைக்காத வகையிலேயே அமைந்திருந்தது. எப்படி ஏறும் இந்தப் புதுக் கல்வி. அனைத்தையும் புதிதாய் பிரகாசத்தோடு காணத் துடிக்கும் வயதில் பலவற்றை இருட்டுக்குள் ளேயே கற்றனர். எப்போதோ பாடிய பழைய சிறுவர் பாடல்களையும். பாட்டி வடைசுட்ட கதைகளை யுமே அந்தப் பிள்ளைகள் இற்றைவரைக்கும் அறிந்திருக்கிறார்கள்.

சில தொண்டு நிறுவனங்கள் அளித்த உபகரணங்கள் தான் அவர்களுக்கான விளையாடு களம். கற்பிக்கும் ஆசிரியர் தனக்குத் தெரிந்த கற்பனாசக்திக்குட்பட்டு உருவாக்க கற்றுக் கொடுத்த விளையாட்டு சாமான்கள் தான் அவர்களறிந்த மிகப் பிரமாண்டமான விளையாட்டு மற்றும் புதிதறியும் உபகரணங்கள். ஆசிரியர்களும் என்ன செய்வார்கள். பிள்ளைகள் இப்போது வாழ்வதை விட மோசமான சூழலில் தான் அவர்களின் உலகமும் உருண்டது. முன்பள் ளிப் பிள்ளைகளுக்குக் கற்பிப்பது மிகவும் கடினமானது. அதனை குறைந்தளவிலான அறிவு விருத்தியுடன் மேற்கொள்வது சாத்தியமற்றது. அந்த சிரமத்தையும் பாராமல் கற்பிக்கும் ஆசிரியர்கள் போற்றப்படவேண்டியவர்கள். ஆயினும் அது நடைபெறுவது அரிது. மிகக் குறைந்தளவிலான ஊதியத்துடனேயே கற்பித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு எப்போதாவது வழங்கப்படும் கற்பித்தல் தொடர்பிலான பயிற்சிகள் கூட எந்தளவிற்கு சென்று சேர்கின்றது எனத் தெரியவில்லை.

இவ்வாறானதொரு சூழலில் கற்று வளரும் பிள்ளைகள் எதிர்காலத்தில் எப்படியிருப்பர்? இவ்விடயத்தில் அக்கறையோடு இருப்பவர்கள் அனைவரிடமும் இந்தக் கேள்வி மட்டுமேயுண்டு.

வீதிகளையும் கட்டடங்களையும் கட்டியெழுப்பி அபிவிருத்தியைக் காண நினைக்கும் யாரும் இந்த விடயத்தில் கரிசனையுடைவர்களாக இருப்பதாகத் தெரியவில்லை. இப்படியே வன்னியின் பிள்ளைப் பராயக் கல்வி ஆழமான கவனிப்பாரற்றுப் போகுமானால் அந்தப் பெருநிலத்தின் எதிர்காலம் சூனியமாகிப் போய்விடும்.

தற்காலத்தில் உலகம் முழுவதும் பிள்ளைப் பராயக் கல்வி பற்றிய கண்டுபிடிப்புக்களும் ஆராய்ச்சி முடிவுகளும் ஆரோக்கியமான வகையில் முன்வைக்கப் படுகின்றன. அது பெரும்பாலும் அபிவிருத்தியடைந்த நாடுகளது பிள்ளைகளை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டாலும் அரைவாசியாவது நம் போன்ற மூன்றாம் உலக நாடுகளில் வாழும் பிள்ளைகளுக்கு பொருந்திவரக் கூடியது. ஆனால் துரதிஷ்டம் என்னவென்றால் அது கூட நம் பிள்ளைகளின் திறன் விருத்திக்காக பிரயோகித்துப் பார்க்கும் தருணங்கள் குறைவாக உள்ளமையே. கோடிக்கணக்கில் பணத்தை வன்னியில் கொட்டும் அரச சார்பற்ற நிறுவனங்களாவது இவ்விடயத்தில் ஆழமான கவனிப்பைச் செலுத்துமாயின் அது முன்னேற்றத்துக்கு ஓர் அறிகுறியாகும். ✦

# சொந்தம்

'இந்த வீடு எனக்குச் சொந்தம்'என்று சொல்கிறோம். அதற்காக நாம் போகின்ற இடம் எல்லாம் அந்த வீட்டையும் தோளில் தூக்கி வைத்துக்கொண்டா போகிறோம்? அது முடியாத காரியம்.நாம் 'சொந்தம்' என்று நினைக்கிற பல விடயங்கள் நமக்குச் சொந்தமில்லை.

எட்டு லட்சம் ரூபா செலவு செய்து வீடு கட்டியிருப்பீர்கள். பணம் உங்களுடையது என்பதற்காக.அதிலே பல்லியும், எட்டுக்கால் பூச்சியும் வாழாமலா போய்விடுகிறன. அவை எல்லாம் அந்த வீடு தன்னுடைய தென்று நினைத்துக்கொண்டிருக்கும்! 'இவர் பத்து லட்சம் ரூபா சொத்துக்கு அதிபதி!' என்றார் ஒருவர். சொத்து எங்கே என்று கேட்டால்...

''நீதிமன்ற வழக்கில் இருக்கு! வென்று வரவேண்டும்!'' என்கிறார். 'எது சொந்தம்?' இதுதான் கேள்வி. இந்தக் கேள்விக்கு ஞானிகள் என்ன பதில் சொல்கிறார்கள்? அதை இப்போது பார்க்கலாம்.

ஒரு முனிவர் இருந்தார். அவர் முற்றும் துறந்த முனிவர் பற்றே இல்லாத பரமஞானி அவர். இன்றைக்கு ஓர் ஊரில் இருப்பார். நாளைக்கு இன்னோர் ஊரில் இருப்பார். ஒரு வேளை தான் சாப்பிடுவார். அதுவும் உப்பில்லாத சாப்பாடு. பொய் சொன்னால் அவருக்குப் பிடிக்காது பொய் சொல்பவர்கள் வீட்டில் சாப்பிடவே மாட்டார்!

ஒரு நாள் அவர் ஒரு ஊருக்குப் போய். ''இந்த ஊரில் உண்மை யானவர் யார்?'' என்று கேட்டார். 'அதோ ஒரு மாடி வீடு தெரிகிறதே; அந்த வீட்டில் ஒரு பண்ணையார் இருக்கிறார். அவர் மிகவும் உண்மையானவர், நேர்மையானவர். அடியார்கள் மீது பக்தி கொண்ட வர்; ஒரு லட்சம் செல்வம் உள்ளவர்; நான்கு பிள்ளைகள் அவருக்கு என்று பக்கத்தில் இருந்தவர்கள் சொன்னார்கள். உடனே இந்த முனிவர் அந்தப் பண்ணையார் வீட்டுக்குப் போனார். இதைப் பார்த்த உட்கார்ந் திருந்த பண்ணையார் உடனே எழுந்து ஓடிவந்து முனிவர் காலிலே வீழ்ந்தார்.

''தயவு செய்து தாங்கள் எங்கள் வீட்டில் வந்து சாப்பிட வேண்டும்'' என்றார். அவருடைய அன்பு, அடக்கம், பணிவு இவையெல்லாம் முனிவருக்குப் பிடித்துவிட்டது இருந்தாலும் 'அவர் உண்மையானவர் தானா' என்பதைச் சோதித்துப் பார்த்து விட்டுத்தான் அவருடைய வீட்டில் சாப்பிட வேண்டும் என்று முடிவு செய்துவிட்டார் முனிவர் ''ஐயா! உங்களுக்குச் செல்வம் எவ்வளவு உண்டு'' என்றார். ''சுவாமி! என்னிடம் இருபத்து இரண்டாயிரம் ரூபாய் உண்டு'' என்றார். ''குழந்தைகள் எத்தனை பேர்?'' என்று கேட்டார். ''சுவாமி! எனக்கு ஒரே மகன் தான்'' என்றார். ''உமக்கு வயது என்ன?'' என்று கேட்டார். ''சுவாமி! என்னுடைய வயது மூன்று வருடம், ஐந்து மாதம், ஏழு நாள் பதினாறரை மணி'' என்றார்.

முனிவருக்கு கோபம் வந்துவிட்டது! ''நீர் சொல்வது முழுவதும் பொய்யாக இருக்கிறது; உம்முடைய வீட்டிலே சாப்பிட்டால் என்னுடைய தவமே அழிந்துவிடும்'' என்று சொல்லிப் புறப்பட்டார்.

பண்ணையார் பதறிப்போய் அவர் காலிலே வீழ்ந்தார். ''சுவாமி! எனக்குப் பொய் சொல்லத் தெரியாது. நான் சொல்வதெல்லாம் உண்மைதான் '' என்றார். வரவு செலவுப் புத்தகத்தை எடுத்துக் காட்டினார். அதிலே இருப்புத்தொகை ஒரு லட்சம் ரூபாய் என்று இருந்தது.

''இருபத்திரண்டாயிரம் என்று பொய் சொன்னாயே!'' என்றார் முனிவர்.

''சுவாமி! ஒரு லட்சம் ரூபாய் பெட்டியிலே இருக்கின்றது; இதோ பாருங்கள்...22 ஆயிரம் ரூபாய் தருமம் செய்து இருக்கிறேன். தருமம் செய்த பணம்தானே என்னுடையது. பெட்டியிலே இருக்கிறது எப்படி எனக்குச் சொந்தமாகும்?'' என்றார்.

முனிவருக்கு ஆச்சரியம்; சரி! உமக்கு நாலு பிள்ளைகள் இருப்பதாகக் கேள்விப்பட்டேனே!'' என்றார்.

''எனக்குப் பிறந்த பிள்ளைகள் நாலு பேர் தான்; ஆனா என்பிள்ளை ஒருத்தன் தான்'' என்றார்.

''அது எப்படி'' என்றார் முனிவர்

''மகனே நடராஜா'' என்று கூப்பிட்டார் பண்ணையார்.''சீட்டு விளையாடிக்கொண்டிருக்கிறேன்; வர முடியாது'' என்றான் நடராஜன். ''மகனே வேல்சாமி!'' என்று கூப்பிட்டார். ''ஏன் இப்படி கூச்சல் போடுறாய்? பேசாமல் இரு'' என்றான் வேல்சாமி. ''மகனே சிவசாமி'' என்று கூப்பிட்டார். ''உனக்குப் புத்தி இருக்கா; ஏன் இப்படிக் கத்து கிறாய். இந்தப் பூமிக்கு சுமையாக இன்னும் ஏன் இருக்கிறாய்!'' என்றான் சிவசாமி. ''மகனே கந்தசாமி'' என்று கூப்பிட்டார் பண்ணை யார்.

கந்தசாமி உடனே ஓடிவந்து கைகட்டி நின்று. ''என்னப்பா வேண்டும்?'' என்று கேட்டான்!

''சுவாமி! இவன் ஒருத்தன்தான் என் பிள்ளை!'' என்றார்.

''சரி! வயது விடயம் எப்படி'' என்றார் முனிவர்.

''சுவாமி நான் ஒரு நாளைக்கு ஒன்றரை மணி நேரம்தான் வழிபாடு செய்கிறேன்; மற்ற நேரம் எல்லாம் இந்த உடம்புக்காக உழைக்கின் றேன்.

அடியேனுக்கு இந்த உடம்பு பிறந்து 60 வருடங்கள் ஆகின்றன. ஆனாலும் 5 வயதிலிருந்து வழிபாடு செய்த நேரம் தான் எனக்குச் சொந்தம். அதைக் கூட்டித்தான் வயதைச் சொன்னேன்!'' என்றார்.

முனிவர் மிகவும் சந்தோஷப்பட்டு அவருடைய வீட்டிலே சாப்பிட்டுவிட்டுப் போனாராம்.

இது பெரியவர் ஒருவர் சொன்னது. இதிலிருந்து எது 'நமக்குச் சொந்தம்' என்று விளங்குகிறது இல்லையா?



இந்தத் தகவலை உங்களிடம் சொல்வதற்கு முன்பே என் சிநேகிதர் ஒருவரிடம் சொன்னேன். அவருக்கு வயது 50 இருக்கும். சொல்லிவிட்டு ''இப்போது சொல்லுங்கள்; உங்களு டைய வயது என்ன?'' என்றேன். அதற்கு அவர்...

''இப்பதான் நான் பிறந்திருக்கி றேன்'' என்றார்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**



# சிறப்பான கல்விச் சேவையாற்றிய புலோலி சிக்கன கடனுதவிச் சங்கம்

(கடந்த வாரத் தொடர்ச்சி)



**கர்ணன்**

கடந்த 1985ஆம் ஆண்டு காலப்பகுதியில் சுமார் 20 அங்கத்தவர்களுடன் பிரபல தொழில் அதிபர் மு.பொ.வீர வாகுவினால் அங்குரார்ப் பணம் செய்து வைக்கப்பட்ட புலோலி மேற்கு சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம், சதாவதானி சனசமூகநிலையச் சுற்றாடலை கதிரைவேற் பிள்ளை வீதியின் இரு மருங் கும், பருத்தித்துறை தெணி யம்மை வீதியின் தெற்குப் பகுதியையும் சேர்ந்தவர் களையே அங்கத்தவர்களாகக் கொண்டு செயற் பட்டு வந்தது.

இந்தச் சங்கம் பெரு விருட்சமாக வளர்ச்சி பெற்று வந்த வேளையில் சங்கத்தின் தொழிற்பரப்பை, புலோலி மேற்கு கிராமசேவையாளர் பிரிவை பல கிராமசேவையாளர் பிரிவுகளாகப் பிரிக்கப்படு வதற்கு முன்னர் இருந்து வந்த புலோலி மேற்கு கிராமத்தவர்களை இந்தச் சங்கத்தில் இணைத்து இந்தச் சங்கத்தை பலம் பொருந்தியதாக, பொரு ளாதாரம் பலம் கொண்டதாக, புலோலிமேற்கு கிராமமக்கள் அனைவரினதும் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பாடுபட்டு உதவ வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்துக்கமைய 1993-1994 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பருத்தித்துறை வடம ராட்சி வடக்கு, பிரதேச செயலர் பிரிவில் புலோலி தென்மேற்கு, புலோலிமத்தி, புலோலிமேற்கு வியாபாரிமூலை ஆகிய நான்கு கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு இந்தச் சங்கத்தின் தொழிற்பரப்புகள் விஷ்தரிக் கப்பட்டது. இதுவரைகாலமும் அதாவது சங்கம் ஆரம்பிக்கப் பட்ட வேளையில் புலோலி மேற்கு கிராம சேவையாளர் பிரி வாக இருந்தமையால் சங்கத்தின் பெயரில் புலோலி மேற்கு என இணைக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்தக் கிராம சேவை யாளர் பிரிவு புதிதாகப் பிரிக்கப் பட்டபோது சங்கத்தின் பிரதான தொழிற்பரப்புத் தளமாக புலோலி மத்தி கிராம சேவையாளர் பிரிவே இருந்து வந்தது.

> தொழிற்பரப்பு எல்லை விஷ்தரிப்பைத் தொடர்ந்து 1993 ஆம் ஆண்டில் 370 அங்கத் தவர்கள் இருந்தனர். ஒரு வருடத்தில் மேலும் 11 பேர் அங்கத்தவர்களாக இணைந்து கொண்டனர். 1994 ஆம் ஆண்டில் சங்கத்தின் மொத்த தொகை 381 பேர்.

சங்கத்தின் தொழிற்பரப்பு மேலும் மூன்று கிராமசேவை யாளர் பிரிவுகளுக்கு விஷ்தரிக் கப்பட்டதைத் தொடர்ந்து சங்கம் சீராகச் சிறப்பாக இயங்கி மக்கள் பொருளாதார ரீதியாக கஷ்டங்களையும் சிரமங் களையும் அனுபவித்துவரும் வேளைகளில் பல் வேறு வகையான கடனுதவிகளை அவர்களுக்கு வழங்கியது. அவர்களின் வாழ்க்கை ஓட்டத்தை செம்மைப்படுத்துவதை நேரில் கண்டு கொண்ட அயற்கிராமங்களை அதாவது புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களும் சங்கத்தின் புதிய அங்கத்த வர்களாக இணைந்து கொள்ளத் தொடங்கினார்கள்.

தொழிற்பரப்பு எல்லை விஷ்தரிப்பைத் தொடர்ந்து 1993 ஆம் ஆண்டில் 370 அங்கத்தவர்கள் இருந்தனர். ஒரு வருடத்தில் மேலும் 11 பேர் அங்கத்தவர்களாக இணைந்து கொண்டதால் 1994 ஆம் ஆண்டில் சங்கத்தின் மொத்த அங்கத்தவர் தொகை 381 பேராக இருந்தது.

அவ்வேளை தனியார் உச்சக்கடன் எல்லை 15 ஆயிரம் ரூபாவாகவும் மொத்தக்கடன் எல்லை 25 லட்சம் ரூபாவாகவும் இருந்தது. 1993 ஆம் ஆண்டுக்கு முந்திய நிதி ஆண்டில் இந்தச் சங்கம் 6 ஆயிரத்து 882 ரூபா 9 சதத்தை இலாபமாகப் பெற்றிருந்தது. ஆனால் அடுத்தாண்டில் அதாவது 1993 - 1994 ஆம் ஆண்டில் சங்கம் 43 ஆயிரத்து 532 ரூபா 32 சதத்தை இலாபமாகப் பெற்றுள்ளதாக அப்போதைய கணக்காய்வாளர் ஆ.நாகலிங்கம் கணக்கு ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இது சங்கம் உச்ச வளர்ச்சியை நோக்கிப் பயணிக்கின்றது என்பதை துல்லியமாக எடுத்துக் காட்டுகிறது.

இந்தச் சங்கத்தின் 7 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த 1994 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி நடைபெற்றபோது அந்தக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அப் போதைய பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி. இந்தச் சங்கம் மிக நல்ல முறையில் இயங்குவதாகவும் சங்கங்களுக்கெல்லாம். ஒரு முன் உதாரணமாக இந்தச் சங்கம் விளங்குகிறது எனப் பாராட்டினார். மேலும் இந்தச் சங்கம் கடைப்பிடித்து வரும் நடைமுறை யைத் தொடர்ந்து பேண வேண்டும். ஏழைகளுக் கும் ஊனமுற்றோர்களுக்கும் கடனுதவிகளை வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

விபத்து நிதியிலிருந்து அங்கத்தவர்களுக்கு முதல் பிரசவத்துக்கு நிதி வழங்குவதுபோல் ஏதே னும் ஒரு மகப்பேறு நடக்கும்போது அங்கத்த வர்களுக்கு விபத்து நிதி வழங்கப்பட வேண்டும். முன்னர் மகப்பேற்றுக்கு இந்த நிதியைப் பெற்ற வர்கள் எதிர்காலத்தில் இச்சலுகையைப் பெற முடியாது எனினும் காலத்து நிதி உச்ச எல்லை ஆயி ரத்தை தாண்டக்கூடாது என இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கடந்த 1994-1995 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இச்சங்கத்தின் அங்குரார்ப்பணத் தலை வராக இருந்து. சங்கத்தை ஆரம்பித்து இக்கிராம மக் களுக்கு வழிகாட்டியாக இருந்த அமரர் மு.பொ.வீரவா குவை நினைவு கூரும் பொருட்டு அன்னாரின் உரு வப்படம் சங்கத்தில் திரை நீக்கம் செய்து வைக்கப்பட் டது.

சங்கத்தால் நடத்தப் பட்டு வரும் பாலர் பாட சாலை ஆசிரியைகளின் எதிர் காலத்தை முன்னிட்டு ஊழி யர் சேமலாப நிதிக்கு ஒப் பானதொரு திட்டத்தையும், சங்கப்பணியாளர்களுக்கு இலாபத்தில் மிகை ஊதிய மும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

பங்குமாற்று நிதியாக 5 வீதம் லாபத்தில் ஒதுக்கப்பட் டதுடன் சங்கத்தின் காணி, கட்டட நிதிக்காக வருடந்தோறும் பெறப்பட்ட லாபத்தில் 10 வீதம் ஒதுக்கப்பட்டது. பொது ரீதியாக 10 வீதம் இலாபத்தில் ஒதுக்கப்பட்டு கிராமத்தில் இடம்பெறும் பொதுவிடயங்களுக்குப் பயன்படுத்த ஆரம்பிக்கப்பட்டது.

இக்காலப் பகுதியில் சங்கத்தில் அங்கம் வகிக்கும் மகளிர் உறுப்பினர்களின் மேம்பாடு கருதி மகளிர் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்த மகளிர் குழு தையல் பயிற்சி, சங்கீத, நடன வகுப் புக்களை நடத்தி வந்தது. தையல் பயிற்சி பெறும் யுவதிகளுக்காக சங்கத்தால் தையல் இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது.

சங்கத்தின் பாலர் பாடசாலை சிறப்பாகச் செயற் பட்டு வந்தது. கற்பிக்கும் ஆசிரியைகள் நன்கு ஊக்கத்தோடு கற்பிப்பதை மதிப்பிடக் கூடியதாக இருந்தது. 32 மாணவர்கள் கற்று வந்தனர். பாலர் பாடசாலை வருமானச் செலவுகளைக் கணக்குப் பார்த்தபோது வருமானத்துக்கு மிஞ்சிய செலவி னமாக இருந்தது. இருப்பினும் கல்விச் சேவை என்ற நோக்கில் சங்கம் செயற்பட்டு வருகின்றது. மேலும் சிறார்களினதும் மற்றும் கிராம மாண வர்களினதும் வளர்ச்சி கருதிப் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி, நவராத்திரி விழாக் காலத்தில் கட்டுரைப் போட்டி, மாலை கட்டும் போட்டி ஆகியவற்றை சங்கம் நடத்தி வந்தது. இப் பாலர் பாடசாலை சிறார்களுக்கு அந்தக் காலத்தில் பருத்தித்துறைப் பிரதேச சபையினால் சத்துணவு வழங்கப்பட்டு வந்தது.

இந்தப் பாலர் பாடசாலையைச் சிக்கனக் கட னுதவுக் கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து பொறுப் பேற்று நடத்த சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம் முன்வந்ததைத் தொடர்ந்து காலப் போக்கில் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் இந்தப் பிரச்சினை முன்வைக்கப் பட்டு அங்கத்தவர்களின் ஏகமனதான தீர்மானத் துடன் பாலர் பாடசாலை சனசமூக நிலையத்திடம் கையளிக்கப்பட்டது.

(தொடரும்)

# தேசத்துரோகிகள் வீரவன்ஸ, சம்பிக்கவுமே!

## விக்ரமபாகு கருத்து



இனவாதத்தைத் தூண்டிவிட்டு இனப்பிரச்சினை தீர்வு விடயத்தை குழப்பியடிக்கும் விமல் வீரவன்ஸ, சம்பிக்க ரணவக்க போன்றவர்களே உண்மையான தேசத்துரோகிகள். அவ்வாறானவர்களை அரசு அமைச்சுப்பதவிகளிலிருந்து தூக்கியெறிய வேண்டும் என்று புதிய இடதுசாரி முன்னணி யின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின்படி செயற்படவுள்ளதாக அரசு தெரிவித்திருக்கின்ற போதும், குறித்த அமைச்சர்கள் மாத்திரம் அதனை எதிர்ப்பதன் நோக்கம் என்ன என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள நவசமசமாஜக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இலங்கைக்கு எதிராக ஜெனிவாவிலுள்ள ஐ.நா.வின் மனித உரிமைப் பேரவையில் பிரேரணையொன்று கொண்டுவரப்படவுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் அரசு தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்துவதற்காக அமைச்சர்களான மஹிந்த சமரசிங்க மற்றும் ஜி.எல். பீரிஸ் தலைமையிலான குழுவொன்று ஜெனிவா சென்றுள்ளது.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக பிரேரணை நிறைவேற்றத்தேவையில்லை. நாம் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின்படி நடவடிக்கை எடுக்கத் தயாராகவுள்ளோம். சில நடவடிக்கைகளை எடுத்தும் உள்ளோம் என்று அரசு கூறுகிறது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை மக்கள் எதிர்க்கவில்லை. மாறாக சம்பிக்க ரணவக்கவும், விமல் வீரவன்சவும் இன்னும் சில பேரினவாதிகளுமே எதிர்க்கின்றனர். அன்று தொட்டு இன்றுவரை இது தொடர்கின்றது. அன்று எல்.எச். பெட்டாநந்த மற்றும் எப்.ஆர்.ஜயசூரிய போன்றவர்கள் செய்த இனவாத செயற்பாடுகளையே இன்று இவர்களும் மேற்கொள்கின்றனர்.

நல்லிணக்க அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதனை நடைமுறைப்படுத்தத் தயார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் அரசின் இந்தநிலைப்பாட்டுக்கு எதிர்ப்புத் தெவித்து சம்பிக்க மற்றும் விமல் போன்றவர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தவுள்ளனர். இதன் நோக்கம் என்னவென்று புரியவில்லை.

அரசு முன்னெடுக்கும் இவ்வாறான நடவடிக்கைகளைக் குழப்பியடித்து மக்களைத் திசைதிருப்ப முற்படும் இவ்வாறானவர்களே உண்மையான தேசத்துரோகிகள். எனவே, இவ்வாறானவர்களை அரசு உடனடியாக அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கவேண்டும். - என்றார் அவர். (வ)

## இருவருக்கு மரண தண்டனை

மாத்தளை, ஹரஸ்கம வீதியில் கடந்த 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இடம்பெற்ற கொலையொன்றில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் இருவருக்கு கண்டி மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

ராஜா என அழைக்கப்படும் பி.ஜி.கருணாரட்ன, பி.ஆரியரட்ன ஆகிய இருவருக்குமே கண்டி மேல் நீதிமன்ற நீதிபதி எம்.சி. புஷ்பமாலி மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

இந்தக் கொலை தொடர்பான வழக்கு விசாரணைக்காக 6 சாட்சியங்கள் அழைக்கப்பட்டனர். மண்டையோடு நொருங்கியதன் காரணமாக மூளை சேதமடைந்ததாகவும் உடம்பில் 8 காயங்கள் காணப்பட்டதாகவும் சட்ட மருத்துவ அதிகாரி சஞ்ஜீவ இலநாயக்க நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்த வைத்தியப் பரிசோதனை அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

இவர்களுக்குத் தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்த நீதிபதி, இவர்களை தூக்கிலிடுவதற்கான திகதி ஜனாதிபதியால் அறிவிக்கப்படும்வரை இவர்கள் போகம்பரை சிறைச்சாலையில் இருக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார். (வ)

## ஜனவரி மாதத்தில் 27 பேர் டெங்கால் சாவு

**ஜனவரி மாதத்தில் 6138 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.**

நாடு முழுவதும் டெங்கு நோயால் இந்த வருடத்தின் ஜனவரி மாதத்தில் மாத்திரம் 27 மரணங்கள் சம்பவித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், ஜனவரி மாதத்தில் 6138 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இவர்களில் 50 சதவீதமானோர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்களாவர்.

நுளம்பு பரவும் இடங்களை உடனடியாக அழிக்குமாறும் மூன்று நாள்களுக்கு மேல் காய்ச்சல் இருந்தால் வைத்தியரை நாடுமாறும் சுகாதார அமைச்சு பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது. (வ)

# டோஹோவில் தடுத்து வைக்கப்பட்டு நாடு திரும்பியவர்கள் 124ஆக உயர்வு

சட்டவிரோத ஆள்கடத்தல் பயண முகவர்களினால் கனடாவுக்கென அழைத்துச் செல்லப்பட்டு, மேற்கு ஆபிரிக்க நாடான டோஹோவில் நிர்க்கதியான வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 209 பேரில் ஐந்தாம் கட்டமாக, 30 பேர் கடந்த வெள்ளிக்கிழமை சர்வதேசபுலம்பெயர்ந்தோர் அமைப்பின் ஊடாக நாடு திரும்பியுள்ளனர்.

ஏற்கனவே, நான்கு கட்டங்களில் 94 பேர் நாடு திரும்பியிருந்த நிலையில் நாடு திரும்பியோரின் எண்ணிக்கை 124 ஆக உயர்வடைந்துள்ளது.

சட்டவிரோத பயண் முகவர்களால் அழைத்துச் செல்லப்பட்ட 19 பெண்கள் 11 குழந்தைகள் உட்பட 209. பேர் அந்நாட்டில் 3- 14 மாதங்கள் வரை விசா இன்றி தங்க வைக்கப்பட்டிருந்த வேளை, அந்தநாட்டு இராணுவத்தினரால் சுற்றிவளைக்கபட்டு, இராணுவ மைதானமொன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் பயண முகவரின் உதவியாளர்கள் நான்கு பேர் தப்பிச் சென்றுள்ளனர். குறித்த முகாம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் பராமரிக்கப்பட்டாலும் போதிய அடிப்படை வசதிகள் இன்றி இவர்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கி யதாகக் கூறப்படுகிறது.

ஐ.நா.வின் அகதிகளுக்கான தூதரகம் மற்றும் சர்வதேச புலம்பெயர்ந்தவர் களுக்கான அமைப்பு ஆகியன இவர்கள் மீதான விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் நாடு திரும்ப இணக்கம் தெரிவித்தவர்களே தற்போது நாடு திரும்புகின்றனர்.

மேற்படி நபர்களை கனடாவுக்கென சட்டவிரோதமாக அனுப்பிவைத்த பிரதான சந்தேக நபரென கூறப்படும் அருணகிரிநாதன் ஜெயரூபன் குற்றப் புலனாய்வுத்துறையால் கடந்த வாரம் வவுனியாவில் கைது செய்யப்பட்டு தற்போது நீதிமன்ற உத்தரவின் பேரில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)



மட்டக்களப்பு முகத்துவாரம் களப்பை அண்டிய பகுதியில் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்காவை கடந்த சனிக்கிழமை கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் திறந்துவைத்தார்.

## ஹம்பாந்தோட்டையில் ஷங்கிரி லா ஹோட்டல்

ஹம்பந்தோட்டையில் நிர்மாணிக்கப்பட்டவுள்ள ஹொங்கொங்கை தலைமையகமாகக் கொண்ட ஷங்கிரி லா ஹோட்டலுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

சுமார் 145 ஏக்கர் நிலப்பரப்பில் 315 அறைகளைக் கொண்டதாக இந்த ஹோட்டல் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்த ஹோட்டலின் நிர்மாணப் பணிகள் 2014ஆம் ஆண்டு நிறைவடையவுள்ளது.

இதேவேளை மற்றுமொரு ஷங்கிரி லா ஹோட்டலுக்கான ஆரம்பப் பணிகள் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ)

# உயிரினங்கள் கடத்தல் முயற்சி வெளிநாட்டவர்கள் கைது!

**ஜேர்மன், ஆஸ்திரேலியா, பெல்ஜியம், வெனிசுலா ஆகிய நாடுகளின் பிரஜைகளே கைது செய்யப்பட்டனர்.**

இலங்கை காடுகளில் வாழும் அரிதான உயிரினங்களை சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு கொண்டுசெல்ல முற்பட்ட 6 வெளிநாட்டு நபர்கள் புத்தளம், கற் பிட்டி, ஆலங்குடா பகுதிகளில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள், புத்தளம் மாவட்டவன திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜேர்மன், ஆஸ்திரேலியா, பெல்ஜியம், வெனிசுலா ஆகிய நாடுகளின் பிரஜைகளே கைதுசெய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து அரிதான உயிரினங்கள் பல மீட்கப்பட்டதுடன், அவற்றைப் பிடிக்கப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இவர்கள் புத்தளம் மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டபோது பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன், மீண்டும் நாளை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (வ)

## கதிர்காமத்தில் மாணிக்கக் கல் அகழச் சென்ற 11 பேர் கைது

கதிர்காமம் - தம்மென்னாவ பகுதியில் மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட 11 பேரை கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த நபர்கள் வெளி இடத்தில் இருந்து வந்த நபர்கள் என்று தமக்குக் கிடைத்த தகவலை அடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் இவர்கள் பயணித்த ஓட்டோ, டிரக்டர் உள்ளிட்ட வாகனங்கள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டதாக வும் அவர் குறிப்பிட்டார்.

கதிர்காமம் - தம்மென்னாவ பிரதேசத்தில் புதிய இடத்தில் மாணிக்கக் கல் வளம் காணப்படுவதாக கூறப்படும் இடத்துக்கு வெளிநபர்கள் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (வ)

# இலங்கை பணிப்பெண்கள் 8 பேர் குவைத்தில் கைது

**வேறுஇடத்தில்பணி புரிந்த 60 வயதுடைய இலங்கைப் பணிப்பெண்ணுக்கு 100 குவைத் தினார் வழங்கப்பட்டதாம்.**

தனது வீட்டு உரிமையாளர் வசம் வேலை செய்யாது அதிக. பணத்துக்காக வேறு இடங்களில் சென்று வேலை செய்து வந்த 8 இலங்கை பணிப்பெண்கள் குவைத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வேறு இடத்தில் பணி புரிந்த 60 வயதுடைய இலங்கைப் பணிப்பெண்ணுக்கு 100 குவைத் தினார் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குவைத் நகரின் ஒரு வீட்டில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது அதில் பணிபுரிந்த 7 இலங்கை பணிப்பெண்களும் இந்திய, பிலிப்பைன்ஸ் நாட்டு பணிப் பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.


பொறாமையின் காரணமாக குறித்த பணிப் பெண்களை இலங்கைப் பணிப்பெண் ஒருவர் காட்டிக் கொடுத்து விட்டதாக இலங்கைப் பணிப்பெண் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட வர்களை நாடு கடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று குவைத் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (வ)

# மரண அறிவித்தல்

## ஸ்ரீதரன் சத்தியநேசன் (நேசன்)

### (கிருஷ்ணா அப்பளக்கொம்பனி, உரிமையாளர்)



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீதரன் சத்தியநேசன் (23.02.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஸ்ரீதரன் மற்றும் அஸ்லின் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வடிவேல் மற்றும் சாரதாம்பாள் தம்பதியரின் மருமகனும், வதனியின் அன்புக் கணவரும், யமுனா (பிரான்ஸ்), தர்மிளா (பிரான்ஸ்), கிஷோக்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், லங்கீரன் (பிரான்ஸ்), கனகசங்கர் (சுரேஷ், பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும், சொபியா (பிரான்ஸ்), தமிகா (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும், இரத்தினகுமார், அசன், சற்குணநாதன், சசிதரன், உதயசூரியன், உதயகுமார், சுகுமார், ரஞ்சினி, ரஞ்சித், சுபாசினி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், வசந்தி, லதா, லலிதா, நளினி, சரவணபவன், பத்மரேகா, கிரிஜா, வனஜா, அனுஜா ஆகியோரின் மைத்துனரும், ரஞ்சன், ஈசன், ரூபன் ஆகியோரின் மைத்துனருமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2012) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*

**குடும்பத்தினர்.**

**இல.117,**
**பாற்பண்ணை வீதி,**
**திருநெல்வேலி.** (15098) (2-6-7)




ஓரளவான மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

# சாவகச்சேரி வைத்தியசாலையில் முதியோர் சிகிச்சைப் பிரிவு ஆரம்பம்

சாவகச்சேரி, பெப்.28

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடந்த நான்காம் திகதி தொடக்கம் பிரதி சனிக்கிழமைகளில் முதியோர் சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவில் 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு சிகிச்சையளிக்கப்படு கிறது. இந்த சிகிச்சைப் பிரிவில் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப் பட்ட டாக்டர். ச.அம்பிகைபாகன் கடமையாற்றுகிறார்.

இந்த சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்ற ஒரு முதியவரான செல்லையா மயில்வாகனம் (வயது-82) என்பவர் கிளினிக் தொடர்பாகத் தெரிவித்ததாவது:-

எனது வயதில் இப்படியான ஒரு கிளினிக்கை நான் கண்டதில்லை. கடவுள் ஐயா, என்னை தனக்கு அருகில் அமர்த்தி பரிசோதித்ததுடன் எனது கண் பார்வை, காது கேட்பது மற்றும் உடம்பில் ஏற்படும் அனைத்து நோய்களையும் கேட்டார். அத்துடன் எனது உணவு வகைகள், மது, புகைத்தல் போன்றவற்றையும் விசாரித்தார். தனது கை, கால்களை உயர்த்தி மடித்தும் இருந்து எழும்பியும் அதே போல் என்னையும் செய்துகாட்டு மாறும் கூறி அதில் ஏற்படும் தவறுகளைச் சுட்டிக்காட்டி அதனைச் சீர்செய்யுமாறும் கூறினார். அத்துடன் எவ்வாறான உணவு வகைகளைக் கையாள வேண்டும் எனவும் கூறியிருந்தார். ஓய்வு நேரங்களை எந்த வகையில் பயன்படுத்துகிறீர்கள். சமூக சேவைகளில் ஈடுபடுகிறீர்களா? எனவும் ஆறுதலாக என்னிடம் கேட்டுபெறுமதி மிக்க ஆலோசனைகளை எனக்குக் கூறினார்.

**ஆரம்பமாகி நான்கு வாரங்களாகிய நிலையில் இந்த முதியோர் கிளினிக்குக்கு வரும் முதியவர்களின் தொகை வாராவாரம் அதிகரித்து வருகிறது.**

தற்போதைய மருத்துவர்கள் மருந்துக்காக அவருக்கு அருகில் போய் வருத்தங்களைச் சொல்ல முதல் எங்களைத் தொட்டுக்கூடப் பார்க்காமல் மருந்துத் துண்டை எழுதிக் கையில் கொடுக்கின்றார்கள். ஆனால் இங்குள்ள மருத்துவர் இந்தக் கிளினிக்கில் அரை மணித்தியாலம் என்னை சோதித்து மருந்து எழுதித் தந்துள்ளார். அதோட அடுத்த கிளினிக்குக்கு வரும் போது ஆஸ்பத்திரியில் உள்ள ஆய்வு கூடத்தில் இரத்தம், சலம் ஆகியவற்றைச் சோதித்துக்கொள்ளச் சொல்லியுள்ளார். இவ்வளவு சோதனைகளும் ஆலோசனைகளும் தனியார் வைத்தியசாலைகளில் என்றால் என்டா சுளையாகப் பத்தாயிரம் ரூபா வாங்கிப்போடுவார்கள். இந்தக் கிளினிக்கில் எல்லாம் இலவசமாகச்செய்கிறார்கள். எங்களைப் போல் வயது போனவர்களுக்கு இப்படியான கிளினிக் உண்மையில் ஒரு நல்ல செயற்பாடாகும். இதை ஏற்பாடு செய்த வைத்தியசாலைப் பொறுப்பதி காரிக்கும் யாழ்ப்பாணத்தில் உள்ள பெரிய வருக்கும் நன்றி சொல்ல வேண் டும். இப்படியான கிளினிக்குகளை எல்லா வைத்தியசாலைகளிலும் நடத்தினால் எங்களைப் போன்றோர் நோய் நொடி இல்லாமல் இன்னும் ஐம்பது வருடங்கள் இருக்கலாம்- என்றார்.

மேலும் ஒரு மூதாட்டியான வேலுப்பிள்ளை செல்லம்மா (வயது-75) என்பவர் தெரிவித்ததாவது;

ஒவ்வொரு வருத்தமும் எங்களுக்கு ஏற்படுவதற்கு நாங்கள் தான் காரணமாக உள்ளோம் என்பதை அந்த ஐயா தெளிவாகச் சொன்னார். கண்பார்வை, காது மந்தம், சல அடைப்பு, மலச்சிக்கல், கசம், தொய்வு, வயிற்றோட்டம், கர்ப் பப்பை புற்றுநோய், மார்புப் புற்றுநோய் போன்றவை வராமல் தடுக்க கூடிய உணவு வகைகள் பற்றியும்யெல்லாம் சொன்னார். அத்துடன் எனது வயசில் இது வரையும் காணாத ஒரு சோதனையாக என்னை நிறுத்துப் பார்த்து என்ற உயரத்தையும் அளந்து பார்த்து மருந்து எழுதித் தந்தார். மருந்து கள் முடிந்தவுடன் கிளினிக்குக்கு வரச் சொல்லியிருக்கிறார். இன்று மருத்துவர் செய்தசோதனைகளையும் ஆலோசனைகளையும் தொடர்ந்து கடைப்பிடிப்பதுடன் இந்த உணவுப் பழக்கங்களை எமது பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுக்கும் சொல்லி அவர்களை தேகாரோக்கியம் மிக்கவர்களாகவும் நோய் நொடி இல்லாமலும் வாழ வைப்பேன் - என்றார்.

ஆரம்பமாகி நான்கு வாரங்க ளாகிய நிலையில் இந்த முதியோர் கிளினிக்குக்கு வரும் முதியவர்களின் தொகை வாராவாரம் அதிகரித்து வருகிறது.

எனவே இந்தக் கிளினிக்கை வாரத்தில் இரண்டு தடவைகள் இந்த சிகிச்சைப் பிரிவை நடத்த உரிய அதி காரிகள் நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும் என கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ந-9)

## இளைஞனைத் தீண்டியது பாம்பு

சாவகச்சேரி, பெப்.28

வயலில் அறுவடை செய்யப்பட்ட நெற்கதிர் குவியலை அள்ளும் பணியில் ஈடுபட்டிருந்தவர் குவியலுக்குள் மறைந்திருந்த புடையன் பாம்பினால் கடியுண்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் தாவளை - இயற்றாளைப் பகுதியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த துரைசிங்கம் கோகுலன் (வயது-24) என்பவர் பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதாரவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ந-9)

## மெய்வன்மைப் போட்டி

கேவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு, பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் ம.நின்மதிராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி க.பொன்னையா கலந்து கொள்வார். ( 9-16,190)

* * *

பருத்தித்துறை, பெப்.28

பருத்தித்துறை கோட்ட மட்ட மெய்வன்மைப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 2 ஆம் திகதி வெள்ளிக் கிழமை நண்பகல் 12 மணிக்கு புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் அமைந்துள்ள ஆசிரியர்நிலையத்தில் நடைபெற வுள்ளது.

போட்டிக்கான விண்ணப்பங்களை, இரட்டைப் பிரதிகளில் தயாரித்து ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. இக் கலந்துரை யாடலில்சகல அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு பருத்தித் துறை கோட்டக் கல்வி அதிகாரி பா. இரகுநாதன் கேட்டுள்ளார். (வ-190)

* * *

அச்சுவேலி, பெப்.28

பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும்.

அதிபர் சு. மோகனராஜன் தலைமையில் நடைபெறும் மெய்வன்மைப் போட்டிகளில் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ந-11)

## சான்றிதழ் கற்கை நெறிகள்

யாழ்ப்பாணம், பெப்.28

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் ஏற்பாட்டில் தகவல் தொடர்பாடல், கணினி தொழில்நுட்பக் கற்கை நெறிகளுக்கான எஸ்.எல்.சி.எல், ஐ.சீ.ரி, சி.சி.ஏ.ஏ, சான்றிதழ் கற்கைநெறிகள் யாழ்ப்பாணம், மானிப்பாய் ஆகிய கிளைகளில் நடைபெற இருக்கின் றன.

விண்ணப்பதாரி ஆங்கிலம், கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்தவராகவும், 16 வயதுக்கும் 25 வயதுக்கு உட்பட்டவராகவும் இருக்கவேண்டும்.

தகுதியுடையவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை மாவட்ட முகாமையாளருக்கு அடுத்தமாதம் முதலாம் திகதிக்கு முன்ன தாக அனுப்பி வைக்குமாறு கேட்கப்படுகின்றனர். (ந)

பரலோகத்தில் பரமனின் மடியில்

**2ஆம் ஆண்டு நிறைவு**

பிறப்பு
11
★
07
★
1952



இறப்பு
28
★
02
★
2010

**இதயம்**
மேரி பிளசிடா சிமியோன்
(முன்னாள் நூலகர், புனித சவேரியார் குருமடம் கொழும்புத்துறை)

(B) பபா (B) பபா என பாகாய் உருகினாய்
பார்ப்போருக்கெல்லாம் இவள் தான் என் அண்ணி என பறை - சாற்றினாய்
பாய்ந்து ஓடி வந்து பல உதவிகள் செய்தாய்
பாசமாய் நான் உன்னை அக்கா என்றழைத்தேன் காரணம்
பாரினில் நீ எனக்கு உடன் பிறவா சகோதரியானாய் - இன்று
பார்க்க முடியாமல் பரமனின் மடியில் அமர்ந்திருக்கின்றாய். ஆனாலும்
பல தடவை உன்னை நினைத்து இங்கு நான் வருந்துகின்றேன்
பல ஆண்டுகள் கடந்தாலும் என்றும் என் மனதில் நீ இருப்பாய்
பண்பாக நீ சொன்ன வார்த்தைகள் இன்றும் உன் மருமகள்
ஞாபகம் கொள்கின்றாள்.........
பத்தாவது படிக்கும் உன் மருமகன் (தொட்டமகன்) உன் படம்
பார்த்து பல கூறுகின்றான்.........

கேணியடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
021 4920191
(14949) (45-6-7)

பாசமிகு அண்ணி
**அமலன் வனிதா**

**21 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



பிறப்பு 1970 ★ 08 ★ 23

செல்வி
**சின்னராசா செல்வமலர்**

இறப்பு 1991 ★ 02 ★ 28

நல்ல போராட்டத்தைப் போராடினேன்
ஓட்டத்தை முடித்தேன்
II தீமோத்தேயு 4:7

16/1 , மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(15102(6-7-8)

K.K. சின்னராசா - மெற்றலீன்,
குடும்பத்தினர்.

**மரண அறிவித்தல்**

திருமதி
**தனலட்சுமிஅம்மா சிவசுப்பிரமணியம்**



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தனலட்சுமிஅம்மா சனிக்கிழமை (25.02.2012) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கணபதிப்பிள்ளை (சேதுகாவலர்)- தங்கச்சிப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி விநாசித்தம்பி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், விஜயகுமார் (லண்டன்), ஜெயக்குமார், விஜயறஜனி (ஆசிரியை, யாழ். சுரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்), காலஞ்சென்ற நிமலகுமார் ஆகியோரின் அன்புத்தாயும், ஜெயரஞ்சினி (லண்டன்), மகாலஷ்சுமி (ஆசிரியை, யா/ ஞானாசாரியார், கல்லூரி, கரவெட்டி) ஆகியோரின் அன்பு மாமியும், நவடினி (லண்டன்), திரிசன்(லண்டன்), நதுர்ஷிகன், அபிசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற பரமகுரு (உதவி வைத்திய அதிகாரி) மற்றும் யோகலட்சுமி (கமலா), ஆனந்தராசா (ஓய்வுபெற்ற உதவிப் பொது முகாமையாளர், மக்கள் வங்கி), தவராசா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சிவஞானம், காலஞ்சென்ற மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2012) செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10 மணிக்கு நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.88, குறுக்குத்தெரு,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
(C\8361) (6,7,10)

தகவல்:
பிள்ளைகள்.

# தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதியவர்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கும். மற்றவர்கள் மத்தியில் உங்களை பெரிய ஆளாகக் காட்டிக் கொள்வதில் அக்கறை காட்டுவீர்கள். நாளை வரும் என்று நினைத்த பணவரவு ஒன்று இன்றே வந்து சேரலாம். சில வேலைகளில் ஆரம்பத்தில் தாமதம் ஏற்பட்டாலும், பின்னர் விறுவிறுப்பாக முடிவுக்கு வரும்.

**இடபம்:** அவசரப்பட்டு சில வேலைகளைச் செய்து விட்டு, பின்னர் ஏண்டா செய்தோம் என்று வருத்தம் அடைவீர்கள். நீங்கள் செய்த வேலை ஒன்றை மற்றவர்கள் தாங்கள் செய்ததாகக் காட்டிக் கொள்ளலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். பெரிய மனிதர்களின் பேச்சுக்கு ஆளாகலாம்.

**மிதுனம்:** மனைவி, குழந்தைகளின் நீண்ட நாள் ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். பயணங்களால் செலவுகள் அதிகரிக்கலாம். இரண்டு, மூன்று நாள்களாகச் செய்ய வேண்டிய வேலைகளை இன்றே செய்வீர்கள். மாற்று மதத்தினர் உதவி கிடைக்கும். அடமானமாக வைத்த பொன், பொருள்களை மீட்கலாம். சகோதரர்கள் வழியில் உதவி கிடைக்கும்.

**கடகம்:** தொலைந்து போனதாக நினைத்த பொருள் ஒன்று மீண்டும் கைக்குக் கிடைக்கலாம். அவசரமாக முடிக்க வேண்டிய சில வேலைகளால் அவதிகளுக்கு ஆளாகலாம். தவறு என்ற தெரிந்தும் சில காரியங்களைச் செய்வதால், பதற்றம், படபடப்பு அடையலாம். வெளியூர்களில் இருந்து உறவினர்கள் சிலர் வீட்டுக்கு வரலாம்.

**சிங்கம்:** நண்பர்கள் சிலரிடம் உங்களின் மனக்குறைகளைச் சொல்வீர்கள். சிறிய தவறு ஒன்றை நினைத்து பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் பங்கேற்கலாம். ஒன்று நடக்கும் முன்னரே அதை பற்றி மனக்கோட்டை கட்டுவீர்கள். முடிந்து விட்ட தாக நினைத்த பிரச்னை ஒன்று மீண்டும் தலை தூக்கலாம்.

**கன்னி:** பிரியமான சிலருடன் சண்டை போட்டு, மனஸ்தாபம் ஏற்படும் சூழ்நிலை உருவாகும். சில விஷயங்களில் விட்டுக் கொடுக்காமல் நடந்து கொள்வதன் மூலம் மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். ஓய்வு எடுக்க நினைத்தாலும், அது முடியாத அளவுக்கு யாராவது வந்து தொந்தரவு கொடுக்கலாம். தேக ஆரோக்கியத்தில் கவனம் அவசியம்.

**நாளை**

மாசி 17 புதன்கிழமை 29.02.2012
திதி: ஸப்தமி பி.ப.03.56 வரை
நட்சத்திரம்: கார்த்திகை பி.ப.03.30 வரை
சுபநேரம்:04.58- 06.28 வரை,
ராகு காலம்: 12.28- 01.58 வரை

**துலாம்:** வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலை ஒன்றை நீங்கள் எளிதாகச் செய்து முடிப்பீர்கள். பெண்கள் வகையில் சில செலவுகளைச் செய்யலாம். தொலைபேசி வழியில் சந்தோஷமான செய்திகளைக் கேட்கலாம். நீண்ட நாள்களாக உங்களின் வீட்டுக்கு வராத உறவினர் ஒருவர் வரலாம்.

**விருச்சிகம்:** கணவன், மனைவி இடையே பாசம் கூடும். பற்றாக்குறை தீரும் வகையில் பணவரவுகள் கிடைக்கலாம். கடந்த காலத்தில் உறவினர் ஒருவர் செய்த உதவிக்கு இப்போது பதில் உதவி செய்வீர்கள். நாளைய சில காரியங்களுக்காக இன்றே முன்னேற்பாடு செய்வீர்கள். பழைய அனுபவம் ஒன்றை அசை போட்டுப் பார்த்து, புதிய முயற்சிகளில் இறங்குவீர்கள்.

**தனுசு:** நண்பர்கள், சக ஊழியர்களுக்காக தாராளமாகச் செலவு செய்வீர்கள். நேரத்துக்கு சாப்பிடாமல் வேலைகள் செய்வதன் மூலம் உடல் உபாதைகளுக்கு ஆள்படலாம். மாமன், மைத்துனர்கள் ஏட்டிக்கு போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். சிலர் தங்களின் பிரச்சினைகளை உங்களிடம் சொல்லி ஆலோசனை கேட்கலாம்.

**மகரம்:** பொறுப்பில்லாமல் செயற்படும் குடும்ப உறுப்பினர்களால் எரிச்சல் அடையலாம். உங்களுக்கு வேண்டியதை சாதிக்க நண்பர் ஒருவரைத் தொந்தரவு செய்யலாம். ஆதாயமில்லாத விடயங்களில் தலையிட்டு கோபம், பதற்றத்துக்கு ஆளாகலாம்.

**கும்பம்:** புத்திசாலித்தனமான முடிவுகள் எடுத்து பாராட்டுக்களைப் பெறும் நாள். உறவினர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, செல்வாக்கு கூடும். உங்களுக்கு தேவையான சில பொருள்களை வாங்குவீர்கள். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். பல மணி நேரமாகும் என நினைத்த காரியம் ஒன்று சுலபமாக முடிந்து விடலாம்.

**மீனம்:** பகட்டுக்காக செலவுகள் செய்வீர்கள். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். உங்களின் சொல் பேச்சு கேட்காமல் பிள்ளைகள் நடப்பதன் மூலம் எரிச்சல் அடையலாம். அயலாருடன் சுக துக்கங்களை பேசி மகிழ்வீர்கள். திட்டமிட்ட வேலை ஒன்றை பிறகு செய்யலாம் எனதள்ளி வைப்பீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | 5 | | 9 | | 4 | | |
| 8 | 6 | | | 3 | | 1 | | |
| 4 | | 1 | | | 2 | | | |
| | | | | 4 | 6 | | 2 | 5 |
| 2 | | 6 | 5 | | 3 | 8 | | 9 |
| 5 | 8 | | 1 | 2 | | | | |
| | | | 3 | | | 2 | | 1 |
| | | 3 | | 1 | | | 4 | 8 |
| | | 8 | | 5 | | 9 | 6 | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 2 | 1 | 4 | 3 | 7 | 5 | 6 | 8 |
| 3 | 5 | 7 | 1 | 6 | 8 | 2 | 9 | 4 |
| 4 | 6 | 8 | 2 | 9 | 5 | 7 | 3 | 1 |
| 5 | 8 | 3 | 7 | 4 | 9 | 1 | 2 | 6 |
| 1 | 7 | 4 | 3 | 2 | 6 | 9 | 8 | 5 |
| 6 | 9 | 2 | 5 | 8 | 1 | 3 | 4 | 7 |
| 7 | 4 | 9 | 6 | 5 | 2 | 8 | 1 | 3 |
| 2 | 1 | 6 | 8 | 7 | 3 | 4 | 5 | 9 |
| 8 | 3 | 5 | 9 | 1 | 4 | 6 | 7 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# கண்ணீர் அஞ்சலி



## ஸ்ரீதரன் சத்தியநேசன்

(உரிமையாளர் - கிருஷ்ணா அப்பளக் கொம்பனி)

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல.29, நவீன சந்தை
உட்புறம், திருநெல்வேலி.

**தேனு களஞ்சியம்,**
உரிமையாளரும், ஊழியர்களும்.

(15152)(2-7-6)

# வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்க சாவகச்சேரியில் விழிப்புணர்வு

சாவகச்சேரி .பெப்.28

சாவகச்சேரி நகரசபையின் நுணாவில் பொது நூலக அபிவிருத்தி ஆலோசனைச் சபையும், வாசகர் வட்டமும் இணைந்து இந்த வருடம் நூலக எல்லைப்பரப்பில் பல்வேறு விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

பொது நூலக மண்டபத்தில் கடந்த 25 ஆம் திகதி சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி தலைமையில் நடைபெற்ற பொது நூலக அபிவிருத்தி ஆலோசனை சபை மற்றும், வாசகர் வட்டம் ஆகியவற்றின் கூட்டத்தில் பல்வேறு செயற்றிட்டங்கள் மேற் கொள்ளவுள்ளதாகத் தீர்மானிக்கப்பட்டது. எடுக் கப்பட்ட தீர்மானங்களாவன:-

நூலக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுகாதாரம் சார் செயற்பாடுகள், கருத்தரங்குகள் மேற்கொள்ளல்.

மாணவர்கள், வாசகர்களுக்கு இலக்கியம் சார் வரலாற்றுச் சித்திரிப்புக்கள் குறித்த திரைப்படக் காட்சி களை நூலக மண்டபத்தில் காண்பித்தல்.

மறைந்த பெரியார்களின் படங்களை காட் சிப்படுத்துவதுடன் அவர்களின் வாழ்க்கை வர லாறு அடங்கிய முப்பரிமாண நூலக சேவை யினை வழங்குதல்.

மாணவர்கள் வாசகர்களிடையே கிராமிய மட்டப் போட்டிகளை நடத்தித் தெரிவு செய் யப்படுவோரை, சாவகச்சேரி நகரசபையினால் நடத்தப்படும் மூன்று பொது நூலகங்களுக் கிடையில் போட்டிகளை நடத்துதல்.

மாணவர்களுக்கு ஆங்கில, சிங்களப் பயிற்சி வகுப்புகளை நடத்துதல்.

நூலக எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள மாணவர்களுக்கு, இலவச கணினிப் பயிற்சி வகுப்புகளை நடத்துதல்.

யாழ்.பல்கலைக்கழக நூலகர் திருமதி சி.அருளானந்தத்துடன் இணைந்து முப்பரிமாண நூலக சேவையினை இந்த நூலகத்தில் உடன் நடைமுறைப்படுத்தல்.

தென்மராட்சிக் கல்வி வலய நூலகங்களு டன் சேர்ந்த வாசகர் வட்டத்தின் விளையாட்டுப் போட்டிகளை ஒழுங்குபடுத்தல்.

நூலக எல்லைக்குட்பட்டுள்ள மாணவர் களுக்குத் தேவையான நூல்களின் விவரங் களைக் கேட்டறிய அனைத்து வீடுகளுக்கும் சென்று வினாக் கொத்துத் தயாரித்தல்.

பாடசாலை ரீதியாக நூல்கள் கொள்வனவுக் காக வினாக்கொத்து தயாரித்தல் .

புதிய நூல்களைக் கொள்வனவு செய்தல்

நூல்கள் தொடர்பான விழிப்புணர்வுத் துண் டுப் பிரசுரத்தை கிராம ரீதியாகச்சென்று ஒவ்வொரு வீடுகளுக்கும் விநியோகித்தல்.

பொது நிகழ்வுகளை நூலகத்தில் ஒழுங்கமைத் தல்.

நூலக விழிப்புணர்வு பற்றி வீதி நாடகங் களை உடன் உருவாக்குதல் . (த-9)

# செங்கல்பட்டு சிறப்பு முகாமில் அகதிகள் உண்ணாவிரதம்

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் உள்ள இலங்கை அகதிகள் 4 பேரின் உண்ணாவிரதப் போராட்டம் நேற்றுமுன்தினமும் 7ஆவது நாளாக வும் தொடர்கின்றது.

கியூ பிரிவு பொலிஸாரால் பல்வேறு வழக்கு களில் கைது செய்யப்பட்ட இலங்கை அகதிகள் செங்கல்பட்டு காஞ்சிபுரம் நெடுஞ்சாலையில் உள்ள சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது இந்த முகாமில் இலங்கை அகதிகள் 31 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதில் 4 பேர் தங்கள் மீதுள்ள வழக்குகளை விரைந்து முடித்து, உறவினர்களுடன் சேர்ந்து வாழ வைக்கக் கோரி கடந்த 20ஆம் திகதி முதல் உண்ணா விர தப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். (ந)

**தங்கள் உறவினர்களுடன் சேர்ந்து வாழ வைக்கக்கோரி இலங்கை அகதிகள் 4 பேர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.**

# சாக்கடையா இல்லை பூக்கடையா?

வளர்ச்சியும் மாற்றமும் மனித வாழ்வில் ஒரு முக்கியமான அம்சமாகும். இந்த இரண்டும் இல்லை என்றால் மனித இயக்கமே இல்லாமல் போய் விடும் தேங்கிநிற்கும் நீர் நாற்றமெடுக்கும் சாக்கடையாகி விடும். சாக்கடை வாழ்வு நறுமணம் வீசாது. நலம் தராத வாழ்வாக அமைந்துவிடும். ஓடுகின்ற நீரே சாக்கடையை பூக்கடையாக வாசமுள்ளதாக மாற்றும். மாற்றம் இல்லாத வாழ்வில் ஏற்றம் இல்லை என்பார்கள். தவக்காலம் அடிப்படையில் மன மாற்றத்தின் காலமாகும். கடவுள் மனிதனை வாழ்வுக்கு அழைக்கும் காலமாகும். மனமாற்றமில்லாமல் நிறைவான வாழ்வை நாம் கண்டு கொள்ள முடியாது. மாற்றம் ஒவ்வொரு மனித னது உள்ளத்திலும் ஊற்றெடுக் கின்ற போதே சமூகமும் உலகமும் மனித குலம் மகிழ்ச்சியாக வாழும் காலம் உருவாக்கப்படும். இறைவன் உலகத்தை அழகாகவே படைத்தார். ஆனால் மனிதனின் சுய நலத்தால், செருக்கால், கீழ்ப்படியாமையால் அழகிழந்து, உருவிழந்து போரும் வன்முறையும் பகையும் நிறைந்த உலகமாக மாறிவிட்டது. எனவே உல கின் அழிவிற்கோ வளர்ச்சிக்கோ மனிதனே காரணமாகும். இன்று ஏட் டிக்குப் போட்டியாக நடைபெறும் அணுவாயுதப் போட்டி தேசங்களின் அழிவிற்கே வழிவகுக் கும் என்பதை உணர வேண்டும். மக்கள் தான் இதன் மூலம் பலிக் கடாவாக்கப்பட்டு அழிந்து போவார் கள். அரசியல் தலைவர்களின் ஆக்கிரமிப்புச் சிந்தனைகள், சுயநலம் சார்ந்த சிந்தனைகள் அழிவிற்கான பாதை யையே திறந்து விடுகின் றது. அரசியல் தலைவர் களின் உள்ளத்தில் மன மாற்றமும் பொது நலம் சார்ந்த சிந்தனைப் போக்கும் ஏற் படாதவரை அழிவைத் தடுக்க முடி யாது. கடவுள்படைத்த அழகிய உலகத்தை அழிக்க நினைப்பவர்களை கடவுள்தான் தடுக்க முடியும் அதை விட நல்லுள்ளம் கொண்டுள்ளவர்களும் இவை களுக் கெதிராகப் போராட வேண்டும்.

**தவக்காலச் சிந்தனை**

எல்லா மதங்களுமே அறநெறி வாழ் விற்கான போதனைகளை, அறிவுறுத் தல்களை கொண்டுள்ளன ஆனால் அவற் றைக் கடைப்பிடிக்கத்தான் மனிதர்களுக்கு மனமில்லை. இறைவனுடைய குரலாகவே பைபிளோ, பகவத்கீதையோ மனிதர்களிடம் பேசுகின்றது. எவ்வளவு மனிதர்கள் கடவுளின் குரலைக்கேட்டுகீழ்ப்படிந்து நடக்கிறார்கள். கடவுளின் குரலுக்கு செவி சாய்த்து வாழுகின்றபோதுதான் உண்மையான மனமாற்றம் உள்ளத்தில் ஏற்படும். பகைமை நீங்கி தீய செயல்களை விலக்கி மனச் சான்றின்படி வாழு கின்றபோது உண்மையான மனமாற்றம் ஏற்படும். இன்று எமது சமூகங்களில் போட்டியும், பொறாமையும் சுயநலமும் பெருகுவதால் சமூகங்களில் பிரச்சினைகளும் முரண்பாடுகளும் தோன்று கின்றன. வாழ்வது ஒரு கலை தானே! தொடர்பு சாதனங்களால், கணினி வலைப் பின்னலால் உலகமே கிராம மாகிப் போனது என்னவோ உண்மைதான்! ஆனால் மனிதநேயம் இன்னும் அருகிப் போய் கிடக்கின்றது. வானளாவ உயர்ந்து நிற்பவை கோயில்கள், ஆலயங்கள் மட்டுமே: மனித இதயங்களோ தரை மட்டும் சரிந்து கிடக்கின்றது. இதயங்கள் விசால மாகாதவரைக்கும் இறை வனுக்கு இதயத்தில் இடம் இருக்காது. அகத்தில் ஏற்படும் மாற்றமே ஆன்மாவின் வாயிலை திறந்துவிடும். நல்ல மனிதர் களாக நாம் வாழ வேண்டும் என்பதே இறை வனின் விருப்பமாகும் மகான்களாக மாறாவிட்டாலும் நல்ல மனிதர்களாக வாழ்ந்து அடுத்த வரையும் வாழவைக்க தேவையான அக மனமாற்றமே, தவக் காலத்தில் இறைவன் எதிர்பார்க்கும் உண்மை நோன்பாகும்.

அருட்கலாநிதி. ஸ்ரனி அன்ரனி அ.ம.தி

**Call Doctors**
0776458253
வைத்தியரை வீட்டிற்கே அழைத்திடுங்கள்
jaffnaonline.info/doc

## Doctor on Call

வயோதிபம்,நீரிழிவு,குருதி அழுத்தம், நாட்பட்ட நோய்கள் முதல் தொடர் பராமரிப்பு தேவைப்படும் அல்லது எந்த நோயானாலும் வைத்திய சேவையை உங்கள் வீட்டிலேயே பெற விரும்பும் நிலையில் நீங்களோ உங்கள் அன்புக்கு உரியவர்களே இருந்தால் ,எம்முடன் வருடாந்த ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்வதன் மூலம் MBBS வைத்தியர்களின் சேவையினை குடா நாட்டின் எப்பகுதியிலும் உங்கள் வீட்டிலேயே பெறமுடியும்.
விபரங்களுக்கு : 0776458253

# தொழில் தேடுவோர் விவரம் திரட்டல்

வடமராட்சி, பெப்.28

பருத்தித்துறை, வடமராட்சி வடக்குப் பிர தேச செயலர் பிரிவில் தொழில் தேடு வோர் விவரங்கள் தற்போது சேகரிக்கப் படுகின்றன.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை அந்தந்தப் பகுதி கிராம சேவையாளர்களிடம் பெற்றுப் பூர்த்தி செய்து எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் ஒப்ப டைக்குமாறு பருத் தித்துறை பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன் அறிவித்துள்ளார். (வ-8)

# இதுவரை 6500 பேருக்கு அனுமதிப் பத்திரங்கள்

நவாலி,பெப்.28

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் இந்த வருடத் துக்கான வாகன அனு மதிப்பத் திரங் க ளை இது வரை 6500 பேர் பெற்றுள்ளனர்.

இந்தப் பிரதேச செயலர் பிரிவில் மொத் தம் 8210 வாகனங்கள் உள்ளன. இந்த வருடத் துக்கான அனுமதிப் பத்திரங்கள் பெறும் இறுதி நாள் மார்ச் 31 ஆம் திகதி என்பது குறிப் பிடத்தக்கது. (வ-100)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No.1 பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவு செய்யவும்.

தொடர்பு:

நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். 0212226944

நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி. 0776225944

சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை 0778996085

(14752) (45-6)

## பழைய மாணவர் சங்கத்தினரின் கண்ணீர் அஞ்சலி

### திருமதி வசந்தமாலா சோமசேகரம்



எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு தன்னையே அர்ப்பணித்து வளர்ச்சி யின் உயர்ச்சி கண்ட அதிபர் உயர்திரு மா. சோமசேகரம் அவர்களின் அன்புப் பாரியார் திருமதி வசந்தமாலா சோமசேகரம் அவர்கள் இறைபதம் அடைந்தமையை இட்டு ஆழ்ந்த துயரம் அடைவ தோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்திப் போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பழைய மாணவர் சங்கம்
யா/ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்.
அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

(15110)(45.6.7)

## சரஸ்வதி மகா வித்தியாலய சமூகத்தினரின் கண்ணீர் அஞ்சலி

### திருமதி வசந்தமாலா சோமசேகரம்



அன்பான முகத்தோடு ஆண்டுகள் பல வாழ்ந்து
ஆதரவாய் அகிலமெல்லாம் அரவணைத்து
பண்பான பெயர் தம்மை பார் எல்லாம் பெற்று
பனீகாத இடம் தன்னில் சென்றீரோ.

எமது பாடசாலை அதிபர் உயர்திரு மா. சோம சேகரம் அவர்களின் அன்புப் பாரியார் திருமதி வசந்தமாலா சோமசேகரம் அவர்கள் இறைபதம் அடைந்தமையை இட்டு ஆழ்ந்த துயர் அடைவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறை வனைப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யா/அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம், அராலி தெற்கு.
ஆசிரியர்கள், மாணவர்கள், அபிவிருத்திச் சங்கத்தினர்.

(15109)(45.6.7)

## வேலையாள்கள் தேவை

ஆனைக்கோட்டையிலுள்ள வியாபார நிறுவ னத்துக்கு மேசன் வேலைக்கும் கூலி வேலைக்கும் ஆள்கள் தேவை.
தொடர்பு: 0774766965
(15112)

## வேலையாள் தேவை

ஆனைக்கோட்டையிலுள்ள வியாபார நிறுவன மொன்றுக்கு பில் கிளார்க்காகவும், கணக்காய் வாளராகவும், தொழிற்படக்கூடிய ஒருவர் தேவை (50 வயதுக்கு மேற்பட்டவராகவும் அனுபவமுள்ள வராகவும் 2 KM தூரத்துக்குட்ப்பட்ட வசிப்பிடத்தைக் கொண்டிருப்பது விரும்பத்தக்கது)
தொடர்பு: 0774766965
(15113)

## வீடு வாடகைக்குண்டு

ஸ்ரான்லி வீதி, அத்தியடியில் நான்கு அறைகள், வாகனத் தரிப்பிடம் உட்பட சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 9590692, 077 9856 359
(15105)(45-6-7)

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம:
அன்னை காளியம்பாள் திருத்தாள் போற்றி
யாழ் - திருவண்ணை - கன்னாதிட்டி

## அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம் மஹோற்சவ விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே!

நிகழும் கரவருடம் மாசித்திங்கள் 16 ஆம் நாள் (28.02.2012) செவ்வாய்க்கிழமையான இன்றைய தினம் மு.ப 10 மணிக்கு கொடியேற்றத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாக விருக்கிறது. தொடர்ந்து

07.03.2012 புதன்கிழமை தேர்த்திருவிழாவும்
08.03.2012 வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழாவும்
09.03.2012 வெள்ளிக்கிழமை பூங்காவனத்திருவிழாவும்
நடைபெறவுள்ளன.

அடியார்கள் மஹோற்சவ காலத்தில் பக்தி பேருவகையுடன் பங்குபற்றி வழிபாடியற்றி அகிலாண்ட கோடி பிரமாண்டநாயகியின் பேரருட் பெருங்கருணையைப் பெற்றின்புற வேண்டுகின்றோம்.

தேவஸ்தான
ஆதீன கர்த்தாக்கள்.

(15104)(6-7-8)

## யா/ வலந்தலை தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை, காரைநகர்.

பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணம்
**பொதுக்கூட்ட அறிவித்தல்**

இடம் : பாடசாலை மண்டபம்
காலம்: 11.03.2012 ஞாயிறு காலை 9.15

இப்பாடசாலையில் கல்வி கற்று வெளியேறிய மாணவர் களின் தனிப்பட்ட முகவரிகள் தெரியாத காரணத்தால் அழைப்புக் கடிதங்கள் அனுப்ப முடியவில்லை. எனவே இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அதிபர்,
யா/வலந்தலை தெற்கு அ.மி.த.க. பாடசாலை,
காரைநகர்.

(C/8362)(6-7-8)

# வெங்காய 'உண்மை விதை' உற்பத்தி வயல் விழா

யாழ்ப்பாணம்,பெப்.28

வெங்காய உண்மை விதை உற்பத்தி வயல் விழா, இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கெருடாவில் தெற்கு இ.சிவசுப்பிரமணியம் தோட்டத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் விவசாயத் திணைக்களத்தினால் பிரதி விவசாயப் பணிப்பாளர் கி.சிறிபாலசுந்தரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் விதைகள் அத்தாட்சிப்படுத்தும் சேவைப் பொறுப்பதிகாரி அ.றமணீதரன் பிரதம விருந்தினராகவும் சிறப்பு விருந்தினர்களாகப் பருத்தித்துறை உதவிப் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம், யாழ். உதவி விவசாயப் பணிப்பாளர் செ.இராமநாதன் ஆகியோரும் புலோலி விவசாய போதனாசிரியர் க.சுதாசினியும் கலந்து கொள்வர்.நிகழ்வில் வேதாள வெங்காயம் உண்மை விதை உற்பத்தியின் நோக்கமும் பயிராக்கவியல் தொழில்நுட்பமும் விவசாயிகளது கருத்துரை, விருந்தினர்கள் உரை என்பனவும் இடம்பெறும். (வ-7)

## தவறிவிட்டது

26.02.2012 அன்று கரடிப்போக்கு சந்திக்கும் 03 ஆம் வாய்க்கால் சந்திக்கும் இடையில் தென்னுமணி - கேதீஸ்வரன் சாரதி அனுமதிப்பத்திரம் தவறிவிட்டது. கண்டவர்கள் அண்ணாமலை கடையில் ஒப்படைக்கவும்.

(11045)(6-7-8) T . P : 077 4405910

## பெருந்திருவிழா

கன்னாதிட்டி காளியம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது. எதிர்வரும் 7 ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (வ)

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 31 ★ 01 ★ 1919



ஆண்டவன் அடியில் 01 ★ 03 ★ 2001

### அமரர் கதிரன் முதலி

திதி: சஷ்டி 28.02.2012

*அன்பிலே தெய்வமாய் அறிவிலே ஆசானாய்*
*பண்புடனே எமை வளர்த்து ஆளாக்கி - இன்புமுடன்*
*நாம் வாழ எல்லாம் எமக்களித்தாய்*
*நீண்ட பல நினைவுகளுடன் நினைந்திருப்போம்.*

விடத்தல் பளை,
உசன், மிருசுவில். (சி/8363)(45-6-7) குடும்பத்தினர்

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



| 1922-01-16 | அன்னை மடியில் | 1986-03-05 |
|---|---|---|
| 2006.02.28 | ஆண்டவன் அடியில் | 2009-02-28 |

**சிவகுரு மாணிக்கவாசகர்**
திதி:- மாசி அமாவாசை

**சிவபாலச்சந்திரன் பிரசாத்**
பொறியியல் பீட மாணவன்
(பேராதனைப் பல்கலைக்கழகம்)

வாழ்ந்த உங்கள் நினைவுகள் எங்கள் மனங்களில் நிழலாக
உங்கள் திருவுருவங்கள் என்றும் மனதை விட்டு அகலாது
ஆண்டுகள் பல கடந்தாலும் ஆறாது எங்களின் துயரம்
ஆண்டவன் அடியில் இருந்து அமைதியான
வாழ்வை அருளுங்கள்

*உங்கள் ஆத்மா சாந்தியடைய முரசுமோட்டை முத்துமாரியம்மனை தினமும் வேண்டுகின்றோம்*

(10477)(6-7)

32/3. முரசுமோட்டை,பரந்தன். - அன்பு அப்பா, அம்மா, அக்கா குடும்பம். உற்றார், உறவினர், நண்பர்கள்.

## மூன்றாம் ஆண்டு நினைவலை



பிறப்பு 09 - 11 - 1981

இறப்பு 13 - 02 - 2009

### சிவநேசன் சதீஸ்

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே
ஓடி மறைந்தது மூன்று ஆண்டு
நிற்பதே உன் நினைவு
நித்தமும் உன் நினைவுகள்
என்றும் மறவா நினைவுடன்
ஆத்மா சாந்தியடைய
வேண்டி நிற்கும்

- குடும்பத்தினர்.
0778626302

(10840)(6-7)

த.மு:- கண்ணகி நகர், விசுவமடு.
சொ.மு.:- தட்டுவான் கொட்டி, ஆனையிறவு.





மேலும் புதிய பலத்துடன், மேலும் சிறப்பு, ஆற்றல் மற்றும் உறுதிமிக்க டிஸ்கவர் 150 உங்கள் பயணத் தேவைகளை சிரமமின்றி பூர்த்தி செய்ய தயாராகவுள்ளது. நீங்கள் விரும்பிய பாதைகளில் மனம் போல் செல்ல தயாரிக்கப்பட்டது. மிகவலுவான இழுவை ஆற்றல், 5 வேக கியர்கள், எரிபொருள் சிக்கனத்தை பேண எடை குறைந்தது. 150CC என்ஜின் தரத்திற்கு தரமுயர்த்தப்பட்டதே டிஸ்கவர் 150. உங்களை எங்கு வேண்டுமானாலும் காவிச்செல்லும் 4 ஸ்ட்ரோக் DTS-i என்ஜினுடனான டிஸ்கவர் 150 இப்போது உங்களிடம்.

■ Exhaus TEC தொழில்நுட்பத்துடனான பலமிக்க 150cc DTS-i என்ஜின் ■ 5 வேக கியர்கள் ■ தன்னிக்க சாக்குடனான இலத்திரனியல் ஸ்டார்ட் ■ ரைட் கொன்ரோல் சுவிட்ச் ■ டிஸ்க் கவருடனான முன்பக்க டிஸ்க் பிரேக் ■ NitroX சொக் அப்சோபர்ஸ்




Discover சுதந்திரம்...

**விஷேட கொடுப்பனவு!**
அனைத்து Discover மோட்டார் சைக்கிள்களுடனும் பெறுமதிவாய்ந்த பேக், டீசேர்ட், ஹெல்மட் மற்றும் ஜக்கட் இலவசம்!!
2012 பெப்ரவரி 1 முதல் 29 வரை வழங்கப்படும்

DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
கம்பனி பதிவிலக்கம்: PB270
தா.பெ. 1909, 75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு 2. தொலைபேசி: 011-4700600. தொலைநகல்: 011-4700677. மின்னஞ்சல்: info@dpmco.com இணையத்தளம்: www.dpmco.com

RAVI BARNES | NDN

# ஆவரங்கால் இந்து, கே.கே.எஸ். இறுதியாட்டங்களில் வெற்றி



யாழ்ப்பாணம்,பெப்.28
மஞ்சி பிஸ்கட் நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் மஞ்சி கிண்ணத்துக்கான யாழ். மாவட்ட தேர்தல் தொகுதிகளுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் யாழ்ப்பாணம், கோப்பாய், நல்லூர் தேர்தல் தொகுதிகளின் விளையாட்டுக் கழகங்களுக்குமிடையிலான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியும், வட்டுக்கோட்டை, மானிப் பாய், காங்கேசன்துறை தேர்தல் தொகுதிக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் கே.கே.எஸ் இராணுவ அணியும் வெற்றி பெற்றுள்ளன. ஞாயிற்றுக் கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற யாழ்ப்பாணம், கோப்பாய், நல்லூர் தேர்தல் தொகுதிக்கு உட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி 25:22, 25:23, 25:22 என்ற செற் கணக்கில் வெற்றியீட்டியது.

வெள்ளிக்கிழமை சங்கானை சிவப்பிரகாச வித்தியாலய மைதானத்தில் இடம் பெற்ற வட்டுக்கோட்டை, மானிப் பாய், காங்கேசன்துறை தேர்தல் தொகுதிகளுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் கே.கே.எஸ் ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.கே.எஸ் இராணுவ அணி மோதிக் கொண்டது. 5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் கே.கே.எஸ் இராணுவ அணி 25:18, 25:14, 25:15 என்ற செற் கணக்கில் வெற்றியீட்டியது.
(த-23)

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், பெப்.28
யாழ்.மத்திய கல்லூரி யில் 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2005 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் உயர்தரக் கல்வி பயின்ற மாணவர்களின் அனுசரணையுடன், யாழ். சென்றல் விளையாட்டுக் கழகமும், யாழ். மாவட்டக் கூடைப்பந்தாட்ட சங்கமும் இணைந்து நடத்தும் யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் கே.இராசதுரை ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் இன்று திங்கட்கிழமை யாழ். இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் மின் ஒளியில் இடம்பெறவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் பங்குகொள்ளும் அணிகளின் விவரங்கள் வருமாறு:-

மாலை 6 மணிக்கு யாழ். பல்கலைக்கழக அணி எதிர் கே.கே.எஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

7 மணிக்கு கே.ஸி.ஸி.ஸி. "பி" அணி எதிர் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம் (ம-23)

## இன்றைய உதைபந்தாட்டம்

வலிகாமம், யாழ். உதை பந்தாட்ட லீக் ஆகியவற் றின் அனு சரணையுடன் ஏஎல் விளையாட் டுக் கழகம் நடத்தும் ஒன்பது பேர் பங்குகொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை அராலி ஏஎல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குகொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு-

பிற்பகல் 3 மணி
குருநகர் பாடுமீன் (நீலம்) எதிர் ஊரெழு றோயல் "பி" அணி.

மாலை 4 மணி
குருநகர் பாடும்மீன் (மஞ்சள்) எதிர் யாழ்.பல்கலைக்கழக அணி.

மாலை 5 மணி
ஊரெழு றோயல் "ஏ" அணி எதிர் கலைஒளி "பி" அணி. (ஒ-23)

## வலைப்பந்தாட்டம் இன்று மாலை

யாழ்ப்பாணம், பெப்.28
நல்லூர் கோட்ட மட்டப் பாடசாலைகளின் 15,17,19 வயதுப்பிரிவுப் பெண்கள் அணிகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
(த-23)

## பாரம்பரிய போட்டிகள் கைதடியில் ஞாயிறன்று

யாழ்ப்பாணம்,பெப்.28
"கெயர்" நிறுவனத்தின் அனுசரணையுடன் கைதடி வளர்மதி சமூக முன்னெடுத்தல் குழுவின் 3ஆம் ஆண்டு நிறைவு விழவை முன்னிட்டு பெண்களுக்கான பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் பல கடந்த ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு வளர்மதி மைதானத்தில் நடைபெற்றன.

மேற்படி போட்டியில் பெண்களுக்கான கயிறிழுத்தல், முட்டி உடைத்தல், தேங்காய் துருவுதல் உட்பட பல விளையாட்டுக்கள் அங்கு இடம் பெற்றன.

இப் போட்டியில் வளர்மதி சமூக முன்னெடுத்தல் குழுவுடன் இணைந்து கைதடி மேற்கு சரஸ்வதி சமூக முன்னெடுத்தல் குழு, கைதடி நவபுரம் சமூக முன்னெடுத்தல் குழு, நாவற்குழி சமூக முன்னெடுத்தல் குழு, நாவற்குழி உதயநகர் சமூக முன்னெடுத்தல் குழு என்பன இப்போட்டியில் கலந்து கொண்டன.

இந்த நிகழ்வில் நூற்றுக் கணக்கான பெண்கள் கலந்து கொண்டதுடன் விளையாட்டுப் போட்டிகளில் ஆர்வத்துடன் பங்கு கொண்டனர்.
(த-288)

ISUZU
இரு முன்னணியாளர்களின் உன்னதத்தில் உங்களின் முன்னேற்றத்தின் பயணத்தை தொடங்குங்கள்.
COMMERCIAL BANK



இலங்கையில் வர்த்தக டரக் வண்டி விற்பனையில் முன்னணியிலிருக்கும் இசுசு டரக் வண்டிகளின் ஏகமுகவர்களான சதொச மோட்டர்ஸ் பி.எல்.சி நிறுவனத்துடன் கொமர்ஷல் வங்கி இணைந்து, உலகிலேயே முதற்தர வர்த்தக டரக் வண்டியான இசுசு டரக் வண்டியை கொள்வனவு செய்வதற்காக சிறப்பு லீசிங் வசதிகளுடன் விஷேட வசதிகள் பல உங்களுக்கு பெற்றுத்தர காத்திருக்கின்றன.

SML இடமிருந்து
- ரு. 50,000/- வரையான விலைக்கழிவு.
- வேலைக்கூலி அறவிடப்படாத 06 இலவச சேவைகள்.
- வண்டிக்கு 40,000 கி.மீ. அல்லது 02 வருட உத்தரவாதம்.
- என்ஜினுக்கு 100,000 கி.மீ. வரையான உத்தரவாதம். (சதொச மோட்டர்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் நிர்வகிப்பிலிருக்க வேண்டும்)

ஜப்பானில் தயாரிக்கப்பட்ட இலங்கையின் 1தர டரக் வண்டி

COMMERCIAL BANK லீசிங் இடமிருந்து
- குறைந்தபட்ச தவணைக் கொடுப்பனவுகள்.
- உங்களின் வருமானத்திற்கேற்ற கொடுப்பனவு முறைகள்.
- சிறப்புக் காப்பீட்டு அனுகூலங்கள்.
- மற்றைய கொமர்ஷல் வங்கி நிதி வசதிகள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம்.

SML சதொச மோட்டர்ஸ் பிஎல்சி (PQ 105)
25, வொக்சோல் வீதி, கொழும்பு - 02. தொ.பே 011 4943500, 011 2331622, 011 2431568, 011 2432858, 011 4939187 தொலைநகல்: 0114 713663
உடனடி அழைப்புகள்: 0114 714077, 0112 327360,
கபில - 0779 419000 ரஞ்சித் - 0777 354155 சந்தன - 0777 420491
சம்பத் - 0777 420442 ஷங்கர் - 0779 667797
இணையதளம்: www.sathosamotorsplc.com

COMMERCIAL BANK
மேலதிக விபரங்களுக்கு : 011 2353333
இணையதளம் : www.combank.lk
நிபந்தனைகள் உண்டு

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அவனியின் மடியில்
☆
1950-04-05

அரனின் அடியில்
☆
2012-01-29

கடந்த 2012-01-29 இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம்

அமரர் ஞானகலாம்பிகை தேவானந்தம்

அன்புத் தாயே!
சிறுவயதிலே தந்தையை இழந்தோம்
தந்தையும் ஆனீரே, எம்மை
வையகத்தில் உயர்த்தி வைக்க
உதிரம் சிந்தினீரே.
அம்மா என்ற வார்த்தையின்
இலக்கணமே நீ தானே தாயே.
அம்மா என்றழைக்காத உயிருமுண்டோ
இவ்வுலகில்? நீ எங்கே சென்றாய்?
மாதம் ஒன்றாகிவிட்டது. ஓராயிரம்
சென்றாலும் மாறுமோ அம்மா உன்
நினைவலைகள்?



இன்று (2012-02-28) செவ்வாய்க்கிழமை நடைபெறும் எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக்கிரியைகள் காலை 5 மணிக்கு எமது இல்லத்துக்கு அருகில் அமைந்துள்ள மாவடி வைரவர் ஆலயத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து சபிண்டீகரண நிகழ்விலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு வருகை தரவும்.

என்றும் நினைவுடன் எச்சங்கள்
தே.கலாவினோதன் } பொறிவலர், இ.போ.ச.
தே.கமலக்கண்ணன் } பருத்தித்துறைச் சாலை.
தே.கமலவாசன், தே.கமலநாதன், தே.கமலச்சந்திரன்.

மாவடி,
அல்வாய் வடக்கு.

## சச்சினிடம் எப்படிச் சொல்வது?



ஒரு நாள் ஆட்டத்தில் இருந்து ஓய்வு பெறுவது குறித்து சச்சினிடம் பேச இந்திய அணியின் தெரிவுக் குழுவுக்குப் பயம் என்று ஆஸ்திரேலியாவின் முன்னாள் வீரர் டீன் ஜோன்ஸ் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் முத்தரப்பு ஒரு நாள் தொடரில் இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் சரியான ஆட்டத்தை வெப்படுத்தாததால் அவர் ஓய்வு பெற வேண்டும் என்ற கருத்து நிலவி வருகிறது.

இந்த நிலையில் ஆஸ்திரேலியாவின் டீன் ஜோன்ஸ் கூறுகையில், இந்திய அணியின் தெரிவுக்குழுவினர் சச்சினிடம் பேச பயப்படுகின்றனர். ஆஸ்திரேலிய ஒருநாள் அணியிலிருந்து முன்னாள் அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் நீக்கப்பட்ட உடனே, அவர் உடனடியாக ஒரு நாள் போட்டியிலிருந்து ஓய்வு பெற்றார்.

ஆனால் இந்தியாவிலோ சச்சினிடம் ஓய்வு பெறுமாறு தெரிவிக்க தெரிவுக் குழுவினருக்கு பயமாக உள்ளது-என்றார். (5)

## மோசடியில் கும்ளே

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் அனில் கும்ளே மீது மோசடி வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவர் மீது தொழிலதிபர் குமார் வி. ஜகிர்தார் என்பவர் பாரதிநகர் பொலிஸ் நிலையத்தில் மோசடி வழக்கு தொடுத்துள்ளார். இந்த வழக்கில் கூறப்பட்டுள்ளதாவது, தன்னுடைய முன்னாள் மனைவி சேதனா, அனில் கும்ளே ஆகியோர் எனது மகளின் கடவுச்சீட்டு புதுப்பப்பதில் முறைகேடு செய்துள்ளனர்.

எனது கையெழுத்தை கும்ளே முறைகேடாக அதில் போட்டுள்ளார் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த மனுவை விசாரித்த கர்நாடக உயர் நீதிமன்றம், இது குறித்து விசாரணை நடத்துமாறு காவல்துறைக்கு உத்தரவிட்டுள்ளது.

மேலும் இந்த தொழிலதிபர் குமார் வி. ஜகிர்தார் அனில் கும்ளே மனைவியின் முன்னாள் கணவர் என்பது குறிப்படத்தக்கது. (5)

# இறுதியில் யார்?



"மிக அரிதான வெற்றிவாய்ப்பை அடைவதற்காக இன்றைய ஆட்டத்தில் இந்தியா முழுத் திறமையையும் காட்டவேண்டிய இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது."



ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் சி.பி. முக்கோணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இலங்கை - இந்திய அணிகள் இன்று மோதுகின்றன.

ஏற்கனவே இத்தொடரின் இறுதிப்போட்டிக்கு ஆஸ்திரேலியா தகுதி பெற்று விட்டது. அதேவேளை போனஸ் புள்ளியுடன் இலங்கையும் முன்னிலையில் உள்ளது. எனவே மிக அரிதான வெற்றி வாய்ப்பை அடைவதற்காக இன்றைய ஆட்டத்தில் இந்தியா முழுத் திறமையையும் காட்ட வேண்டிய இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இன்றைய ஆட்டத்தில் இலங்கை அணியை போனஸ் புள்ளியுடன் வெல்ல வேண்டி உள்ளதுடன், மிகப் பெரிய ஓட்டச் சராசரியையும் பெற வேண்டிய நிலை இந்தியாவுக்கு உள்ளது.

சதத்தில் சதம் பெற வேண்டும் என்ற பதற்றம் சச்சினை தொற்றி உள்ளதால் அவர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியாமல் தவிப்பதை இந்தத் தொடர் முழுவதும் காணமுடிந்தது. அதே போன்று இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சேவாக்கும் தொடர்ந்தும் மோசமான ஆட்டத்தையே வெளிப்படுத்தி வருகிறார்.

இந்தத் தொடரில் அவர் 5 போட்டிகளில் விளையாடி முறையே 23, 10, 20, 0, 5 ஆகிய ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருக்கிறார். அத்தோடு இந்திய அணிக்குள் ஏற்பட்டுள்ள உள் முரண்பாடுகள் அதன் வெற்றிக்குத் தடையாக உள்ளன.

எனினும் இலங்கை அணி பலமாக உள்ளது.5 துடுப்பாட்ட வீரர்கள், 3 சகல துறை வீரர்கள், 2 வேகப் பந்து வீச்சாளர் என்று அதன் கட்டமைப்பு சிறப்பாக உள்ளது. தொடர்ச்சியாக 3 போட்டிகளில் வெற்றி பெற்றதால் மனோ ரீதியாகவும் இலங்கை அணி உத்வேகத்துடன் காணப்படுகிறது. அத்தோடு இந்தியாவுடன் தோல்வியுற்றாலும் கூட போனஸ் புள்ளியை வழங்காவிட்டால் நேரடியாக இறுதிக்குள் இலங்கை நுழைந்து விடும். மேலும் ஆஸியுடன் இன்னொரு போட்டியில் மோதும் வாய்ப்பு இலங்கைக்கு இருப்பதால் நெருக்கடி இல்லாமல் விளையாடக்கூடிய நிலை உண்டு. இன்றைய போட்டியே இறுதிப் போட்டிக்குள் நுழையும் அணியைத் தீர்மானிக்க உள்ளது. (ங)

## சண்டையில்லை நம்புங்கள்

இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் டோனி எனக்கும், சேவாக்கிற்கும் இடையே எந்த மோதலும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் இந்தியா, இலங்கை, ஆஸ்திரேலியா ஆகிய அணிகளுக்கு இடையேயான முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகின்றது. நேற்றைய ஆட்டத்துக்கு முன்பாக அணித்தலைவர் டோனி செய்தியாளர்களைச் சந்தித்தார்.

டோனி கூறியதாவது, இந்திய அணி வீரர்களிடையே பிளவு ஏற்பட்டுள்ளது என்று பத்திரிகைகள் தவறாக் செய்தி வெளியிட்டுள்ளன. அணியின் மூத்த வீரர்கள் குறித்து நான் தவறாக பேசியதாக கூறப்படுகிறது.

இந்த செய்தி எதுவும் உண்மையல்ல. இந்த மாதிரியான செய்திகள் வீரர்களுக்கிடையே தடுமாற்றத்தை உண்டாக்குகிறது.

மேலும் சேவாக்குடன் எந்த கருத்து வேறுபாடும் ஏற்படவில்லை. அணியில் உள்ள அனைவரும் ஒற்றுமையாக உள்ளோம். அணியில் ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை வைத்துள்ளோம். ஒற்றுமையுடன் விளையாடி ஆட்டத்தில் வெற்றி பெற வேண்டும் என்பது மட்டுமே குறிக்கோளாக உள்ளது என்று தெரிவித்தார். (5)



## லலித் மோடி; தொடரும் பிரச்சினை

ஐ.பி.எல். தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட லலித் மோடிக்கு இன்னொரு சிக்கல் காத்திருக்கிறது. இவர் மீது கிறிஸ் கெய்ர்ன்ஸ் தொடுத்த அவதூறு வழக்கு, வரும் மார்ச் 5ஆம் திகதி லண்டன் நீதிமன்றில் விசாரணைக்கு வருகிறது. நியூசிலாந்து அணியின் முன்னாள் சகலதுறை ஆட்டக்காரர் கிறிஸ் கெய்ர்ன்ஸ். சூதாட்ட புகார் காரணமாக இவரை ஐ.பி.எல். தொடரில் சேர்க்கவில்லை என லலித் மோடி முன்பு தெரிவித்தார். இதனைக் கேட்டு ஆத்திரமடைந்த கெய்ர்ன்ஸ், தன் மீதான களங்கத்தை போக்க, லண்டன் நீதிமன்றில் வழக்கு தொடுத்தார். இது குறித்து கெய்ர்ன்ஸ் வக்கீல் ஆன்ட்ரூ பிட்ச் ஹாலந்து கூறுகையில், ''வழக்கில் நானே ஒரு சாட்சி என்பதால் ஆஜராக முடியாது. எனக்குப் பதிலாக முன்னணி வக்கீலான ஆன்ட்ரூ கால்ட்காட் முன்னிலையாவார்.. கெய்ர்ன்ஸ் மீதான சூதாட்ட புகாரில் உண்மையில்லை. தனது பெயருக்கு ஏற்பட்ட களங்கத்தை போக்க விரும்புகிறார். நல்ல தீர்ப்புக் கிடைக்கும் என நம்புகிறோம்'' -என்றார்.

## விபத்தில் தப்பியது ராவல் எக்ஸ்பிரஸ்

*பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சொகைப் அக்தர் சென்று கொண்டிருந்த கார் விபத்துக்குள்ளானது. கார் கடும் சேதங்களுக்கு உள்ளான போதும் இவர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.*

*பாகிஸ்தான் பிரதமரின் செயலகத்துக்கு முன்புறம் உள்ள தடுப்புச் சுவரில் சொகைப் அக்தரின் கார் மோதி விபத்துக்குள்ளானது. இதில் அவர் காயமின்றி உயிர் தப்பினார்.*

*சொகைப் அக்தர் தனது வீட்டில் இருந்து ஹோட்டல் ஒன்றுக்கு சென்று கொண்டிருந்த போது பரதமரின் செயலகத்தை அடைந்ததும் கார் திடீரென கட்டுப்பாட்டை இழந்து தடுப்புச் சுவரில் மோதியது. இதில் காரின் முன்பகுதி சேதமடைந்தது. எனினும் சொகைப் காயமின்றி உயிர்தப்பினார். இதுதொடர்பாக பொலிசார் வழக்கு எதுவும் பதிவு செய்யவில்லை. சொகைப் அக்தர் வீடு திரும்ப அனுமதிக்கப்பட்டார். (5)*




## இங்கும் சதி

பங்களாதேஷ் பிரிமியர் லீக்கிரிக்கெட் போட்டியின்போது ஆட்ட நிர்ணய சதியில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் பாகிஸ்தான் பிரஜையொருவரை பொலிஸார் விசாரித்து வருவதாக பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் பாதுகாப்பு விவகார தலைமையதிகாரி மெஸ்பாஹுதீன் சேர்னியாபாத் தெரிவித்துள்ளார். ஆட்ட நிர்ணய சதி தொடர்பாக முன்னாள் வீரர் ஒருவரால் தான் அணுகப்பட்டதாக பங்களாதேஷ் அணியின் முன்னாள் தலைவர் மஷ்ரபி மோர்டஸா 3 வாரங்களுக்கு முன்னர் கூறியமை குறிப்பிடத்தக்கது.

# எங்களுக்கு மட்டும் ஏன் இப்படி?

சிட்னி ஒரு நாள் ஆட்டத்தில் சச்சினுக்கு 'ரன் அவுட்' கொடுக்கப்பட்டதும், டேவிட் ஹசிக்கு 'அவுட்' மறுக்கப்பட்டதும் பெரும் சர்ச்சையை கிளப்பியது. இந்த இரண்டு சம்பவத்திலும் இந்திய அணிக்கு தான் பாதிப்பு என்பதால், நடுவர்கள் மீது டோனி குறை கூறினார்.

நேற்று முன்தினம் இந்தியா துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த போது 7 ஆவது பந்து பரிமாற்றத்தை பிரட் லீ வீசினார். கம்பிர் ஒரு ஓட்டத்துக்காக அழைத்தார். மறுமுனையில் இருந்து சச்சின் ஓடி வரும் போது இடையில் புகுந்த பிரட் லீ தேவையில்லாமல் இடையுறு செய்தார். அதற்குள் வோர்னர் பந்தை நேரடியாக எறிய சச்சின் 'ரன் அவுட்டானார்'. இதற்கு சச்சின் அதிருப்தி தெரிவித்தார். ஆனால், களத்தில் இருந்த நடுவர்கள் பில்லி பவுடன், சைமன் டாபெல் ஆட்டமிழப்புக் கொடுத்தனர்.

முன்னதாக ஆஸ்திரேலியா துடுப்பெடுத்தாடிய போது, 24 ஆவது பந்து பரிமாற்றத்தை அஷ்வின் வீசினார். கடைசிப் பந்தில் ஒரு ஓட்டத்தை எடுக்க அழைத்தார் மத்யு வேட். மறுமுனையில் இருந்து டேவிட் ஹசி ஓடி வரும் போது, ரெய்னா பந்தை எறிந்தார். அதனை வலது கையால் தடுத்தார் ஹசி. 'ரன் அவுட்டில்' இருந்து தப்பிக்க, பந்தை கையால் வேண்டுமென்றே தடுப்பது கிரிக்கெட் விதிப்படி தவறு. இதையடுத்து டோனி முறையீடு செய்தார். நடுவர்கள் பில்லி பவுடன், சைமன் டாபெல் விவாதித்தனர். பின் மூன்றாவது நடுவர் சைமன் பிரையிடம் கேட்கப்பட்டது. ''தன் மீது பந்துபட்டு காயம் ஏற்படுவதைத் தவிர்க்க தான் ஹசி தடுத்தார். ஆட்டமிழப்பில்இருந்து தப்புவதற்காக அல்ல'' என்று கூறி ஆட்டமிழப்பை மறுத்தார் மூன்றாவது நடுவர். இதனை ஏற்க மறுத்த டோனி, நடுவர் பவுடனிடம் நீண்ட நேரம் விவாதித்தார். அப்போது ஹசி 17 ஓட்டங்கள் தான் எடுத்திருந்தார். நடுவர் தயவில் அரைசதம் கடந்து, இந்திய அணிக்கு நெருக்கடி கொடுத்தார்.

கடந்த 2008 இல் சிட்னி மைதானத்தில்ஹர்பஜன்,சைமண்ட்ஸ் இடையிலான 'குரங்கு' சண்டை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இப்போது 'ரன் அவுட்' பிரச்சினையைக் கிளப்பியுள்ளது.



"சிட்னி ஒரு நாள் ஆட்டத்தில் சச்சினுக்கு 'ரன் அவுட்' கொடுக்கப்பட்டதும், டேவிட் ஹசிக்கு 'அவுட்' மறுக்கப்பட்டதும் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. இந்த இரண்டு சம்பவங்களிலும் பாதிப்புக்குள்ளானது இந்திய அணியே என்கிறார் டோனி."

அணித்தலைவர் டோனி கூறுகையில், பிரட் லீயின் செயலில் நியாயமில்லை. இவர், சச்சினுக்கு இடையில் புகுந்து செல்ல வேண்டிய அவசியமில்லை. இதனால் கூடுதல் தூரம் ஓடி, 'ரன் அவுட்டாக' நேர்ந்ததால், சச்சின் மிகுந்த ஏமாற்றமடைந்தார். சம்பவத்தை பார்த்த நடுவர் பில்லி பவுடன் ஏதாவது சொல்லியிருக்க வேண்டும்.

டேவிட் ஹசியை பொறுத்தவரை அவர் பக்கம் அதிர்ஷ்டம் இருந்தது. தனது முகத்தில் பந்து படுவதை தடுப்பது போல காட்டினார். ஆனால், அவரது கை மிகவும் நீண்டு இருந்தது. பந்தை தடுத்தது நன்கு தெரிந்தது. இவருக்கு ஏன் ஆட்டமிழப்பு கொடுக்கவில்லை என்று தெரியவில்லை. இந்த இரண்டு சம்பவங்களிலும் இந்திய அணிக்குத் தான் பாதிப்பு அதிகம். கால்பந்து விளையாட்டில் வீரர்களின் கை, பந்தில் பட்டால் 'பெனால்டி' கொடுக்கப்படும். இதே போல பார்த்தால், டேவிட் ஹசி ஆட்டமிழப்புத்தான். மொத்தத்தில் நடுவர்களின் செயல்பாடு திருப்தி அளிக்கவில்லை.

இந்த ஆட்டத்தில் இந்திய அணி தோல்வி அடைந்ததற்கு மோசமான துடுப்பாட்டம் தான் காரணம். 20 பந்து பரிமாற்றத்துக்குள் 5 இலக்குகளை இழந்து விட்டோம். யாருமே 'போர்மில்' இல்லை - என்றார்.

(5)

# பிலிப் வெற்றிக் கிண்ணம் பல்கலைக்கழக அணி வசம்



யாழ்ப்பாணம் பெப்.28

டாக்டர் பிலிப் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணம் யாழ்.பல்கலைக்கழக அணி வசமானது.

யாழ்.உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கிடையே நடத்திய யாழ். உதைபந்தாட்ட லீக்கின் முன்னாள் தலைவர் அமரர் டாக்டர் ஜே.பி.சி பிலிப் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது .

இறுதியாட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. ஆட்டம் ஆரம்பித்தது முதல் இரண்டு அணிகளும் தமது ஆட்டத்தை வேகப்படுத்தி தமது அணிக்கான கோல்களைப் பெறுவதற்காகப் பல முயற்சிகள் மேற்கொண்ட போதும் அவை பயனளிக்கவில்லை

தொடர்ந்து இரண்டு அணியினரும் கோல்கள் பெறப் போராடினார்கள். இரு அணிகளின் பின்கள வீரர்களால் அந்த முயற்சிகள் தடுத்து நிறுத்தப்பட்டன.

ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டபோது இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறவில்லை

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமாகி 57ஆவது நிமிடத்தில் ஞான முருகன் அணி முதலாவது கோலினைப் பெற்றுக்கொண்டது. இதனால் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது.

பதிலுக்குக் கோல் போடுவதற்காக யாழ்.பல்கலைக்கழக அணியினர் தமது ஆட்டத்தை வேகப்படுத்தி எதிர் அணியினரின் கோல் பரப்பை முற்றுகையிட்ட வண்ணம் இருந்தனர்.

இதன் போது யாழ்.பல்கலைக்கழக அணியினருக்கு 60 ஆவது நிமிடத்தில் ஒரு தண்டனை உதை கிடைக்கப்பெற்றது. அதனைச் சரியான முறையில் பயன்படுத்தி அந்த அணி முதலாவது கோலைப்பெற்றது.

ஆட்ட முடிவில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோலினைப்பெற்றுக் கொண்டமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் யாழ்.பல்கலைக்கழக அணி. 3.1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக யாழ். பல்கலை அணி வீரன் பிரணவறூபனும், மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழக கோல் காப்பாளர் சயந்தனும் தெரிவாகினார்கள். சிறந்த கோல் போடும் வீரனாக மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக்கழக அணி வீரன் சிமித் தெரிவு செய்யப்பட்டார்.

பிரதம விருந்தினராக பிலிப் நேசிங் ஹோம் ,சன் றைஸ் மெடிக் கிளினிக் ஆகியவற்றின் பணிப்பாளர் டாக்டர் வேணுகாந்தன் கலந்து கொண்டு பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தார். (த-23)

## பெண்கள் கரப்பந்தாட்டம்



யாழ்ப்பாணம், பெப்.28

வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் 15,17,19 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான பெண் களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலைகளின் விவரங்கள் வருமாறு:-

**15 வயதுப்பிரிவு**

மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை (முதலாமிடம்) சென்- தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலை (இரண்டாமிடம்), உடுப்பிட்டி மகளிர் கல்லூரி (மூன்றாமிடம்)

**17 வயதுப்பிரிவு**

மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை (முதலாமிடம்) சென் தோமஸ் றோ.க பெண்கள் பாட சாலை (இரண்டாமிடம்), வட இந்து மகளிர் கல்லூரி (மூன்றாமிடம்).

**19 வயதுப்பிரிவு**

சென் தோமஸ் றோ. க. பெண்கள் பாடசாலை (முதலாமிடம்), நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் (இரண்டாமிடம்), வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி (மூன்றமிடம்). (த-23)

## யாழ். மத்திய கல்லூரி சம்பியன்

யாழ். கோட்டமட்டப் பாடசாலைகளின் 19 வய்துப் பிரிவு ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் யாழ். மத்தியகல்லூரி அணி சம்பியனானது. வெற்றி பெற்ற பாடசாலைகளின் விவரம் வருமாறு-

- யாழ். மத்திய கல்லூரி- முதலாமிடம்.
- சென்.ஜோன்ஸ் கல்லூரி- இரண்டாமிடம்.
- நாவாந்துறை ஆர்.சி வித்தியாலயம்- மூன்றாமிடம்.

(த-23)

## வலைபந்தாட்டப் போட்டியில் வென்ற பாடசாலைகள்

யாழ்ப்பாணம், பெப்.28

யாழ். கோட்ட மட்டப்பாடசாலைகளின் 15,17,19 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் விவரங்கள் வருமாறு

**15 வயதுப்பிரிவு**

- வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை (முதலாமிடம்)
- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி (இரண்டாமிடம்)
- யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடம் (மூன்றாமிடம்)

**17 வயதுப்பிரிவு**

- வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை (முதலாமிடம்)
- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி (இரண்டாமிடம்)
- யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடம் (மூன்றாமிடம்)

**19 வயதுப்பிரிவு**

- யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் (முதலாமிடம்)
- வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை (இரண்டாமிடம்)
- சென்.ஜேம்ஸ் மகளிர்வித்தியாலயம். (மூன்றாமிடம்).

(த-23)

## மரண அறிவித்தல்



### திருமதி வீரசிங்கம் மகேஸ்வரி

அத்தியடியைப் பிறப்பிடமாகவும், அச்செழுவை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் மகேஸ்வரி நேற்றுமுன்தினம் (26.02.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் வீரசிங்கத்தின் அன்பு மனைவியும், மனோகரி, மனோரஞ்சிதம், குலோத்துங்கன், சித்திரசேனன், வைத்தீஸ்வரன் (லண்டன்), சத்தியதேவி, மனோகரன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயும், அரசகேசரி, தருமராசா, புவனேஸ்வரி, விஜயலட்சுமி, சுமதி (லண்டன்), சிவபாலன், கஜேந்தினி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமியும், மயூரன், ராஜ்குமார், மதனராஜ், ரஜி, சசீலன், விபூசன், சிந்துஜன் (லண்டன்), அனுஜ் (லண்டன்), சங்கீஜன் (லண்டன்), ஆருஜன் (லண்டன்), சர்மி, சங்கீர்த்தன், ஜகர்வினி (டென்மார்க்), விஷானுஜா (டென்மார்க்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 27.02.2012 திங்கட்கிழமை அச்செழுவிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப. 2 மணி யளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் விலங்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் ெல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்செழு பொயிட்டி,
நீர்வேலி.

தகவல்:-
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### நல்லதம்பி செல்வராசா

(ஆங்கமம் செல்வராசா ஸ்ரோஸ் ,
உடுவில் செல்வராசா ஸ்ரோஸ்
ஆகியவற்றின் உரிமையாளர்)

சங்கானை வல்லை றோட்டை பிறப்பிடமாகவும் தற்போது மலேசியாவில் வசித்த வருமான நல்லதம்பி செல்வராசா நேற்று (27.02.2012) திங்கட்கிழமை மலேசியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பத்மா வதியின் அன்புக்கணவரும், தேவராசா (ராசன்), தயாபரன் (தயா), ஈஸ்வரன் (ஈசன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, செல்லத்துரை, தங்கேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கௌரி, தாரணி, மகாலட்சுமி ஆகியோரின் அன்பு மாமனும், வைசாலி, தசாங்கன், கிருஸ்னி, ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.02.2012) புதன் கிழமை மலேசியா கோலாலம்பூரில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
0060129743768

தகவல்:-
ராசன், தயா, ஈசன்
(பிள்ளைகள்)



### சுப்பிரமணியம் இராசம்மா

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், யோகபுரம், 'மல்லாவி' 5ஆம் யுனிற்றை வசிப்பிடமாக வும் கொண்ட சுப்பிரமணியம் இராசம்மா நேற்று (27.02.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற விஸ்வநாதர் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2012) செவ்வாய்க்கிழமை மு.பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாவி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 511, 5ஆம் யுனிற்,
யோகபுரம், மல்லாவி.

தகவல்:-
முத்துராசா சதாசிவதேவி
(மகள்)

# ஜெனிவாவில் வியாழன் மரியா ஒரேரோ விசேட உரை

ஜெனிவா, பெப்.28

ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான பிரேரணையை எந்த நாடு கொண்டுவரும் என்ற விடயத்தில் பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ள நிலையில், அமெரிக்காவின் ஜனநாயகம் மற்றும் பாதுகாப்பு, மனிதஉரிமைகளுக்கான துணைச் செயலாளர் மரியா ஒரேரோ அம்மையார் மார்ச் முதலாம் திகதி ஜெனிவா மாநாட்டில் விசேட உரையொன்றை நிகழ்த்தவுள்ளார் என நம்பகரமாகத் தெரியவருகின்றது.

இலங்கைக்கு எதிரான பிரேரணையைத் தாம் ஆதரிக்கப்போவதாக அமெரிக்கா வெளிப்படையாக அறிவித்துள்ளநிலையில், வெள்ளை மாளிகையின் முக்கிய ராஜதந்திரியான மரியாவின் ஜெனிவா உரை இலங்கை விவகாரத்தில் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தும் என அரசியல் ஆய்வாளர்கள் எதிர்வு கூறியுள்ளனர்.

ஜெனிவாத் தொடரில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றபடவுள்ளதாகக் கூறப்படும் தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பரிந்துரைகளைக் கொழும்பு அரசு நடைமுறைப்படுத்துகின்றதா என்பதைக் கண் காணிப்பதற்கு சர்வதேச அரங்கில் வெளிவிவகார நடவடிக்கைகளைக் கையாள்வதில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற ராஜதந்திரி ஒருவரை ஐ.நா.மனித உரிமைகள் பேரவை நியமிக்கவேண்டும் என அவர் தமதுரையில் வலியுறுத்திக் கூறவுள்ளார் என்று அறியமுடிகின்றது.

மேற்குலகை மையப்படுத்தி இந்த ராஜதந்திரியின் தேர்வு இடம்பெறவேண்டும் என்ற கோரிக்கையையும் மரியா இதன்போது விடுப்பார் என ராஜதந்திர மட்டத்திலான தகவல்கள் தெரிவிக்கின்றன. பெரும் பாலும் அவர் அமெரிக்காவைப் பிரதிநிதித்துவப்படுத் தும் அதிகாரியாகவே இருக்கவேண்டும் என்பதே வாஷிங்டனின் நிலைப்பாடாக இருந்து வருகின்றது என்றும் உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் தெரி விக்கின்றன.

அதேவேளை, இலங்கை விவகாரம் தொடர்பில் நிறைவேற்றப்படும் தீர்மானத்தின் பரிந்துரைகளை அந்நாட்டு அரசு எவ்வாறான வழிமுறைகளைக் கையாண்டு நடைமுறைப்படுத்துகின்றது என்பதைக் கண்காணித்து, அது தொடர்பிலான ஆய்வறிக்கையை ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக்கு இலங்கை விவகாரம் தொடர்பில் நியமிக்கப்படவுள்ளார் எனக் கூறப்படும் ராஜதந்திரி சமர்ப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனையையும் அவர் அமெரிக்காவின் சார்பில் முன்மொழிவார் என்றும் தெரிய வருகின்றது.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 19 ஆவது கூட்டத்தொடர் நேற்று ஆரம்பமானது. இலங்கை விவகாரத்தை இம்முறை அமெரிக்கா கையில் எடுத்து மும்முரமாகச் செயற்படுவதால் கொழும்புக்கு எதிரான பிரேரணை நிச்சயம் நிறைவேற்றப்படும் சாத்தியப்பாடுகளே நிலவுகின்றன என அரசியல் ஆய்வாளர்கள் எதிர்வு கூறுகின் றனர்.

அதேவேளை,அண்மையில் இலங் கைக்கு விஜயம் செய்த, ஜனநாயகம் மற்றும் பாதுகாப்பு, மனித உரிமைகளுக்கான அமெரிக்காவின்-துணைச் செயலாளர் மரியா ஒரேரோ தலைமையிலான வெள்ளை மாளிகையின் ராஜதந்திரிகள் குழு, வெளி விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உட்பட முக்கியஸ்தர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(ஒ-சி)




*ஜெனிவாவில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக எடுக்கப்படும் தீர்மானத்தை எதிர்த்து யாழ்ப்பாணத்தில் நடத்திய பேரணியின்போது......*

## காசேதான் கடவுளடா

யாழ். போதனா வைத்தியசாலையில் காது, மூக்கு, தொண்டை பகுதியில் சேவையாற்றும் வைத்தியர் ஒருவர் அங்கு சிகிச்சைக்காகச் சென்ற நோயாளி ஒருவருக்கு அங்கு சத்திரசிகிச்சை செய்வதாயின் எதிர்வரும் 2015 ஆம் ஆண்டுதான் செய்ய முடியும் என்று கூறியுள்ளார். ஆனால் அவர் நடத் தும் தனியார் சிகிச்சை நிலையத்துக்கு குறித்த நோயாளி சென்றபோது அன்றே இரவு வேளையில் சத்திரசிகிச்சை செய் துள்ளார். அதற்காக ரூபா 62 ஆயிரம் பெற்றுள்ளார். (ங)

**வங்கிகளுக்கான வேலை வாய்ப்பு விண்ணப்பம்**

Application for the Post of Trainee Staff Assistant
(BOC, Sampath)

முடிவுத்திகதி : 04.03.2012

ARRUL GLOBAL EXPRESS
T.P : 0212226113

No. 01,

**தேவை**

யாழ். நகரிலுள்ள முன்னணி நிறுவனம் ஒன்றுக்கு அலுவலக உதவியாளர் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். மாதாந்தம் 7500/= வேதனம்.

மே.பா- உதயன் வி. இ. 4226,
365, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**யாழ். நகரில் இயங்கும் பிரபல அச்சகத்துக்கு ஆள்கள் தேவை**

- அச்சக முகாமையாளர் (முன் அனுபவம் எதிர்பார்க்கப்படுகிறது)
- தட்டெழுத்தாளர்
- தட்டெழுத்தாளர் பயிலுனர்
- ஓவ் செற் இயந்திர இயக்குனர்
- ஓவ் செற் இயந்திர இயக்குனர்-பயிலுனர்

சிபார்சு செய்யக்கூடிய இருவரின் பெயர்களுடன் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.

மே/பா உதயன் விளம்பரஇல/4227
365,கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



மக்கள் வங்கியின் முன்னாள் உதவிப் பொது முகாமையாளரும் (வடமாகாணம்) தற்போதைய பீப்பில்ஸ் லீசிங் கம்பனி PLC யில் முகாமையாளராகக் கடமையாற்றும் திரு. T.K. ஆனந்தராஜா அவர்களின் பாசமிகு சகோதரி

**திருமதி தனலட்சுமி அம்மா சிவசுப்பிரமணியம்**

அவர்கள் கடந்த (25.02.2012) சனிக்கிழமை இறைபதமடைந்ததையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*ஊழியர்கள்*
**பீப்பில்ஸ் லீசிங் கம்பனி PLC**
*யாழ்ப்பாணம்.*

## இலங்கை சார்பாக சர்வகட்சிக் குழுவை அனுப்பியிருக்கலாமாம்

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்கு முகங்கொடுப்பதற்கு சர்வக்கட்சி குழுவொன்றை ஜெனிவாவுக்கு அனுப்பியிருக்கவேண்டும்-என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும், அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.


சர்வதேச அழுத்தங்களுக்கு பதிலளிப்பதற்கு அமைச்சர்கள் அடங்கிய குழுவை அனுப்பியிருக்கக் கூடாது என்றும், நாடு மீது அக்கறையுள்ளவர்களை உள்ளடக்கிய சர்வகட்சி குழுவொன்றையே அனுப்பியிருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

எமது நாட்டுக்கு எதிராக சர்வதே அச்சுறுத்தல்கள் அதிகரித்த வண்ணமுள்ளன. எனவே, நாட்டைக் காப்பதற்கு மக்கள் அணிதிரளுங்கள் என அரசு அழைப்பு விடுக்கின்றது எனத் தெரிவித்துள்ள சஜித் எம்.பி.,

இது எமது தாய் நாடு. அரசியல் சுதந்திரத்தை பாதுகாத்துக் கொள்வதற்கான உரிமை, கடப்பாடு எம் அனைவருக்கும் உள்ளன என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

(ங-சி)

## மரண அறிவித்தல்



### ஜேக்கப் ஆரோக்கியநாதர் (தம்பிநாதர்)

*(யாழ். கொமர்ஷல் வங்கி, இளைப்பாறிய உத்தியோகத்தரும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் வெளிக்கள உத்தியோகத்தரும்)*

நவாலியைப் பிறப்பிட மாகவும், 21/4, அடப்பன் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஜேக்கப் ஆரோக்கியநாதர் (தம்பிநாதர்) நேற்று (27.02.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜேக்கப் - பிலிப்பாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மிக்கேல் - மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், திருமதி திரேசம்மாவின் அன்புக் கணவரும், அன்ரன் (கனடா), யேவதி (வைத்தியர், பள்ளிமுனை - மன்னார்), மகேந்திரன், புனிதவதி (கனடா), திலகவதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், டெய்சி (கனடா), யேசுதாஸ் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), அஞ்சலா (சட்டத்தரணி, கொழும்பு), உதயம் (கனடா), ஜெகநாதன், கொன்சேகா, யசிந்தா (ஜேர்மனி), பேசி (பாகிஸ்தான்), கிறேசியன் (ஆஸ்திரேலியா), ஜொயிஸ் (பிலிப்பைன்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், டோறாபிலிப் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), திரேசம்மா (ராணி), காலஞ்சென்றவர்களான குருசுமுத்து, அந்தோனிப்பிள்ளை, ஆசீர்வாதம், இராயப்பு, அக்னஸ் - அன்ரனி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கனடாவில் வசிக்கும் விஜிதா (பொறியியலாளர்), பிரியா, அஞ்சலினா, ஜேக்கப், ஜெகதீஸ் (P.H.D., CHemisty, German University), மயுறேஸ் (ஆசிரியர், யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி), தயானி (மருத்துவபீட மாணவி, யாழ். பல்கலைக்கழகம்), டாணியா, யூட் (கனடா), ஈபன் (கனடா), வினோதா (ஜேர்மனி), மோகனா (தாதி) ஆகியோரின் பாசமிகு பேரனும், நீற்றாவின் அன்பு மைத்துனரும், ஏஞ்சலா (ஆசிரியர் - கேம்பிரிஜ் பாடசாலை- கொழும்பு), ஆனந்தன் (நோர்வே), சுகந்தன் (வீரகேசரி வத்தளைகிளை - முகாமையாளர்), வசந்தன் (கனடா) ஆகியோரின் பெரியப்பாவும், அழகக்கோன், சின்ராசா, அஞ்சலா (லண்டன்), அருட் சகோதரி மரியகொறற்றி (Sis. Of charity), காலஞ்சென்றவர்களான அருட்சகோதரி அசும்தீனா (AC) ஆகியோரின் சித்தப்பாவும், ஆஸ்திகன் (ஜேர்மனி) பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.02.2012) புதன்கிழமை அவரது இல்லத்தில் மாலை 3.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்துக்காக யாழ். புனித மரியன்னை பேராலய சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

21/4, அடப்பன் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### கணபதிப்பிள்ளை கந்தையா

மறுவன் புலோவைப் பிறப்பிடமாகவும் நுணாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கந்தையா 26.02.2012 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கம் தம்பதியினரின் சிரேஸ்ட மகனும் காலஞ்சென்றவர் களான கைலாயபிள்ளை - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் சிவமலரின் அன்புக்கணவரும், கனகசபை (ஓய்வு பெற்ற அதிபர்), அமரர் சதாசிவம் மற்றும் காசிப்பிள்ளை, அமரர் நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், அமரர் குணரத்தினம் மற்றும் சிவஞ்சோதி, பரஞ்சோதி, திருமலர், சிவஞானமலர், சிவேந்திரமலர், சிவனேசமலர், மகேஸ்வரி, மரகதவள்ளி, ஆகியோரின் மைத்துனரும், சக்தீஸ்வரி (கனடா), கமலேஸ்வரி, சிவனேஸ்வரி (சுவிஸ்), ஞானேஸ்வரி (லண்டன்), ஸ்ரீகணேசன் (ஆசிரியர் யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்), ஸ்ரீகுமார் (கனடா), ஆகியோரின் பாசமிகு தந்தையும், கணேஸ்வரி (நியூஸ்லாந்து) பெரிய தந்தையும், இரகுதேவன் (கனடா), தெய்வயோகநாதன், கோபிராஜ் (சுவிஸ்), கருணாகரன் (லண்டன்), சிவசுபைதா (ஆசிரியை யா/சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி), சத்தியா (கனடா), இளங்கோ (நியூஸ்லாந்து) ஆகியோரின் மாமனும், வாகினி, பவதாரணி, அஜந்தன், தர்சிகா, சாருஜா, அனுராஜ், கீர்தன்ராஜ், அகிஷன், அபிஷன், அமீரா, அருள்வாரணன், ஜனகன், ஸ்ரீநிஷா, அரவிந்த் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை புதன்கிழமை (29.02.2012) மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.6.ஆடியபாதம்பிட்டி ஒழுங்கை,
நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி

தகவல்:
ஸ்ரீகணேசன் (மகன்)

# ஜெனிவாவில் இலங்கைக்கு பெரியளவில் அழுத்தங்கள் வரா!

## போலி நாடகங்களை அரங்கேற்றாதீர் என்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, பெப்.28

47 நாடுகள் பங்கேற்கும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகப் பெரும் அழுத்தங்கள் ஏதும் வரமாட்டா. எனவே, மக்களைத் திரட்டி போலி நாடகங்களை அரங்கேற்றாமல் தமிழர் பிரச்சினை உட்பட நாட்டிலுள்ள அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

போர் நிறைவடைந்தகையோடு அரசு கட்டாயம் செய்துமுடிக்கவேண்டிய சில கடப்பாடுகளைத் தவறவிட்டதன் காரணமாகவே இன்று சர்வதேசம் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி மஹிந்தவை போர்க் குற்றவியல் நீதிமன்றத்துக்குத் தூக்கிக்கொண்டு போகப்போகிறார்கள் என்ற மாயையை நாட்டில் உருவாக்கி கடந்தமுறை தேர்தலை இலக்குவைத்து மக்களைத் திரட்டியது அரசு. இம்முறை மக்களைத் திரட்டியே மக்கள் ஆர்ப்பாட்டங்களை முடக்குவதற்கு முயற்சிக்கின்றனர் என்ற குற்றச்சாட்டையும் சோமவன்ஸ அமரசிங்க முன்வைத்தார்.

ஜெனிவாத் தொடர் நேற்று ஆரம்பமான நிலையில் அதுகுறித்து கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இன்று அரசுக்கு எதிராக உள்நாட்டில் நாலாபுறமும் ஆர்ப்பாட்டங்கள் வெடித்து வருகின்றன. இதனால் ஆட்டம் கண்டுள்ள ஆட்சிப் பீடம் மக்களின் ஆர்ப்பாட்டங்களைத் திசைதிருப்புவதற்கு முயற்சிக்கின்றது. ஜெனிவாத் தொடரை மிகைப்படுத்திக் கூறிவிட்டு நாட்டு மக்களை அரசுக்கு ஆதரவாகப் போராட வைப்பதற்கு முயற்சிக்கின்றது.

47 நாடுகள் பங்கேற்கும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகப் பெரும் அழுத்தங்கள் ஏதும் வரமாட்டா. அந்த மாநாட்டை அரசு மிகைப்படுத்திக் கூறுகின்றது.

எனவே, நாட்டில் மக்களைத் திரட்டிப் போராடுவதை விடுத்து அரசு உள்நாட்டிலுள்ள அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

போர் நிறைவடைந்த பின்னர் உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி, வடக்கில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தி, தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கண்டு உள்நாட்டிலுள்ள அடிப்படைப் பிரச்சினைகளை அரசு தீர்த்திருந்தால் இன்று சர்வதேசம் எமது நாட்டு விவகாரத்தில் மூக்கை நுழைக்காது. சர்வதேச தலையீடுகளுக்கு அரசே வழிவகுத்துள்ளது.

நாட்டின் பொருளாதாரம் அபிவிருத்தியடைந்து செல்வதாக ஆட்சியாளர்கள் கூறுகின்றனர். அப்படியானால், வாழ்க்கைச்சுமை தாங்கமுடியாது மக்கள் ஏன் வீதியில் இறங்கிப் போராடவேண்டும். சர்வதேச நாணய நிதியத்துடன் நாட்டின் பொருளாதார முறைமையை மஹிந்த அரசு தாரைவார்த்துக் கொடுத்துள்ளது - எனக் குறிப்பிட்டார் ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க. (ஒ-சி)

## புலிக்கொடியுடன் ஜெனிவாவில் பேரணி

கொழும்பு, பெப்.28

ஜெனிவா நகரிலுள்ள ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகத்துக்கு அருகில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர். பிரிட்டன் மற்றும் அமெரிக்க தேசிய கொடிகளையும் அவற்றுடன் இணைத்து புலிக்கொடியையும் அவர்கள் ஏந்தியிருந்தனர்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 19 ஆவது கூட்டத்தொடர் நேற்று ஜெனிவாவில் ஆரம்பித்த நிலையில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ங-10)

## ஜெனிவா பிரேரணை அவசியமற்றது

»1 தாகக் கூறப்படும் தகவல்கள் எந்த வித ஆதாரமுமற்ற , மிகைப்படுத்திக் கூறப்பட்ட கதைகள்தான். போரின் போது கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை கணிக்க இலங்கை உரிய பொறிமுறைகளை கையாள்கிறது.

நல்லிணக்க ஆணைக்குழு பல ஆக்கபூர்வமான பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. அதனடிப்படையில் இறந்தவர்கள் பற்றியும், பொது மக்களின் உயிரிழப்புகளில் இராணுவத்துக்கு பங்கிருக்கிறதா என்பது குறித்து ஆராயவும், உரிய நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டன.

இந்த விடயங்களில் கையாளப்படும் எந்தவொரு உள்ளகப் பொறிமுறையும், கலாசாரம், பாரம்பரியம் மற்றும் வரலாறு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும்.

ஆகவே இந்த விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கைக்கு உரிய கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். அதில் வெளியார் தலையீடு எதுவும் இருக்கக் கூடாது. அதைவிடுத்து மனித உரிமைகள் பேரவையில் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவது அநாவசியமான விடயம்- என்றார் அமைச்சர் மஹிந்த சமரசிங்க. (ங-10)

## ஜெனிவா பிரேரணைக்கு நாடெங்கும் எதிர்ப்பு அரசின் ஏற்பாட்டில் பெரும் ஆர்ப்பாட்டங்கள்

»1 இலங்கை அரசுக்கு இக்கட்டானதொரு காலகட்டத்தில் நடைபெறும் இந்தத் தொடர் ஆர்ப்பாட்டங்கள் நாட்டில் கலவரத்திற்கு வித்திடும் என முன்கூட்டியே வதந்திகள் பரப்பப்பட்டதால், மக்கள் அச்சத்தில் வீட்டுக்குள்ளேயே முடங்கியிருந்தனர் என்றும், பாடசாலைகளில் மாணவர்கள், ஆசிரியர்களின் வரவில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது என்றும் எமது பிராந்திய செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அரசுக்கும், ஜனாதிபதிக்கும், இராணுவத்துக்கும் ஆதரவு தெரிவிக்கும் வகையில் வசனங்கள் எழுதப்பட்டிருந்த சுலோக அட்டைகளை ஏந்திய மக்கள், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் கொடும்பாவியை எரித்தும், அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளுக்கு எதிராக கோஷம் ஏழுப்பிய வண்ணமும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதேவேளை, பிரிட்டன், அமெரிக்கத் தூதரகங்களுக்கு முன்பாகவும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் உட்பட முக்கியமான சில சிங்கள அமைப்புகள் இந்த ஆர்ப்பாட்டங்களை ஒழுங்குசெய்திருந்தன.

**யாழ்ப்பாணத்தில்...**

ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவை மாநாட்டில் கொண்டுவரப்படவிருந்த இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானத்தைக் கண்டித்து நேற்று யாழ்ப்பாணத்திலும் இரண்டு ஆர்ப்பாட்டப் பேரணிகள் இடம்பெற்றன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இ.அங்கஜன் தலைமையில் ஓர் அணியும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சில்வேஸ்ரி அலன்ரின் தலைமையில் இன்னொரு அணியும் இப்பேரணிகளை நடத்தின. பின்னர் இரு அணிகளும் ஒன்றாக இணைந்து ஆஸ்பத்திரி வீதியூடாகப் பஸ் நிலையம் வரை ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

வடமாகாண ஆளுநர் சந்திரசிறியும் ஆர்ப்பாட்டத்தில் பிரசன்னமாகியிருந்தார்.

வேலைவாய்ப்புத் தொடர்பான பதிவுகளை மேற்கொள்ள வருமாறு அழைக்கப்பட்ட பட்டதாரிகளும் கடைசி நேரத்தில் ஊர்வலத்தில் கட்டாயப்படுத்தி இணைக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

**முல்லைத்தீவில்...**

முல்லைத்தீவிலும் அரசதரப்பின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றது. இந்தப் பேரணியில் கலந்து கொள்வதற்காக முல்லைத்தீவு பகுதி மீனவர்கள் கடற்தொழிலுக்குச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

ஏனைய பகுதிகளில் இருந்து மக்கள் பலவந்தத்தின் பேரிலேயே ஆர்ப்பாட்டத்தில் இணைக்கப்பட்டனர்.

**கிளிநொச்சியில்...**

கிளிநொச்சியிலும் ஏட்டிக்குப் போட்டியாக இரண்டு ஆர்ப்பாட்டங்கள் அரசுக்குச் சார்பாக நடத்தப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கிளிநொச்சி அமைப்பாளர் கீதாஞ்சலி ஆகியோர் பங்கேற்ற பேரணி கிளிநொச்சி செயலகத்திலிருந்து ஏ-9 பிரதான வீதி வரை சென்றது.

இதில் பெருமளவில் அரச ஊழியர்களே கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொள்ளாத அரச ஊழியர்களுக்கு சம்பளமற்ற லீவு வழங்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் மிரட்டியதாலேயே அவர்கள் இதில் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இன்னொரு பேரணி இளைஞர்களுக்கான நாளை அமைப்பின் ஏற்பாட்டில் கூட்டுறவுச் சபை அலுவலகத்திலிருந்து கிளிநொச்சி செயலகம் வரை நடத்தப்பட்டது.

கிளிநொச்சியில் வயல் வேலைக்காகவும் ஏனைய பணிகளுக்காகவும் வீதிகளில் சென்ற மக்களை அதிகாலை 5.30 மணியிலிருந்து படையினரின் உதவியோடு இடைமறித்து பஸ்களில் ஏற்றப்பட்டு, ஆர்ப்பாட்டத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

பஸ் நிலையத்தில் காத்திருந்தவர்களும் ஆர்ப்பாட்டத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இவ்வாறு பலவந்தமாக அழைத்துச் செல்லப்பட்ட மக்கள் பிற்பகல் 2 மணியளவிலேயே விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை சில பகுதிகளில் ஆசைவார்த்தை காட்டியும் ஆர்ப்பாட்டத்துக்கு மக்கள் அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

கோணாவில், வட்டக்கச்சி போன்ற பகுதிகளில் வீடு வீடாகச் சென்ற இராணுவத்தினர், மக்களின் பெயர் விவரங்களைப் பதிந்ததுடன் இலவசமாக சூரியகலம் வழங்கப்படவுள்ளதாகவும் அதனைப் பெற்றுக்கொள்ள வருமாறும் கூறி மக்களை ஆர்ப்பாட்டத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

எனினும் இரண்டு ஆர்ப்பாட்டங்களிலும் வெறும் 200 பேர் வரையிலேயே கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களும் ''நாங்கள் இந்தப் பேரணிக்கு விரும்பி வரவில்லை. ஆனால் இதற்கு வராவிட்டால் எங்களுக்கோ எங்கள் குடும்பத்துக்கோ ஏதாவது நேர்ந்துவிடுமோ என்ற அச்சத்தில்தான் கலந்து கொண்டோம்'' என்று தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோரின் எண்ணிக்கையை அதிகரித்துக் காட்டுவதற்காக படையினர் சீருடைகளைக் கழற்றி எறிந்துவிட்டு சாரங்களை அணிந்து கொண்டு மக்களோடு மக்களாக இதில் பங்கேற்ற வேடிக்கையும் நிகழ்ந்துள்ளது.

**வவுனியாவில்**

வவுனியாவில் கண்டி வீதியில் அமைந்துள்ள விகாரைக்கு முன்பாக ஆரம்பமான பேரணி, பசார் வீதிக்குச் சென்று மணிக்கூட்டு வீதியை வந்தடைந்தது.

பேரணியில் பௌத்த பிக்குகள், அரச ஊழியர்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

**மட்டக்களப்பில்...**

ஏறாவூர், காத்தான்குடி, ஓட்டமாவடி, மட்டக்களப்பு நகர் ஆகிய இடங்களில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

இதில் பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள், முஸ்லிம் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். பேரணியின் முடிவில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் கொடும்பாவி எரிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்களுக்கு அரசதரப்பினர் உணவு, குடிபானம், போக்குவரத்து உட்பட முக்கியமான சில சலுகைகளைச் செய்துகொடுத்துள்ளனர் என்று அறியமுடிகின்றது. (சி-ங-6-288)

## கிளிநொச்சிவாசி கைது

கிளிநொச்சி, பெப்.28

கிளிநொச்சி, விவேகானந்த நகர்ப் பகுதியில் ஒருவர் இராணுவப் புலனாய்வாளர்களால் விசாரணைக்காக அழைத்துச்செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று இரவு 8 மணியளவில் குறித்த நபரது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இராணுவப் புலனாய்வாளர்கள் தம்மை அறிமுகப்படுத்தி அவரை அழைத்து சென்று கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் ஒன்றைப் பதிவு செய்துவிட்டு கூட்டிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நோர்வே அகதிகள் புனர்வாழ்வு மையத்தில் வாகன சாரதியாகக் கடமையாற்றும் விவேகானந்தநகர் மேற்கைச் சேர்ந்த பன்னீர்ச்செல்வம் பாலரூபன் (வயது-30) அழைத்து செல்லப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

## மஹிந்த – இந்தியத் தூதுவர் அலரி மாளிகையில் பேச்சு

»1 இந்தியத் தூதுவரிடம் எடுத்துரைத்தார் என்று அறியமுடிந்தது.

இலங்கை விடயத்தில் இந்தியா மிகவும் பொறுப்புடன் செயற்படுமெனவும், பிராந்தியத்தில் அமைதியின்மை உருவாக்கப்படுவதற்கான எந்த முயற்சிகளுக்கும் இந்தியா ஆதரவு வழங்காதெனவும் இந்தியத் தூதுவர் இந்தச் சந்திப்பின்போது தெரிவித்திருக்கிறார் என நம்பகரமாக அறியமுடிந்தது.(ஒ-சி)

## சமாதான காலத்தில் பொதுமக்களை கடத்தியது துணை ஆயுதக் குழுக்களே

»1 சுட்டிக்காட்டினர். அத்துடன் யாழ். மாவட்டத்தில் தமிழ் மக்களின் பாரம்பரியங்களைப் பேணிக்காக்கின்ற வகையில் அருங்காட்சியகம் எதுவுமில்லை. எனவே தமிழர்களின் வாழ்வியலைப் பேணிக்காக்கின்ற வகையில் அருங்காட்சியகம் அமைக்கப்பட வேண்டும்.

ஏ-9 பிரதான வீதியூடாக பயணம் செய்கின்றபோது ஓமந்தையில் நள்ளிரவு 12 மணிக்கு பேருந்தினால் இறக்கி மக்கள் பொதிகளுடன் நீண்ட தூரம் நடக்கவிடப்படுகின்றனர். இத்தகைய சிரமங்கள் நீக்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டது. கலந்துரையாடலில் பங்கு பற்றிய பொலிஸாரிடம் இது தொடர்பில் ஆராயுமாறு பேராசிரியர் ரஜீவவிஜயசிங்க பணித்தார்.

யாழ்.-கொழும்பு தனியார் பேருந்து வழி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு ஒரு லட்சம் ரூபா வரையில் அறவிடப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. இலங்கையின் எந்தப் பாகத்துக்குமான வழி அனுமதிப்பத்திரம் இவ்வாறான பெருந்தொகைப் பணம் அறவிடப்படுவதில்லை என்று தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதாக பேராசிரியர் குறிப்பிட்டார்.

மேலும் தற்போது குடாநாட்டில் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளது. தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லும் மாணவிகளுடன் மாணவர்கள் வீதிகளில் நின்று சேஷ்டை விடுகின்றனர். இதனைத் தடுக்க பொலிஸார் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் இதன் போது கூறப்பட்டது.

இறுதியாக யாழ். குடாநாட்டின் பெரும்பாலான பகுதிகள் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இதுவரையில் விடுவிக்கப்படாமல் உள்ளன. அத்துடன் பொதுமக்களின் வீடுகளில் இராணுவத்தினர் தங்கியிருப்பதால் மக்கள் அகதி முகாம்களில் தங்கியிருக்கின்றனர்.

மேலும் இராணுவத்தினர் சிவில் நடவடிக்கைகளிலும் தலையிடுகின்றனர். இவ்வாறு சமூக மட்டப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். அதற்கு, சரியான தரவுகள் இன்றி இப்படிக் கூறவேண்டாம். எந்த இடங்களில் பிரச்சினை உள்ளது குறிப்பிட்டுச்சொல்லுங்கள் - என்று பேராசிரியர் வினவினார்.

யுத்தம் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் நிறைவுற்ற போதும் இதுவரையில் நிரந்தரத் தீர்வு எதுவும் எட்டப்படவில்லை. மற்றும் காணாமற்போனவர்கள் தொடர்பில் எதுவும் தெரியாது என்று சமூகமட்டப் பிரதிநிதிகள் கவலை தெரிவித்தனர்.

சமாதான காலத்தில் காணாமற்போனவர்களுக்கும் இராணுவத்தினருக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை. அதேபோன்று இவர்கள் விடுதலைப் புலிகளாலும் கடத்தப்படவில்லை. மாறாக துணை ஆயுதக் குழுக்களாலேயே பழிவாங்கல்களுக்காகக் கடத்தப்பட்டனர்.

இதனைவிட இறுதி யுத்தம் இடம்பெற்ற காலத்தில் வைத்தியசாலைகள் மீது இராணுவத்தினர் தாக்குதல் எதனையும் நடத்தவில்லை என்றும் தெரிவித்தார். (ங-5)

# ஐ.நா அதிகாரிகள் - நீதித்துறையினர் யாழ்ப்பாணத்தில் நேற்றுச் சந்திப்பு

## சிறுவர் நீதிமன்றம் தொடர்பாக

யாழ்ப்பாணம், பெப். 28

போர் முடிவடைந்த பின்னர் யாழ். மாவட்டத்திலுள்ள சிறார்களின் நிலைமை தொடர்பாகவும் சிறுவர் நீதிமன்றச் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாகவும் ஐ.நா சபை அதிகாரிகள் நீதித்துறையினருடன் நேற்றுக் கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடல் யாழ். சிறுவர் நீதிமன்றில் யாழ். நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜா தலைமையில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது. இதில் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன், ஐ.நா அதிகாரிகள் 6பேர் மற்றும் உள்ளூர் அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது, போர் முடிவுக்கு வந்த பின்னர் சிறார்கள் மீதான துஷ்பிரயோகம் அதிகரித்துள்ளது. குடும்பத்தில் உள்ள சக உறவினர்களாலும் மற்றும் சிறுவர் நிலையங்களில் உள்ள சிலராலும் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய துஷ்பிரயோகங்கள் தொடர்பாக நீதிமன்றில் முறைப்பாடு செய்யப்படுகின்றன. பெரும்பாலும் இடம்பெயர்ந்த பிள்ளைகள் தற்போது தங்கியிருக்கும் இடங்களிலேயே இத்தகைய பிரச்சினை அதிகமாகக் காணப்படுகிறது. இத்தகைய துஷ்பிரயோகங்களை பொலிஸாருக்குத் தெரிவிக்கச் சிறுவர்கள் பயப்படுவார்கள்.

எனினும் பிரத்தியேகமான சிறுவர் நீதிமன்றில் இது தொடர்பான விசாரணை நடைபெறும்போது சிறுவர்கள் பயமின்றி தமது நிலைமைகளைக் கூற முடியும். என்று நீதிவான் மா.கணேசராஜா அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டினார்.

''துஷ்பிரயோகம் செய்யப்படும் சிறுவர்கள் மட்டுமன்றி குற்றச் செயல்களில் ஈடுபடும் சிறுவர்களையும் இந்த நீதிமன்றில் முற்படுத்தி உரிய விசாரணை மேற்கொள்ள முடியும். குற்றஞ்செய்த சிறுவர்களை நன்னடத்தைப் பாடசாலைகளில் வைத்துச் சீராக நெறிப்படுத்த முடியும். நன்னடத்தை அதிகாரிகள் அதனை உரிய முறையில் செயற்படுத்த வேண்டியவர்களாகின்றனர். சிறார்களின் மாற்றம் இந்த அதிகாரிகளில்தான் தங்கியுள்ளது'' என்று யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் தெரிவித்தார்.

''வடபகுதியில் 31 சிறுவர் இல்லங்கள் பதிவு செய்யப்படாமல் இயங்குகின்றன. அவற்றை ஒவ்வொன்றாக மூடி விடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். அறிவுறுத்தல் வழங்கிய பின்னரும் உரிய முறையில் சீர் செய்யப்படாத இல்லங்கள் இவ்வாறு மூடப்படும். அங்குள்ள சிறுவர்களைப் பெற்றோருடன் இணைப்பதற்கும் தவறின் வேறு இல்லங்களுக்கு மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது'' என்று வடமாகாண நன்னடத்தை பணிப்பாளர் ரி.விஸ்வரூபன் தெரிவித்தார்.

சிறுவர்கள் இயல்பான, மகிழ்வான சூழலில் சிறுவர் நீதிமன்றச் செயற்பாடுகளில் பங்கேற்பதற்காக அங்கு சிறுவர் பூங்கா உள்ளிட்ட தேவையானவற்றை அமைத்துத் தருவதாக ஐ.நா அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் சிறுவர் நீதிமன்ற நீதிவான்கள் வெளிநாடுகளுக்குச் சென்று பயிற்சி பெறவும் அதற்கான செலவை வழங்கவும் நடவடிக்கை எடுப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் ஐ.நாவின் கென்யாவுக்கான நிரந்தர வதிவிடப்பிரதி நிதி மச்சாரியா கமா தலைமையில் ஐ.நாவின் அன்ரிக்குவாவுக்கான பிரதி நிரந்தரப் பிரதிநிதி கொன்றோட் செசில் ஹீன்ரே, பின்லாந்தின் ஐ.நாவுக்கான நிரந்தர குழுவின் ஆலோசகரும் பிரதித் தலைவருமான நினா றோட்ஸ்ரொம், எஸ்டோனியாவின் ஐ.நாவுக்கான இரண்டாவது நிரந்தரச் செயலர் கரின் கெளப், கஸகஸ்தானுக்கான ஐ.நாவின் பிரதி நிரந்தரச் செயலர் சுமபயேவ், யுனிசெப்பின் இலங்கைப் பிரதிநிதி நிஷாஹொனசனி மற்றும் இலங்கைச் சட்ட உதவி ஆணைக்குழுவின் அதிகாரி பிரதிப் பொலிஸ்மா அதிபர் நீல் தளுவத்த, யாழ். தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி சமன்சிகேரா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(ங-4)

ஆடும்வரை ஆடுங்கள்...



கொழும்பு நாலந்தா கல்லூரியில் நவீனமயமாக அமைக்கப்பட்ட விளையாட்டரங்கை ஜனாதிபதி நேற்று திறந்துவைத்து கிரிக்கெட் ஆட்டத்தில் ஈடுபட்டார்.

# கிளி. கோணாவிலிலும் துப்பாக்கிமுனைக் கொள்ளை

## நகைகள், பணம் சூறையாடப்பட்டது.

கிளிநொச்சி, பெப். 28.

கிளிநொச்சி, கோணாவில் பகுதி யூனியன்குளத்தில் நேற்று அதிகாலை ஆயுததாரிகள் பெறுமதிமிக்க நகைகள், பணம் போன்றவற்றை சூறையாடியுள்ளனர்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் கையில் துப்பாக்கிகள் மற்றும் கத்தி, பொல்லுகளுடன் 4 பேர் கொண்ட கும்பல் கோணாவில் பகுதி யூனியன்குளம் கிராமத்தில் உள்ள வீட்டுக்குச் சென்றுள்ளனர். குறித்த வீட்டின் பெண்கள் கதவைத் திறக்க மறுத்ததை அடுத்து கதவை உடைத்துக்கொண்டு அந்தக் கும்பல் பிரவேசித்துள்ளது.

அந்தப் பெண்ணின் நெற்றியில் துப்பாக்கியை வைத்து சத்தம் போட வேண்டாம் எனக்கூறி, வீட்டில் இருந்த குறித்த பெண்ணின் தாய், தந்தை இருவரையும் கொள்ளையர் துப்பாக்கி முனையில் மிரட்டியுள்ளனர்.

தொடர்ந்து அவர்கள் வீட்டினை சல்லடைபோட்டுத் தேடுதல் நடத்தி, அங்கிருந்து 10 ஆயிரம் ரூபா பணம் மற்றும் 3 பவுண் நகையையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

குறித்த பெண் கணவன் இல்லாது தனித்து வாழ்வதுடன் தையல் தொழில் மூலம் வரும் வருமானத்தை வைத்தே அந்தக் குடும்பத்தை நடத்துகின்றார். அரச சார்பற்ற நிறுவனம் அமைத்துக் கொடுத்த தற்காலிக பாதுகாப்பற்ற வீட்டிலேயே குறித்த குடும்பம் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை முதல் கொள்ளைச் சம்பவத்தை முடித்துக்கொண்ட அந்தக் கும்பல் அப்பகுதியில் உள்ள மேலும் மூன்று வீடுகளுக்குச் சென்று துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி 6 பவுண் நகைகள் மற்றும் 35 ஆயிரம் பணத்தையும் அபகரித்துச் சென்றுள்ளது.

முதல் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்ற வீட்டுக்கு 500 மீற்றர் தொலைவில் இராணுவ முகாம் அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஒ-323-06)

# பாத்திக்குள் பாம்பு

சாவகச்சேரி, பெப்.28

பனங்கிழங்கு பிடுங்குவதற்காக பனம் பாத்தியினை துப்புரவு செய்த வயோதிபர் பாம்பினால் கடியுண்டார்.

இந்தச் சம்பவம் நேற்று கச்சாய் தெற்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த அம்பலவானர் வேலுப்பிள்ளை (வயது-65) என்பவரே பாம்பினால் கடியுண்டவராவார். இவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

# பெற்றோரின் கவனயீனத்தால் பறிபோனது குழந்தை உயிர்

மஸ்கெலியா கிளன்டில் தோட்டத்தைச் சேர்ந்த சேவஸ்வரன் - ரேணுகா தம்பதியினர், தமது பொறுப்பற்ற செயலால் ஒருவயதுப் புதல்வனைப் பறிகொடுத்துள்ளனர்.

இத்தம்பதியினர் நோயுற்ற தமது புதல்வன் சதுர்சனை கடந்த 10 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

இந்த ஒருவயதுப் பாலகனை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய வைத்திய அதிகாரி திருமதி ஆயிலா வெத்தசிங்க, குழந்தைக்கு அம்மைநோய் இருப்பதாகக் குறிப்பிட்டு தனிக்கட்டிலை ஒதுக்கி, பாதுகாப்பாகப் பராமரிக்குமாறு பணிப்புரை வழங்கிவிட்டுச் சென்றுள்ளார்.

எனினும், பெற்றோர் அன்று காலை 10 மணிக்கே விடாப்பிடியாக சுய விருப்பத்தின் பேரில் வைத்தியசாலையிலிருந்து தமது புதல்வனை வீட்டுக்குக் கொண்டுசென்றுள்ளனர்.

எனினும், கடந்த 17 தினங்களுக்குப் பின்னர் நேற்று திங்கட்கிழமை பெற்றோர் அக்குழந்தையை சுகவீனம் காரணமாக மீண்டும் அதேவைத்தியசாலையில் சேர்ப்பதற்குக் கொண்டு வந்துள்ளனர். ஆனால், குழந்தை இறந்தநிலையில் காணப்பட்டமையால் குழந்தையின் சடலம் பிரேத அறையில் வைக்கப்பட்டு நாவலப்பிட்டி சட்டவைத்திய அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

# யாழ். மாவட்டத்தில் இரண்டாமிடம்

சாவகச்சேரி, பெப்.28

யாழ். மாவட்டத்தில் உள்ள 24 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இடையே 2011ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட திறமையான செயற்பாடுகள் தொடர்பான போட்டியில் தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் கோப்-சிற்றி கடைகளின் திறமையான செயற்பாடுகளுக்காகவும் தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கோப்- சிற்றிகள் இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆங்கிலம்
ஒரு மணிநேர இலவச கற்கைநெறி
29.02.2012 புதன்கிழமை
1 : காலை 8.00 – 9.00   2 : காலை 10.00 – 11.00
3 : மாலை 3.00 – 4.00   4 : மாலை 5.00 – 6.00
அனுமதி இலவசம், பயிற்சி புத்தகம் இலவசம்
பயிற்சிக்கான சான்றிதழ் இலவசம்
(பாடசாலை மாணவர்கள் பயிற்சியில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்)
இந்த விளம்பரத்துடன் வகுப்புக்கு வரும் அனைவருக்கும்
ஆங்கில கற்கைநெறிக்கான CD முற்றிலும் இலவசம்
MyWay English
ஸ்ரேசன் வீதி, நகரசபை அருகில்
சாவகச்சேரி
077 33 63 456

## மரண அறிவித்தல்

*திருமதி ஜோண் சின்னத்துரை செபமாலைமுத்து (முத்து)*

கோப்பாயைப் பிறப்பிடமாகவும், புதுக்குடியிருப்பு 9 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜோன் சின்னத்துரை- செபமாலைமுத்து நேற்று (27.02.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சில்வேஸ்திரி-சூசானம் தம்பதியரின் அன்பு மகளும், ஜோண் சின்னத்துரையின் அன்பு மனைவியும், மேரி கிறிஸ்ரீனா (ஆசிரியர், கொக்கிளாய் மகா வித்தியாலயம்), ஜோண்சன், காலஞ்சென்ற தர்மராசா (வின்சன்) ஆகியோரின் அன்புத் தாயும், வ.அருளானந்தம் (அருள்), வி.சஜீனா (கிளிநொச்சி பொது வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியும், ஆன்சன், அருண், கீங்கீசன், ஜோண்சிகா, ஜெரின், ரன்சுவிசன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நாளை (29.02.2012) புதன்கிழமை மு.ப.10 மணிக்கு இராமநாதபுரம் புனித ஆரோக்கியநாதர் ஆலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து நல்லுடல் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

இராமநாதபுரம் ஜோண்சன் (மகன்)

தேவை (Phone)
யாழ். நகரில் இயங்கிவரும் பிரபல்யமான கணினி நிறுவனத்துக்கு கையடக்க தொலைபேசி (Phone) திருத்துநர் தேவை.
நேரில் வருபவர்களுக்கு முதல் உரிமை.
தொடர்புகள்: 0212224865, 0750698608.

முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனமான
திசைக்காட்டி (பிறைவேற்) லிமிற்றெட்
தனது முதலாவது அகவையைப் பூர்த்தி செய்வதை
முன்னிட்டு வழங்கும்
A/L மாணவர்களுக்கான விசேட புலமைப் பரிசில்
★ 25 மாணவர்கள் யாழ். மாவட்டம் முழுவதுமாக சேர்த்துக் கொள்ளப்படுவர். மாதாந்த உதவு தொகை வழங்கப்படும்.
★ குடும்பநிலை, கல்வித் தகைமை கவனத்தில் எடுக்கப்படும்.
★ அதிபர் வழங்கும் சிபாரிசுடன் மேலதிகமாக கிராம அலுவலரின் உறுதிப்பத்திரமும் அவசியம்.
★ தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டால் அன்றேல் சிபார்சு வழங்கப்பட்டால் உடனடியாக விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய இறுதிநாள்
(02.03.2012) வெள்ளிக்கிழமை
நிர்வாக இயக்குநரின் செயலாளர்
திசைகாட்டி (பிறைவேற்)லிமிட்டட்
37,சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி யாழ்ப்பாணம்.
021 2219016.
கிளை : 115A, இரத்தினபுரம் வீதி கிளிநொச்சி:- 0212285544
மன்னார், வவுனியா:- 0773454304
மெல்போன் அவுஸ்திரேலியா:- 0061412479209

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.02.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.